

ஆசிரியர் உரை

## தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொள்வது எந்த நன்மையும் பயக்காது

## Comparing Ourselves With Ourselvs Leads To No Good

Louis Rushmore

சிலவேளைகளில், சபையிலே, நம்மைச் சுற்றியிருக்கும் மக்களிலே, பிரசங்கியார்கள்தான் அதிகப் பெருமை பிடித்தவர்களாக இருக்கிறார்கள். எந்தவகையில் பார்த்தாலும், சுவிசேஷப் பிரசங்கிகள் சாதனையாளர்களாகவும், ஒரு செயலை துவக்குகிறவர்களாகவும், தலைவர்களாகவும் இருக்கிறார்கள். இதை சபை அங்கத்தினர்களின் நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது பிரசங்கியார்கள் தான் உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள். பிரசங்கியார்களுக்கு சபையார்களை விட தேவனுடைய வார்த்தையைப் பற்றிய அறிவு பெரும்பாலும் அதிகம். அதே போல் எந்த மூப்பர்களின் கீழ் அவர்கள் சேவை செய்கிறார்களோ அவர்களைவிட அதிகமாகக் கூட வேதாகம அறிவு இருக்கலாம். இது அவர்களை மற்ற சகோதரர்களைவிட விசேஷித்தவர்களாக அல்லது தங்களை உயர்வானவர்களாக உணரச்செய்யும்.

மேலே சொல்லப்பட்ட குணாதிசயங்களை உடைய ஒரு பிரசங்கியார் தன்னை மற்ற பிரசங்கியார்களோடு ஒப்பிடும்போது மிகப்பெருமையாக அகங் காரத்துடன், தனக்கும் மற்ற பிரசங்கியார்களுக்கும் இடையே உள்ள வித்தி யாசத்தைக் காட்டுவார். அவர் இயற்கையாகவே மற்றவர்களுடைய கல்வி அனுபவத்தைவிட தன்னுடைய கல்வி அனுபவம் மேலானது என்னும் எண்ணத்திற்குள் விழுந்துபோகிறார். இதன் காரணமாக, சபை அங்கத்தினர் களிடமிருந்து தங்களை சற்று தூரப்படுத்திக்கொள்ளும் போக்கு பிரசங்கியார் கள் மத்தியில் நிலவுவதில் ஆச்சரியம் எதுவுமில்லை. இவர்கள் இப்படி கல்வித் தரத்தையும், அனுபவ அறிவையும் வேறுபடுத்திக் காட்டுவதனால் சபைக்குள் ஏற்படும் பகைமை உணர்வை மற்றவர்களால் உணரமுடியும்.

குறைவான கல்வித்தகுதியும், குறைந்த அனுபவமும் உள்ள சக பிரசங் கியார்கள், இது போன்ற காரியங்களாலும், தங்களைப் பற்றிய மோசமான சுயமதிப்பின் காரணமாகவும் அதிகமான கல்வித்தகுதியும், அதிக அனுபவமும்

உள்ள பிரசங்கியார்கள் மீது கசப்புணர்வைக் கொண்டிருப்பார்கள். மேலும், இவர்கள் தாழ்வு மனப்பான்மையுடன் நடந்துகொள்வார்கள். பிரசங்கியார் களிடையே காணப்படும் இதுபோன்ற கசப்புணர்வுகளால் இயேசு கிறிஸ்துவின் நாமம் தூஷிக்கப்படுகிறது, ஆத்துமாக்கள் சேதப்படுத்தப்படுகிறார்கள், புதிய ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவதில்லை.

இருந்தாலும், இதுபோன்ற கண்ணோட்டங்கள் கிறிஸ்துவின் நிமித்தம் செய்யப்படும் காரியங்களுக்கும், தேவனுடைய ராஜ்யமாகிய சபைக்கும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி இதுபோன்ற மனநிலைகள் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும், அவருடைய சபையிடமிருந்தும் நம் கவனத்தைச் சிதறடித்துவிடும். நாம் தேவனுடைய ஊழியக்காரர்களாக எவைகளையெல்லாம் செய்கிறோமோ அவைகளெல்லாம் கர்த்தருடைய சபையின் வளர்ச்சிக்காகவும், விசுவாசிகளுடைய ஆவிக்குரிய நலனுக்காகவும் இருக்கவேண்டும். இது சிலருக்கு ஆச்சரியமாகக் கூட இருக்கலாம். ஏனென்றால், விசுவாசிகள் மத்தியில் காணப்படும் முறையீடுகள், முறுமுறுப்புகள் ஒன்றும் புதிதானதல்ல, எப்படியெனில் அதன் தொடக்கம் முதல் நூற்றாண்டாயிருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல், தங்களைத் தாங்களே ஒப்பிட்டுக் கொண்ட முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைக் கண்டித்தார். ஆகிலும் தங்களைத் தாங்களே மெச்சிகொள்ளுகிற சிலருக்கு நாங்கள் எங்களைச் சரியாக்கவும் ஒப்பிடவும் துணியமாட்டோம் ; தங்களைக் கொண்டு தங்களை அளந்து கொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக் கொள்ளுகிற அவர்கள் புத்திமான்களல்ல ( II கொரி. 10 : 12 ). மேலும், பவுல் இவ்வகையான பாவச் செயல்பாடுகள், கர்த்தருடைய சபையின் எண்ணிக்கை அடிப்படையிலான வளர்ச்சியையும், ஆவிக்குரிய வளர்ச்சியையும் தடுக்கிறது என்று போதித்தார்.

மேலும், இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை. பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்திற்குரியவர் களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா? ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவ னென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்திற்குரியவர்களல்லவா? பவுல் யார்? அப்பொல்லோ யார்? கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர்தானே. நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச்செய்தார். அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும். மேலும்,

நடுகிறவனும் நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள்; அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான்.நாங்கள் தேவனுக்கு உடன்வேலையாட்களாயிருக்கிறோம்; நீங்கள் தேவனுடைய பண்ணையும், தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள் (I கொரி. 3:1-9).

சகோதரர்கள் மத்தியில் தேவையற்ற போட்டி, பொறாமைகளைப் பார்க்கும் போது வேடிக்கையாயிருக்கிறது. நாமெல்லாரும் ஒரே அணியில் இருந்து, ஒரே நோக்கத்திற்காக, கிறிஸ்துவுக்குச் சேவை செய்து கொண்டிருக்கிறோம். அது உண்மையாயிருக்குமானால் யார் கர்த்தருக்காக அதிகம் வேலை செய்ய முடியும் என்று போட்டி போடுவது தேவையற்ற, முக்கியமற்ற ஒன்றாக இருக் கிறது. ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் தேவனுக்காக முடிந்தவரை வேலை களைச் செய்யவேண்டும். நாம் ஒரே சரீரத்தின் அவயவங்களாயிருக்கிறோம். மேலும், நம் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான திறமைகள், மற்றும் வித்தியாச மான எதிர்பார்ப்புகள் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிட்டோமா? (I கொரி. 12 :12-25; ரோமர் 12:4-5; மத். 25:14-30)

நாமெல்லாரும் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாயிருக்கிறபடியால், கிறிஸ்துவுக்குள் சகோதரராயிருக்கிறோம்.இந்நாட்களில் நம் முற்பிதாவாகிய ஆபிரகாமின் வார்த்தைகளை நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளவேண்டும். ஆபிரகாம் லோத்தை நோக்கி : எனக்கும் உனக்கும் என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர் (ஆதி. 13:8, 9).

சுவிசேஷப் பிரசங்கியார்களான நாம் போதகர்களாக மட்டுமல்ல கிறிஸ்து வுக்கு வேலையாட்களாகவும் இருக்கிறோம் (II கொரி. 6 : 1). மேலும், நாம் சத்தியத்திற்கும் உடன் வேலையாட்களாக இருக்கிறோம் (III யோவான் 8). நம் கல்வி சாதனைகள் மற்றும் அனுபவங்களிலுள்ள வித்தியாசங்கள், நாம் அர்ப் பணித்திருக்கும் மாபெரும் வேலையோடு ஒப்பிடும்போது அவைகள் முக்கிய மற்றவைகளாகவே இருக்கின்றன. தேவனுடைய வார்த்தையின்படி தேவனுக்கு ஊழியம் செய்ய நம்மெல்லாருக்கும் பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இருந்தபோதிலும், நம்முடைய பொறுப்புகள், நம் கல்வித்தகுதி, திறமைகள், வாய்ப்புகள் போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டு மாறுபடுகின்றன. கர்த்தருடைய ஊழியத்தைப் பொறுத்தவரை நம் எல்லோருக்கும் பொதுவான பொறுப்புகள் உண்டு. ஆனாலும், கல்விவாய்ப்பு மற்றும் பொருளாதார வாய்ப்புகள் நமக்கு அதிகமாகக் கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட, இவைகளைக் குறைவாகப் பெற்றிருப்பவர்களைவிட அதிகப் பொறுப்பு நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலனாகிய பவுல் கூடாரம் பண்ணுகிற தொழில் செய்து கொண்டிருந்தார் (அப் . 18 : 3). அவர் தன்னைப் பற்றியும் சுவிசேஷ வேலை செய்து கொண்டிருந்தவர்களைப் பற்றியும் சொல்லும்போது, **எங்கள் கைகளினாலே வேலை செய்து** என்று சொல்லுகிறார் (I கொரி . 4 : 12). **நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னோடேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலை செய்தது** (அப் . 20 : 34 , 35) என்றும், I கொரி . 9 : 13, 14 – ம் வசனங்களில் தனக்கும் குடும்பம் இருந்திருந்தால் தன் குடும்பத்திற்காக உதவியைப் பெறும் உரிமை உண்டு, ஆனாலும், அப்படி உதவியை சபையிலிருந்து பெற்றுகொள்ள தான் விரும்பவில்லையென்றும், அவர் தன்னைப் போஷித்துக்கொள்ள வேலை செய்ததாகவும் சொல்லுகிறார் (I தெச 2 : 9 ; II தெச . 3 : 8).

முதல்நூற்றாண்டில் தேவதாசர்களுக்கான பயிற்சியும் வித்தியாசமாக இருந்தது. அப்போஸ்தலனாகிய பவுல் பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்களில் நன்கு தேர்ச்சிபெற்றவராக இருந்தார் ( அப். 22 : 3 ). அவர் தன் வயதுள்ளவர்களைப்பார்க்கிலும் வேதவாக்கியங்களில் தேறினவராக இருந்தார் (கலா. 1 : 14). சில பிரசங்கியார்கள் தங்கள் வீட்டிலேயே வேதவாக்கியங்களைக் கற்றுக் கொண்டார்கள் ( II தீமோ 1 : 15 ) ; இன்னும் சிலர், அனுபவமிக்க பிரசங்கியார்களால் பயிற்றுவிக்கப்பட்டார்கள் (அப். 3 ; 15 : 37, 40 ; கலா. 2 : 1 ; தீத்து 1 : 4). முதல்நூற்றாண்டில் அனுபவமிக்க பிரசங்கியார்கள் அல்லது அதிகம்படித்த பிரசங்கியார்கள் யாரென்று பார்க்கும்போது, அது சுவிசேஷப் பிரசங்கியார்களுக்கு உடன் வேலையாட்களாக இருந்தவர்கள்தான் (II கொரி. 8 : 23 ; பிலேமோன் 24).

பொதுவாக, மனித இயல்பு, தங்களை உயர்வாக எண்ணி மற்றவர்களைத் தாழ்வாக எண்ணுவதாகும். ஆனால், அது முதிர்ச்சியின் அடையாளமுமல்ல, கிறிஸ்தவ வழியுமல்ல. **ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக** (பிலி . 2 : 3 , 4). தேவதாசர்களாகிய நாம் ஒருவருக்கொருவர் ஒப்பிட்டுப் பார்ப்பதை விட்டுவிட்டு, மற்றவர்களை நம்மைவிட மேலானவர்களாக எண்ணினால்தான் கிறிஸ்துவின் ராஜ்யம் விரிவடைய வேண்டிய அளவுக்கு விரிவடையும். கர்த்தருடைய சபை பிரிவினைகளுக்கான ஓர் இடமல்ல, அதிலும் குறிப்பாக பிரசங்கியார்கள் தங்களை மற்ற பிரசங்கியார்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும் இடமுமல்ல. தேவன் நம்மை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சேவையில் அதிகமதிகமாய் ஆசீர்வதிப்பாராக! ✞

# தாகமாயிருக்கிறேன்

# *I Thrist*

E.Z.S. Rajanayagam

இப்பூவுலகில் மனிதர்களாகப் பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கும் எல்லாருக்குமே பொதுவானது என்று சில காரியங்கள் உண்டு. இப்படிப் பொது வானவைகள் என்று சொல்லப்படுகிறவைகளுக்கு விதிவிலக்காக யாருமே இருக்க முடியாது. அரசனாக இருந்தாலும், ஆண்டியாக இருந்தாலும் அதுதான் உண்மை. அப்படி பொதுவானவைகள் என்று சொல்லப்படுபவைகளில் பிரதா னமாக பசியையும், தாகத்தையும் குறிப்பிடலாம். இந்தப் பசியும், தாகமும் இப் பூவுலகில் மானிடராய்ப் பிறந்து வாழ்ந்த தேவமைந்தனாகிய நமதாண்ட வரையும் விட்டு வைக்கவில்லை. இப்படி பசி, தாகம் போன்றவை எல்லாருக்கும் பொதுவானவைகளாயிருக்கிறபடியால் ஒருவன் பசியாயிருக்கிறேன் என்று சொல்வதிலோ அல்லது தாகமாயிருக்கிறேன் என்று சொல்வதிலோ ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை!

ஒருவேளை, தாகமாயிருக்கிறேன் என்று ஒருவன் சொல்வதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லையென்பது உண்மையாக இருந்தாலும், ஒருவகையில் தாகமாயிருக்கிறேன் என்ற நமது தலைப்புக்கான வார்த்தை, கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக, கருத்துச் செறிவுமிக்க வார்த்தையாகவும், கவனிக்கத்தக்க வார்த்தையாகவும், பேசப்பட்டு வரும் வார்த்தையாகவும், பிரசங்கிக்கப்படும் வார்த்தையாகவும் மாறியிருக்கிறது.சிலுவை வார்த்தைகளில் இது ஐந்தாவது என்று பெரும்பான்மையான கிறிஸ்தவ சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

தாகம் என்று சொல்லும்போது, வேலை அலுப்பின் நிமித்தமாகவும், பிரயாணக் களைப்பின் நிமித்தமாகவும் நமக்கெல்லாம் உண்டாகிறதே அந்தத் தாகம் அல்ல அது. அங்கே இயேசுவானவருக்கு ஏற்பட்ட தாகம் வழக்கத்திற்கு மாறானது; முற்றிலும் வேறுபட்டது. சிலுவையில் அவருக்கு ஏற்பட்ட தாகம், அவருடைய நாவை உலரப் பண்ணி வரண்டுபோகச் செய்த தாகம். நாவு அங்கும் இங்கும் பிறழ முடியாமல் வாயோட ஒட்டிக்கொண்ட தாகம். வார்த்தைகளை வெளிக் கொணர முடியாமல் தடுமாறச் செய்த தாகம். பேசுவது இன்னதென்று புரியாமல் செய்த தாகம். இப்படிப்பட்ட தாகம் அவருக்கு

இருந்தபடியால் தான். நமதாண்டவர் தாகமாயிருக்கிறேன் என்று சொன்னார்.

இயேசுவானவர் சிலுவையில் பேசினவைகளை, சிலுவை வார்த்தைகள் என்று சொல்வோரும் உண்டு. சிலுவைச் செய்தி என்று சொல்வோரும் உண்டு. ஒருவேளை சிலுவையில் பேசின ஒவ்வொன்றும் சிலுவைச் செய்தியானால், தாகமாயிருக்கிறேன் என்ற வார்த்தையும் ஒரு சிலுவைச் செய்திதான். சிலுவையில் பேசினவைகளில், மிகவும் சுருக்கமானது இதுதான்.

சரி, தாகமாயிருக்கிறேன் என்ற சிலுவை வார்த்தையிலிருந்து நாம் கற்றுக் கொள்ளக் கூடிய பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

## I தாகமாயிருக்கிறேன் என்பது இயேசுவானவரின் மனிதத் தன்மையைக் காட்டுகிறது.

சிலுவையில் மரிக்கும்போது, தாகமாயிருக்கிறேன் என்று அவர் சொன்ன திலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற முதல் பாடம், இயேசுவானவர் இப்பூமியில் இருந்தபோது, முழுமையாக மனிதனாகவும் இருந்தார் என்பது.

நமதாண்டவர், இப்பூமியில் மனிதராக இருந்தாரா? அல்லது தெய்வீகம் நிறைந்தவராக இருந்தாரா? என்றதொரு கேள்வியைக் கேட்டால், அவர் இரண்டும் உடையவராக இருந்தார் என்றே பதில் வரும். அது எப்படி என்று மீண்டும் கேட்டால், இவ்விதம் பதிலளிக்க முடியும். எப்படியொரு குழந்தையை முழுமையாக தகப்பனுடைய குழந்தை என்றும் தாயினுடைய குழந்தை என்றும் சொல்ல முடியுமோ அது போலவே, இயேசுவானவரையும், பரலோக தகப்பனுக்கு முழுமையான மகன் என்றும், அதே சமயத்தில், பூமிக்குரிய தாய்க்கும் முழுமை யான மகன் என்றும் கூற முடியும். இப்படிப் பரலோகத் தகப்பனுடைய மகன் என்றளவில், தெய்வீகம் நிறைந்தவரென்றும், பூமிக்குரிய தாயினுடைய மகன் என்றளவில் மனிதத் தன்மையுடையவரென்றும் சொல்ல முடியும். இந்த இரட் டைத் தன்மையை அவருடைய வாழ்க்கையில் அடிக்கடி நாம் பார்க்க முடியும்.

பூமிக்குரிய தாயின் மகன் என்றளவில் ஒரு சமயம் படகில் செல்லும் போது நம்மைப் போன்றே களைப்புற்று உறங்கினார் (மத். 8 : 24). ஆனால், கடலில் பெருங்காற்று உண்டாகி சீஷர்கள், ஆண்டவரே எங்களை இரட்சியும் என்று அலறினபோது, பரலோகத் தகப்பனின் மகன் என்றளவில் தெய்வீகம் நிறைந் தவராய், கடலையும், காற்றையும் அதட்டினார் (மத். 8 : 26). அது போலவே, ஒரு தாயினுடைய மகனாக, மனிதத் தன்மையோடு லாசருவின் கல்லறையருகில் தன் உணர்வுகளை அடக்க முடியாமல், பெலவீன மனிதனைப் போல கண்ணீர் விட்டார் ( யோவான் 11 : 35 ). ஆனால், பரலோகத் தகப்பனுடைய குமாரன்

என்றளவில் தெய்வீகம் நிறைந்தவராய் கல்லை எடுத்துப் போடுங்கள் என்று சொன்னதோடு (11, 39) லாசருவே வெளியே வா என்று உரத்த சத்தமாய்க் கூப்பிடவும் செய்தார். மரித்த லாசருவும் அங்கே உயிரோடே வந்தான் (11:44).

இப்படி தெய்வீகம் நிறைந்தவராக இருந்த போதும் அவருக்குத் தாகம் உண்டாயிற்றென்று பார்க்கிறோம். இயேசுவானவருக்கு சிலுவையில் மாத்திரம் தாகம் உண்டாகவில்லை. இப்பூமியின் வாழ்க்கையில் அவர் இருந்தபோது நம்மைப் போன்று சோர்வுற்ற போதெல்லாம் அவருக்கும் தாகம் ஏற்பட்டது. ஒரு சமயம் ஊழியப் பயணத்தால் களைப்புற்ற அவர், யாக்கோபின் கிணறு என்று நம்பப்படுகின்ற கிணற்றண்டையில், யூதர்கள் சம்பந்தம் கலவாத சமாரியப் பெண் ணிடம், தாகத்துக்குத் தா என்று கேட்டு, ஓர் உரையாடலை ஆரம்பித்து, உண்மையை வெளிப்படுத்தினார் (யோவான். 4 : 7- 24). ஆனால், இங்கோ தன்னுடைய பூமிக்குண்டான பிரயாணத்தின் இறுதியில் நம் ஒவ்வொருவரின் ஆவிக்குரிய தாகத்தைத் தீர்க்கும்படியாக தாகமாயிருக்கிறேன் என்று கூறுகிறார்.

இப்படித் தாகமாயிருக்கிறேன் என்று உரைத்தது அவரின் மனுஷீகத்திற்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட சான்றாக இருக்கிறது.

## II. தாகமாயிருக்கிறேன் என்பது அவருடைய வேதாகம அறிவின் ஆழத்தைக் காட்டுகிறது.

சிலுவையில் மரிக்கும்போது, தாகமாயிருக்கிறேன் என்று இயேசுவானவர் சொன்னதிலிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற இரண்டாவது பாடம், அவருக்கு இருந்த வேதாகம அறிவு பற்றியது.

ஒருவேளை பாடுகளுக்கும், வேதனைகளுக்கும் மத்தியில் அவர் தாகமாயி ருக்கிறேன் என்று சொல்லியிருந்தாலும், ஏன் அவர் அப்படிச் சொன்னார் என்பதற்கு வேத வசனம் ஓர் அருமையான காரணத்தைக் கூறுகிறது. ஆம், வேதவாக்கியங்கள் நிறைவேறத்தக்கதாக தாகமாயிருக்கிறேன் என்று அவர் சொன்னதாக யோவான் 19 : 28 ல் பார்க்கிறோம். வேத வாக்கியங்கள் தேவ சித்தத்தைக் கொண்டிருப்பதால், அவைகளை நிறைவேற்றவே அவர் பூமிக்கு வந்தார். அவர் இப்பூமியில் இருந்த போது, நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து, அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது என்றார் (யோவான் 4:34).

இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்டபோது, இரண்டு வித்தியாசமான நேரங்களில் இரண்டு வகையான பானம் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. முதலாவது பானம், சிலுவைப்பாடுகளின் ஆரம்பத்தில், அதாவது காலை 9.00 மணி அளவில் கசப்புக் கலந்த இந்த பானம் ஒரு நோக்கத்தோடு அந்நாட்களில் சிலுவைக் குற்றவாளிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது, ஒரு குற்ற வாளியின் உணர்வுகளை மழுங்கடிப்பதற்காக. ஆனால், இயேசுவானவரோ,

சிலுவையில் பேச வேண்டிய காரியங்கள் இன்னும் இருந்தபடியால், உணர்வுகளை மழுங்கடிக்கும் அப்பானத்தை ருசி பார்த்துக் குடிக்க மறுத்துவிட்டார் (மத். 27 : 34). இப்படி மறுத்ததின் மூலம் சங்கீதம் 69 : 21 ல் சொல்லப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனம் துல்லியமாக நிறைவேறுவதற்கும் வழி செய்துவிட்டார். எப்படியெனில், சங்கீதம் 69 : 21 ல் என் தாகத்துக்கு காடியைக் கொடுத்தார்கள் என்று சொல்லுகிறது. ஆனால் இங்கே சொல்லப்படும் இந்த இரண்டாவது பானம், சிலுவைப் பாடுகளின் முடிவில் கொடுக்கப்பட்ட ஒன்று. அதாவது, மாலை 3.00 மணி போல். உடனே அவர்களில் ஒருவன் ஓடி, கடற்காளனை எடுத்து காடியில் தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்கக் கொடுத்தான் என்று சொல்லப்பட்டுள்ளது (மத். 27 : 48).

ஆயினும், சிலுவைப் பாடுகளின் ஆரம்பத்தில் கொடுத்த முதல் பானத்தை ஏற்றுக் கொள்ள மறுத்த இயேசுவானவர், அந்த இரண்டாவது பானத்தை எதிர்ப்பும், மறுப்பும் இல்லாமல் ஏற்றுக் கொண்டார். யோவான் நற்செய்தியாளர், **இயேசு காடியை வாங்கின பின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து ஆவியை ஒப்புக் கொடுத்தார்** என்று கூறுகிறார். அங்கே அவர் ஏற்றுக் கொண்டது. அவரது தாகத்தைத் தீர்க்கும்படியான பானத்தையல்ல. மாறாக **எல்லாம் முடிந்தது** என்பதைத் தெளிவாகச் சொல்ல உதவிய பானத்தையே. இதன் மூலம், வேத வாக்கியம் நிறைவேற வேண்டுமென்பதில் அவர் எவ்வளவு அக்கறையுள்ளவராயிருந்தார். இந்த அக்கறை அவருக்கு எப்படி வந்தது? வேத வாக்கியங்களை அவர் துல்லியமாக அறிந்து வைத்திருந்ததாலேயே.

## III. தாகமாயிருக்கிறேன் என்பது அவருடைய பாடுகளின் தீவிரத்தைக் காட்டுகிறது.

இயேசுவானவர் சிலுவையில் மரிக்கும்பொழுது தாகமாயிருக்கிறேன் என்று சொன்னதிலிருந்து, நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற இன்னுமொரு பாடம், அவருடைய பாடுகளின் தீவிரம் பற்றியது.

இயேசு ஆண்டவரின் சிலுவைப்பாடுகளை அதன் உண்மைத் தன்மையோடு எடுத்துரைத்தால் கல் நெஞ்சும் கண்டிப்பாகக் கரையும். ஆம், அது அவ்வளவு வியாகுலம் நிறைந்தது. சங்கீதக்கரன் இயேசுவின் சிலுவைப் பாடுகளின் கொடுமை பற்றி இவ்விதம் சித்தரித்திருக்கிறார். **தண்ணீரைப் போல ஊற்றுண்டேன்; என் எலும்புகளெல்லாம் கட்டு விட்டது. என் பெலன் ஓட்டைப் போல காய்ந்தது, என் நாவு மேல் வாயோடே ஒட்டிக் கொண்டது. என்னை மரணத் தூளிலே போடுகிறீர். நாய்கள் என்னை சூழ்ந்திருக்கிறது; பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்து கொண்டது; என் கைகளையும், என் கால்களையும் உருவக்குத்தினார்கள்** என்று (சங். 22 : 14 - 16). இப்பகுதியில், நாம் கவனிக்கத் தக்கது, என் பெலன் ஓட்டைப் போல் காய்ந்தது, என் நாவு மேல் வாயோடே ஒட்டிக் கொண்டது என்பது. குயவனால், சுடப்பட்ட ஓட்டை விட வறட்சி கொண்டதாக எதுவுமே இருக்க முடியாது. அப்படித் தானே. ஆனால், இயேசுவானவரின் சரீரம்

அந்த ஓட்டைப் போலக் காய்ந்திருந்ததாம்.

அவருடைய சரீரம் ஓட்டைப் போல் காய்ந்து, நாவு மேல் வாயோடே ஒட்டிக் கொண்டதென்றால், அச்சரீரத்தை என்னமாய்ப் பாடுபடுத்தியிருப்பார்கள் என்று எண்ணிப்பாருங்கள். சிலுவை மரணம் என்பது கொடுங்குற்றவாளிகளுக்காகவே கண்டுபிடிக்கப்பட்டு பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஒன்று. ஒரு குற்றவாளி சிலுவைக்கு கொண்டு போகப்படுவதற்கு முன்பாக, கடுமையான முறையில், ஈவு இரக்கமில்லாமல், பலமிக்க இரண்டு ரோம சிப்பாய்களால், மாறி மாறி சவுக்கால் அடிக்கப்படுவான். பல பிரிவுகளைக் கொண்ட அந்த தோல் சவுக்கின் நுனியில் இரும்பு குண்டுகளும், முட்களும், எலும்புத் துண்டுகளும் பொருத்தப்பட்டிருக்கும். சவுக்கடி நிறைவேறியதற்குப் பின் குற்றவாளியின் சரீரத்தை குறிப்பாக, முதுகைப் பார்த்தால், **உழவன் நிலத்தை ஏர் பூட்டி உழுதது போல் இருக்குமாம்.** அச்சவுக்கடியின் போது ஏராளமான இரத்தம் வெளியேறும். சிலுவை மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட சிலர் சவுக்கடியின் போதே இறந்து போவதும் உண்டு.

இப்படி சவுக்கடியின் போது ஏராளமான இரத்தமும், தண்ணீரும் வெளியேறிய நிலையில், சிலுவையில் அறையப்பட்டு, வெட்டவெளியில், உச்சி வெயிலில் தொங்க விடப்படுவான். அப்பொழுது, சரீரம் கிட்டத்தட்ட கருவாடு போல் காய்ந்திருக்கும். வியர்வை கொஞ்சம் வெளியே வந்தாலே, தண்ணீர் கேட்கும் சரீரம், வியர்வையும், இரத்தமும், தண்ணீரும் ஒட்டுமொத்தமாக வெளியே வந்து, வெளிலிலும் காய்ந்து தொங்கிக் கொண்டிருக்கும் போது, தாகத்தால் எப்படித் தவித்திருக்கும் என்று உங்களால் ஊகிக்கமுடிகிறதா? சவுக்கடியாலும், ஆணிகள் கடாவப்பட்டதால் உண்டான வேதனையாலும், பாரச் சிலுவையை சுமந்ததால் ஏற்பட்ட களைப்பாலும், முட்கிரீடம் சூட்டப்பட்டதால் நேர்ந்த வலியாலும் அனுபவித்த கொடுமைகள் போதாதென்று, இங்கே புது வேதனையாக தாகமும் சேர்ந்து கொண்டது.


இப்படியாக, இயேசுவின் சிலுவைத் தாகம் நமக்கு மூன்று பாடங்களைக் கற்றுக் கொள்ள உதவியிருக்கிறது. நாம் நித்திய காலத்தில் தாகமடையாமலிருக்கவே, அவர் இப்பூமியில் இவ்விதம் தாகமானார். நாம் இந்த பூமியிலே தாகமுள்ளவர்களாயிருப்போமானால், நித்தியத்தில், பரலோக வாழ்வில் தாகமற்றவர்களாக இருக்க முடியும். அப்படியானால் எதன் மீது நாம் இவ்வாழ்வில் தாகமுள்ளவர்களாயிருக்க வேண்டும்? மலைப் பிரசங்கத்தில் நமதாண்டவர் நீதியின் மேல் பசி, தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று கூறியுள்ளார் (மத். 5 : 6). அப்படியானால், நீதி என்பது என்ன? தாவீது சொல்லும்போது, உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள் என்று (சங். 119 : 172).

இதன் பொருள், தேவனுடைய கற்பனைகளாகிய வேத வசனங்கள் நீதியுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளின்பால் நாம் ஒவ்வொருவரும் தாகம் உள்ளவர்களாயிருக்க வேண்டும். அதாவது, இயேசுவானவர் அவைகளை நிறைவேற்றுவதில் தன்னுடைய உயிர்போகும் நிலையில் கூட எப்படி அக்கறையுள்ளவராக இருந்தாரோ, அதுபோல நாம் வேத வாக்கியங்களை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். ✞

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| தங்களுக்கே தங்களை ... | Louis Rushmore | ... 1 |
| தாகமாயிருக்கிறேன் | E.Z.S. Rajanayagam | ... 5 |
| மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா | Jerry Bates | ... 12 |
| இருபது வருட ஆசீர்வாதங்கள் | Byron Nichols | ... 16 |
| சர்வதேச சத்தியத்தின் குரல்... | J.C. Choate | ... 18 |
| சத்தியத்தின் குரல் நன்றி கடிதம் | Unknown | ... 21 |
| நன்றி சொல்லத் தடை செய்பவை | P.C. Philemon Rajah | ... 23 |
| கிருபையும் கிறிஸ்தவர்களின்... | B. Arjunan | ... 27 |
| வாழ்க்கையின் துயரங்களோடு ... | E.Z. Selvanayagam | ... 31 |
| கிறிஸ்துவைப் பிரதிபலிப்போம்... | Benny Martin | ... 35 |
| **தேவன்** | **God** | |
| பரிசுத்த ஆவியானவர் யார்? | J.C. Choate | ... 38 |
| வேதாகமமும் கிறிஸ்துவும் | Cecil May. Jr | ... 42 |
| **சாட்சியங்கள்** | **Evidences** | |
| எல்லாவற்றிலும் பொருந்துகிறது | Brad Harrub. Ph.D., | ... 45 |
| **தேவனுடைய வார்த்தை** | **The Word Of God** | |
| நோக்கத்தின் முதன்மையான... | David Deffenbaugh | ... 49 |
| பெரிய வார்த்தை சிறிய பொருளை... | Ardon Hindon | ... 51 |
| சுவிஷேசத்தைப் பிரசங்கித்தில் | Gary C. Hampton | ... 52 |
| **இரட்சிப்பு** | **Salvation** | |
| ஓட்டப்பந்தயம் வேகமானவர்களுக்கல்ல | Jodie Boren | ... 55 |
| பிரசங்க மேடையில் வெறுங்காலுடன்... | Bobby Dockery | ... 58 |
| கிறிஸ்துவால் நிராகரிக்கப்படும்... | Perry N. Hall | ... 61 |
| **சபை** | **The Church** | |
| இயேசு ஒற்றுமைக்காக ஜெபித்தார் | Wayne Barrier | ... 64 |
| சபை | Andrew Connally | ... 66 |

| | | |
|---|---|---|
| ஒன்று மற்றொன்றைப் போலவே... | Bill Dillon | ... 68 |
| மெய்யான சபை | Unknown | ... 70 |
| **வாழ்வதற்கான உபதேசம்** | **Doctrine to Live by** | |
| சில காரியங்களைச் ... | Hollies Miller | ... 72 |
| **செயலில் கிறிஸ்தவம்** | **Christianity in Action** | |
| ஊழியத்திற்கான தடைகள் | Randall Caselman | ... 74 |
| தனிநபர் ஊழியத்தில் ... | Jimmy Young | ... 78 |
| வசன ஆராய்ச்சி | Jerry Bates | ... 82 |
| **ஆராதனை** | **Worship** | |
| கர்த்தர் நம்மோடு இருக்கிறார் | John Gipson | ... 85 |
| வெளியேற ஆயத்தம் | Unknown | ... 87 |
| **அனுதின கிறிஸ்தவ ஜீவியம்** | **Daily Christian living** | |
| ஒத்துழைப்பா அல்லது... | Unknown | ... 90 |
| போஜனமும் விசுவாசமும் | Unknown | ... 93 |
| **கிறிஸ்தவ இல்லம்** | **The Christian Home** | |
| உறுதியான தகப்பனின்... | Keith Parker | ... 94 |
| பெற்றோர்களின் கடமை என்ன | Travis L. Quertermous | ... 96 |
| நான் யார்? | Rebacca Rushmore | ... 98 |
| நான் எங்கே இருக்கிறேன்? | Rebacca Rushmore | ... 99 |
| **வசனப்பகுதி பாடல்கள்** | **The Christian Home** | |
| இதைப்பார்த்து ஏன் ... | Jim Poland | ... 100 |
| வேத வசனங்களைப் பற்றிய... | Unknown | ... 102 |
| **வேதாகம கதாபாத்திரங்கள்** | **Bible Characters** | |
| போவாஸின் குணாதிசயங்கள் | Stan Mitchell | ... 104 |
| நாம் சுவிசேத்தைப் பிரசங்கிக்க... | Robert H. Martin | ... 106 |
| நாம் என்ன செய்ய வேண்டும் | Clytonpepper | ... 108 |



# மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா?

## Will A Man Rob God?

Jerry Bates

மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? இந்த வார்த்தைகள் மல்கியா தீர்க்கதரிசியால் இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்துக் கேட்கப் பட்டது ( மல்கியா 3 : 8 ). மல்கியா, இஸ்ரவேலர்கள் தேவனை வஞ்சித்ததாகக் குற்றஞ்சாட்டினார். ஆனால், இஸ்ரவேலர்களோ தாங்கள் அப்படிச் செய்து கொண்டிருந்ததாக நினைக்கவில்லை என்று நான் நிச்சயமாக நினைக்கிறேன். உண்மையில் சொல்லப்போனால், இஸ்ரவேலர்கள் தேவனை வஞ்சித்ததாக மல்கியா தீர்க்கதரிசி குற்றம் சாட்டியபோது, அது அவர்களுக்கு அதிர்ச்சியாக அமைந்திருக்கும். இருந்தபோதிலும், அவர்கள் தேவனுக்கு வஞ்சனை செய்ததாக மல்கியா மிகச்சரியாகச் சுட்டிக் காட்டினார்.

சரி, இஸ்ரவேலர்கள் தேவனை எப்படி வஞ்சித்தார்கள்? அவர்கள் காணிக்கைகளிலும், தசமபாகங்களிலும் வஞ்சித்ததாக மல்கியா சொன்னார் (3 : 8, 9). அவர்கள் தேவன் தங்களுக்குக் கட்டளையிட்டபடி தசமபாகங்களைக் கொண்டு வரவில்லை. அவர்கள் தேவனுக்கு காணிக்கைகளைச் செலுத்தினபோது ஊனமானவைகளையும், நசல் பிடித்ததையும் கொண்டு வந்து கொடுத்து தேவனை வஞ்சித்தார்கள் (1 : 8). தேசத்தை ஆளுகிறவர்களுக்குச் செலுத்தாததை தேவனுக்குச் செலுத்தியதாக அவர்கள் மல்கியாவால் குற்றஞ்சாட்டப் பட்டார்கள் ( 1 : 8 ). அவர்கள் தேவனுக்குரியவைகளைச் சரியாகச் செலுத்த மறுத்தபோது தேவனை வஞ்சித்தார்கள். மேலும், இஸ்ரவேலர்கள் முதல்தரமானதை தேவனுக்குக் கொடுத்தால் தேவன் அவர்களை அபரிதமாக ஆசீர்வதிப்பார் என்னும் வாக்குத்தத்தத்தையும் மல்கியா அவர்களுக்கு நினைப்பூட்டினார் (3 : 10 – 12).

மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? என்னும் கேள்வியைக் குறித்து நாமும் சற்று ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் தேவனுக்கு தாராளமாகக்

கொடுக்காததற்குக் காரணம், இயேசுகிறிஸ்துவோ அல்லது அப்போஸ் தலர்களோ தசமபாகம் கொடுக்கவேண்டுமென்று கட்டளையிடவில்லை என்று சுட்டிக் காட்டுகிறார்கள். இது உண்மைதான், ஆனாலும் நாம் கொடுக்கும் படியாகக் கட்டளையிடப்படவேயில்லை என்று பொருள்படாது. நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன் தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்ந்து வைக்கக்கடவன் (I கொரி. 16 : 2).

இயேசுகிறிஸ்து உடைமைகளைக்குறித்தும், பணத்தைக்குறித்தும் அதிகமாகவே சொல்லியிருக்கிறார். வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்கிற அவருடைய வார்த்தைகளில் பாதிக்கு மேல் **பணம் மற்றும் உடைமைகள்** சம்பந்தமாகத்தான் பேசுகின்றன. லூக்கா 21-ம் அதிகாரத்தில் சில ஐசுவரிய வான்கள் காணிக்கை போட்டதை கிறிஸ்து கவனித்துக்கொண்டிருந்தார். அந்நேரத்தில் ஒரு ஏழை விதவை இரண்டு காசுகள் போடுவதையும் அவர் கண்டார். அந்த ஏழை விதவை காணிக்கைபோட்ட காசு அந்த நாட்களில் புழக்கத்திலிருந்த யூத காசுகளில் மிகக்குறைந்த மதிப்பை உடையதாயிருந்தது. ஐசுவரியவான்கள் போட்ட அதிகமான காணிக்கையோடு ஒப்பிடும்போது இது மதிப்பற்ற ஒன்றாக இருந்தது. இருந்தபோதிலும், இயேசு கிறிஸ்து அந்த ஏழை விதவை மற்றெல்லாரைப்பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள் என்று அவளை மெச்சினார் ( 21 : 3, 4 ). எப்படி அந்த ஏழை விதவையால் தனக்கிருந்த எல்லாவற்றையும் காணிக்கையாகப் போடமுடிந்தது? நிச்சயமாகவே அவள் அன்பின் அர்ப்பணிப்பு நிமித்தமாகத்தான் கொடுத்தாள். அவளுடைய தொகை சிறிதென்றாலும், அவளுடைய அன்பும், அர்ப்பணிப்பும் பெரிதாயிருக்கிறது.

புதிய ஏற்பாட்டில் அந்த ஏழை விதவை உதாரத்துவமாய்க் கொடுத்ததைப் போல, II கொரிந்தியர் 8-ம் அதிகாரத்தில், எருசலேமில் உபத்திரவத்திலிருந்த கிறிஸ்தவர்களுக்கு மக்கதோனிய கிறிஸ்தவர்கள் தாரளமாகக் கொடுத்தார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களை மெச்சுகிறார். ஏனென்றால், இந்த மக்கதோனியர்களே மிகவும் வறுமையில் தான் இருந்திருக்கிறார்கள். வேறு விதமாகச் சொன்னால், இந்த புறஜாதியார் கொடிய தரித்திரத்தில் இருந்த போதிலும், ஏழை யூதர்களுக்கு உதவும்படியாய், உதாரத்துவமாகக் கொடுத் திருக்கிறார்கள் (II கொரி 8 : 2). சரி, இந்த மக்கதோனியர் ஏன் இத்தனை உதாரத் துவமாய்க் கொடுத்தார்கள்? ஏனெனில், தேவன் தங்களுக்குச் செய்த நன்மை களுக்காகவும், தேவன் மீது அவர்கள் கொண்டிருந்த அன்பின் நிமித்தமாகவும் அப்படி உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். அதாவது, முன்பு தங்களைத் தாமே கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தபடியால், அவர்களால் உதாரத்துவமாய்க்

கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க முடிந்தது (II கொரி. 8:5).

நாம் ஏன் தேவனுக்கு கொடுக்கிறோம்? பெரிய பணியை நிறைவேற்ற நாம் கொடுப்பதில்லை. இது உண்மையாயிருக்குமானால் நாம் தேவனுக்கென்று ஒன்றுமே கொடுக்கவில்லை என்று தான் பொருள். ஏனென்றால், பெரிய பணிகளை நிறைவேற்ற நம்மால் போதுமான அளவு தேவனுக்கு கொடுக்க முடியாது?மாறாக நாம், தேவனுடைய மகிமைக்காகவும்,கனத்திற்காகவும் தான் கொடுக்கிறோம். மேலும், நாம் தேவன் மீதான மிகப்பெரிய அன்பின் காரணமாகவும் கொடுக்கிறோம். அதை நாம் அவருக்குக் கொடுப்பதின் மூலம் வெளிப்படுத்துகிறோம். நாம் தேவனுக்கு குறைவாகக் கொடுத்தால் தேவனிடத்தில் நாம் கொண்டிருக்கும் அன்பும், நம்பிக்கையும் குறைவாகவே காணப்படும். நம் மீதான தேவனுடைய அன்பு நம்மால் புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு மிகப்பெரியது. ஆகவே, நாம் தேவனுக்கு முன்பாகக் குறைவான அன்பை வைத்துக்கொண்டு எப்படி நிற்க முடியும்?

தேவனுக்கு நாம் எவ்வளவு கொடுக்கவேண்டும்? யூதர்கள் பத்து சதவீதத் திற்கும் மேல் கொடுத்தார்கள். இது வெறும் தொடக்கமாகத்தான் இருந்தது. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தங்களைத் தரித்திரர்களாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் கொடுக்கும் காணிக்கை, தேவன் நம்மை எந்த அளவுக்கு ஆசீர்வதித்திருக்கிறாரோ அதைப்பொறுத்தே அமையும். காணிக்கை கொடுத்தபிறகு அந்த ஏழை விதவையிடம் ஒன்றுமே மீதம் இருக்கவில்லை. மக்கதோனியா நாட்டு சபையர், கொடிய தரித்திரத்தின் மத்தியிலும் கொடுத் தார்கள். ஆகவே, நாம் தேவனுக்கு உதாரத்துவமாய்க் கொடுக்காமலிருப்பதற்கு நம் ஏழ்மையைக் காரணங்காட்டி நியாயப்படுத்தும் போக்கை நம்மிடமிருந்து போக்க வேண்டும். அதே வேளையில் நாம் எந்த அளவுக்கு ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறோம் என்பதைத் தேவன் அறிந்திருக்கிறபடியால், காணிக்கையின் அளவைப் பொறுத்தல்ல, இருதயத்தின் நிலையைப்பார்த்து நம்மை நியாயந் தீர்க்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் மிகப்பொருத்தமாக இதைப் பதிவு செய்கிறார். **பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்** (II கொரி. 9:6,7).

தேவனிடத்தில் நம்மை நாமே ஒப்புக்கொடுக்கும்போது, நாம் அவருக்கு எவ்வளவு கொடுக்கிறோமென்பது ஒரு பொருட்டே அல்ல.நம்மால் முடிந்தவரை

எல்லாவற்றையும் தேவனுக்குக் கொடுக்கிறோம்.சில வேளைகளில், சிலர் நாம் தேவனுக்கு இவ்வளவு தான் கொடுக்கமுடியும் என்று நினைப்பதைவிட அதிகமாகவும் கொடுக்க முடியும். நம்மை நாமே தேவனுக்கு கொடுத்துவிட்டால் எல்லாவற்றையும் தேவனுக்கு கொடுத்துவிட்டோம் என்றுதான் பொருள். முதலாவது, நம்மை தேவனுக்கென்று ஒப்புக்கொடுத்தால், அவர் நம்மை ஆசீர்வதிப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்.நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னார் ( லூக்கா 6 : 38 ).இது செழுமைக்கான வாக்குத்தத்தம் மாத்திரம் அல்ல, வாழ்க்கையில் நமக்குத் தேவையான காரியங்களுக்கு தேவன் நம்மை ஆசீர்வதிக்கும்படி அவர் மேல் நாம் வைக்கும் நம்பிக்கைக்குமான வாக்குத்தத்தமாயிருக்கிறது.

மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா?இது ஓர் உணர்வுப்பூர்வமான கேள்வியாகும். இதற்கான பதில் எப்படி மல்கியாவின் நாட்களில் சம்பந்தமுடையதாயிருந்ததோ, அதேபோல், இன்றும் பொருத்தமான ஒன்றாக இருக்கிறது. எந்த ஒரு கிறிஸ்தவனும் வேண்டுமென்றே தேவனை வஞ்சிக்கலாமென்று நினைப்பதாக நான் நினைக்கவில்லை. இருந்தபோதிலும், தேவன் எதிர்பார்க்கிறபடி நாம் கொடுக்கத் தவறும்போது அவரை வஞ்சித்துவிடுகிறோம். தேவனை வஞ்சித்த குற்ற உணர்வு நமக்கு ஒருபோதும் வேண்டாம்! ✝

## ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவை விட்டு விலகும்போது

- சமுதாயம் கிறிஸ்தவனின் தாக்கத்தை இழந்துவிடுகிறது.
- உலகம் ஒரு முன்மாதிரியை இழந்துவிடுகிறது.
- சபை, ஒரு அங்கத்தினரை இழந்துவிடுகிறது.
- ஒரு சம்பந்தப்பட்ட நபர் தன் ஆத்துமாவை இழந்து போகிறார்.
- பரலோகம் ஒரு நீதிமானை இழந்துவிடுகிறது.



# இருபது வருட ஆசீர்வாதங்கள்

## *20 Years of Blessings*

Byron Nichols

சகோ. J.C.Choate அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மற்றவர்களுக்குப் போதிப்பதில், அச்சடிக்கப்பட்ட பக்கங்களின் மிகப்பெரிய மதிப்கை உணர்ந்தவராய், அதன்மீது தனக்கிருந்த நம்பிக்கையை பல்வேறு விதங்களில் தெளிவாக வெளிப்படுத்தினார்.

இருபது வருடங்களுக்கு முன்பாக உதயமான சர்வதேச சத்தியத்தின் குரல் மிக முக்கியமான நிகழ்வாக அமைந்திருக்கிறது என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. மூன்று மாதத்திற்கு ஒருமுறை தொடர்ந்து வெளிவரும் இப்புத்தகம் நாம் எண்ணு வதற்கும் மேலாக, அநேகருக்கு ஆசீர்வாதமாக இருந்து வருகிறது. கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் அருமையான சகோதரர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரவான் களாக நடந்துகொள்ள எங்களால் முடிந்த வரை நாங்கள் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்தப் புத்தகம் தொடர்ந்து வருவதன் விளைவால் உண்டான எண்ணற்ற ஆசீர்வாதங்களை எண்ணும்போது, சர்வதேச சத்தியத்தின் குரல் புத்தகத்தின் இருபது ஆண்டுகால ஆசீர்வாத பயணத்தில் அங்கம் வகித்து வருபவர்களை நான் இங்கே பட்டியலிட விரும்புகிறேன்.

- ☆ இப்புத்தகத்தோடு நேரடியாகத் தொடர்புடையவர்கள்
- ☆ இப்புத்தகத்திற்குப் பொருளாதார உதவிகள் செய்து மகிழ்ச்சியோடு முக்கியப் பங்கு வகிப்பவர்கள்
- ☆ இப்புத்தகத்தைப் பெற்றுக் கொள்பவர்கள்
- ☆ இந்த ஆவிக்குரிய புத்தகத்தின் உதவியால் கிறிஸ்தவரானவர்கள்.
- ☆ இந்த புத்தகத்தின் வாயிலாக கிறிஸ்தவ விசுவாசத்தில் விருத்தியடைந்தவர்கள்

☆ இந்தப் புத்தகத்தை மற்றவர்களோடு பகிர்ந்துகொண்ட மகிழ்ச்சியை பெற்றுக் கொண்டவர்கள்.

☆ இந்தப் புத்தகத்தைப் படித்ததினால் இரட்சிப்பின் வாசனையை முகர்ந்து, அதைச் சூடிக்கொண்டவர்கள்.

இந்த இருபது ஆண்டுகால ஆசீர்வாத பயணத்தில் ஏதோ ஒரு விதத்தில் தங்கள் பங்களிப்பை ஆற்றிய ஒவ்வொரு தனி நபருக்கும், ஒவ்வொரு சபைக்கும் எங்கள் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்புத்தகத்தை இருபது வருடங்களுக்கு முன்பாக வாசிக்க பலருக்கு வாய்ப்பு கிடைத்திருக்காது என்பதை அறிந்து, குறைந்தது முதல் இரண்டு தலையங்கங்களையாவது வாசிக்க நீங்கள் ஆவலாயிருப்பீர்கள் என்று அறிந்து, அறிமுக இதழ்களில் வெளியான முதல் இரண்டு தலையங்கங்களை அடுத்தடுத்த பக்கங்களில் பதிவு செய்திருக்கிறோம். பதிவுகளை பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்திய பரிசுத்த வாக்கியங்களிலிருந்து, ஆண்டவருடைய கிருபையால், தேவனை மகிமைப்படுத்தவும் நம் நித்திய வாழ்வின் பயணத்திற்கான வழிகாட்டியாகவும் இருக்க இதனை இங்கே பதிவு செய்கிறோம். ✝

## வேதவாக்கியங்களின் படி ஞானஸ்நானம் பெறும்பொழுது

* கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுகிறோம் (மத். 3 : 15).
* பாவமன்னிப்பைப் பெறுகிறோம் (அப். 2 : 38).
* புது சிருஷ்டியாகிறோம் (II கொரி. 5 : 17).
* கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாயிருக்கிறோம் (I பேதுரு 2 : 2).
* மறுபடியும் பிறக்கின்றோம் (யோவான் 3 : 5).
* மனமாற்றம் அடைகின்றோம் (மத். 18 : 3).
* கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுகிறோம் (கலா. 3 : 27).
* தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்படுகிறோம் (எபே. 2 : 22).
* சரீரமாகிய சபையிலே சேர்க்கப்படுகிறோம் (அப். 2 : 47).

# சர்வதேச சத்தியத்தின் குரல் ஓர் அறிமுகம்

## *Introducing The Voice Of Truth InterNational*

J.C. Choate

**1962** - ல், நானும் என் குடும்பமும் சர்வதேச ஊழியங்களுக்காக, பாகிஸ்தானில் உள்ள கராச்சிக்குச் சென்றோம். அங்கே சென்றபிறகு, அமெரிக்க தேசத்தின் செய்திகளையும், உலகச் செய்திகளையும் வானொலி மூலமாக ஒலிபரப்பிக் கொண்டிருந்த அமெரிக்காவின் குரல் என்னும் நிகழ்ச்சியோடு நாங்கள் நன்கு பரிச்சயமானோம். அமெரிக்காவுக்கென்று ஒரு குரல் இருக்க, ஏன் சத்தியத்திற்கென்று ஒரு குரல் இருக்கக்கூடாது? என்று நான் நினைத்தேன். அதன் விளைவாக ஒரு மாத இதழை நாங்கள் ஆரம்பித்தோம். அந்த இதழின் பெயர், நீங்கள் யூகித்தது போலவே – சத்தியத்தின் குரல்

அதன்பின்பு, இலங்கை வானொலி மூலமாக ஆசியாவிலும், ஆப்பிரிக்கா விலும் உள்ள பல்வேறு நாடுகளுக்கும், ஆங்கிலத்திலும் மற்ற மொழிகளிலும் சுவிசேஷத்தை ஒலிபரப்பினோம். ஒலிபரப்பட்ட பெரும்பாலான நிகழ்ச்சிகளுக்குப் பெயர் சத்தியத்தின் குரல் என்று தான் கொடுக்கப்பட்டிருந்தது. நாங்கள் இந்தியாவிலும், இலங்கையிலும், இந்தோனேஷியாவிலும், சிங்கப்பூரிலும் சில பத்திரிக்கைகளைத் தொடங்கினோம். மறுபடியும், அவைகளில் பெரும்பாலான புத்தகங்கள் சத்தியத்தின் குரல் என்னும் பெயரிலேயே வெளியிடப்பட்டன.

பல வருடங்கள் உருண்டோடின. பிறகு, அமெரிக்காவிலும், மற்ற தேசங் களிலும், ஆவிக்குரிய கிறிஸ்தவ புத்தகங்களின் தேவை அதிகமாயிருக்கிறது என்பதை நாங்கள் கண்டு அமெரிக்க ஐக்கிய தேசத்தில் ஒரு புதிய இதழை அச்சடிக்கத் தீர்மானித்தோம். மீண்டும், அந்த இதழுக்கு சத்தியத்தின் குரல் என்ற பெயரையே சூட்டினோம். ஆனால், இந்த முறை இவ்விதழ் சர்வதேச தரத்தைப் பெற்றிருந்தபடியால் அந்த இதழுக்கு சர்வதேச சத்தியத்தின் குரல் என்று பெயரிடப்பட்டது.

இந்த சர்வதேச சத்தியத்தின் குரல் புத்தகத்தின் நோக்கம் தொலை நோக்கமானதாகும். முதலாவது, வேதாகமத்தின் அடிப்படை சத்தியம் நிறைந்த 100 பக்கங்களை உள்ளடக்கிய ஒரு புத்தகத்தை வெளியிட வேண்டும் என்று

விரும்பினோம். அதிலே, இடையிடையே இடத்தை நிரப்புவதற்கான கட்டண விளம்பரங்கள் எதுவும் இருக்காது. காலப்போக்கில், கள்ளப்போதகங்களை சாடி காரியங்களை வெளியிட்டாலும் கூட, கள்ளப் போதகர்களை வெளிப்படையாகத் தாக்குவது நம் நோக்கமாயிராது. அதேபோல், அவர்களுடைய அபிப் பிராயங்களை விளம்பரப்படுத்துவதும் நம் நோக்கமாயிராது. மாறாக, தேவ னுடைய சித்தத்தைப் போதிப்பதே நம் நோக்கமாயிருக்கும். அதெப்படி யென்றால், நீங்கள் சத்தியத்தின் குரல் புத்தகத்தை உங்கள் நண்பர்களிடம் கொடுத்தால், அவர்கள் சத்தியத்தைக் கற்றுக் கொள்வார்கள் என்று முழு நிச்ச யப்படுத்திக் கொள்ளலாம். வேறுவிதமாகச் சொன்னால், இப்புதகத்தை சர்ச்சை மற்றும் விவாத மேடையாக நாங்கள் பயன்படுத்தமாட்டோம். இத்தகைய காரி யங்களுக்கு புத்தகங்கள் தேவை இல்லை என்று நாங்கள் சொல்லவில்லை. மாறாக, இப்புத்தகம் அப்படிப்பட்ட ஒன்றல்ல என்றுதான் சொல்லுகிறோம்.

இரண்டாவது, இப்புத்தகம் அமெரிக்க ஐக்கிய தேசத்திலும் தேவைப் படுவதால், இங்கே முடிந்தவரை விலை குறைவாகவோ அல்லது வருடாந்திர சந்தா அடிப்படையிலோ புத்தகங்கள் விநியோகிக்கப்படும். சர்வதேச சத்தியத்தின் குரல் மற்ற வெளியீடுகளின் நகல்களாயிராமல் தனித்துவம் வாய்ந்த தோற்றத்தை தன்னகத்தே கொண்டிருக்கும்.

**மூன்றாவது**, இப்புத்தகத்தை உலகின் பல பகுதிகளில், அந்தந்த பகுதிகளுக்குரிய மொழிகளில் புத்தகத்தின் கட்டுரைகள் வரிசைப்படுத்தப்பட்டு அதை அப்படியே பல நாடுகளில் உள்ள மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு அச்சிடும் வகையில் அனுப்பி வைக்கப்படும். மேலும், சத்தியத்தின் குரல் ஆங்கிலப் படைப்புகளிலுள்ள கட்டுரைகள் அந்தந்த நாடுகளின் தேவைகளுக்கேற்ப தேர்வு செய்யப்படும். அமெரிக்காவில் அச்சிடப்படும் சர்வதேச சத்தியத்தின் குரல் புத்தகத்தை அப்படியே பல நாடுகளுக்கு அனுப்பி வைக்க வேண்டியதுதானே? என்று நீங்கள் கேட்கலாம். ஆனால், அமெரிக்காவிலிருந்து மற்ற நாடுகளுக்கு அனுப்பினால் சரக்குக் கட்டணம் அதிகமாயிருக்கும், போக்குவரத்துக்கென்று பெரிய அளவில் செலவு செய்ய வேண்டியதாயிருக்கும். புத்தகங்கள் அமெரிக்காவில் அச்சிடப்பட்டாலும் சரி, அல்லது அந்தந்த நாடுகளில் அச்சிடப்பட்டாலும் சரி, அது, **அமெரிக்காவில் உள்ள கிறிஸ்துவின் சபைகளால் சர்வதேச சத்தியத்தின் குரல் வெளியிடப்படுகிறது** என்கிற வாசகத்தைத் தாங்கியிருக்கும். மேலும், இக்கட்டுரைகள் எந்தெந்த நாடுளுக்கு அனுப்பப்படுகிறதோ அந்தந்த நாடுகளின் தேவைக்கேற்ப கட்டுரைகளைச் சேர்த்து வெளியிடத்தக்க வகையில் புத்தகங்கள் அனுப்பப்படும்.

நான்காவது, சத்தியத்தின் குரல் புத்தகத்தை உலக ஊழியப் பள்ளி ஆசிரியர்களுக்கு அனுப்பி, உலகமுழுவதிலுமுள்ள ஆங்கிலம் பேசும் மாணவர்களுக்கு அதை விநியோகிக்கும்படி கேட்டுக்கொள்வோம். அவர்கள் கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும் பணியில் கூடுதலான புத்தகமாக இதைப் பயன்படுத்தலாம். அதேபோல, புதிதாகச் சந்திக்கும் ஆத்துமாக்களைத் தொடர்ந்து சந்திக்கும் முயற்சிக்கும் இப்புத்தகத்தைப் பயன்படுத்தலாம்.

ஆரம்பகட்டத்தில் சர்வதேச சத்தியத்தின் குரல் புத்தகத்தை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை என்று அச்சிட்டு, பின்பு அதை படிப்படியாக மாதந்தோறும் வெளியிடலாம் என்று விரும்புகிறோம். இப்புத்தகம் நீண்ட நெடுங்காலத்திற்குப் பொருந்தும் வகையில் நாங்கள் அதில் மாதத்தையோ, வருடத்தையோ பதிவு செய்ய மாட்டோம். ஆனால், பாகம் எத்தனை என்பதைப் பதிவு செய்வோம். இதன் மூலம் வாசகர்கள் பாகம் எத்தனை என்பதை வரிசைப்படுத்தி அதைக் கணக்கில் வைத்துக் கொள்ள முடியும்.

நான் அதன் தலைமை ஆசிரியராகப் பணியாற்றுகிறேன். அமெரிக்க ஐக்கிய தேசத்தின் மிசௌரி மாகாணத்திலுள்ள கிறிஸ்துவின் சபையின் மூப்பர்களில் ஒருவரும், உண்மையுள்ள சுவிசேஷப் பிரசங்கியாருமாயிருக்கிற சகோ. Byron Nichols அவர்கள் நிர்வாக ஆசிரியராயிருப்பார். அத்தோடு, கட்டுரைகளை எழுத எழுத்தாளர் குழுவை நாங்கள் கொண்டிருப்போம். அதேநேரத்தில், காலப்போக்கில் இன்னும் சில எழுத்தாளர்களையும் சேர்த்துக் கொள்வோம். இப்புத்தகத்தின் வெளியீடு சம்பந்தமாக உங்கள் விமர்சனங்கள், ஆலோசனைகள், மற்றும் உதவிகள் வரவேற்கப்படுகின்றன.

நாங்கள், இப்புத்தகம் குறித்து நீண்ட நாள் கனவு கண்டோம். அக்கனவு இப்போது நனவாயிருக்கிறது. கர்த்தருக்குச் சித்தமானால், இப்புத்தகம் சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாகத் தொடர்ந்து இருக்கும். நாங்கள் இப்புதகத்தை உள்ளூர் நூலகங்களிலும், மருத்துவமனைகள் மற்றும் அலுவலகங்களிலும் வைத்து உலகளாவிய ஊழியக் குழுவின் கருவியாகப் பயன்படுத்தலாம் என்றும் ஆசைப்படுகிறோம். கர்த்தருக்குச் சித்தமானால், நீங்களும் எல்லா வகையிலும் உதவமுடியும். இப்புத்தகம் இலாப நோக்கமற்ற முறையில் அச்சிடப்பட்டு, விநியோகிக்கப்படும். வானத்தையும் பூமியையும், அதிலுள்ள எல்லாவற்றையும், உண்டாக்கின ஜீவனுள்ள தேவன் உண்டென்று நாங்கள் விசுவாசிக்கிறோம். ✞

## சர்வதேச சத்தியத்தின் குரல் புத்தகத்திற்கு நன்றி தெரிவிக்கும் மாதிரிக் கடிதம்

சில நாட்களுக்கு முன்பாக ஒரு பெட்டி நிறைய சர்வதேச சத்தியத்தின் குரல் புத்தகங்களைப் பெற்றுக்கொண்டேன். நான் கர்த்தருடைய பணியினிமித்தம் எந்த இடத்தில் பிரயாசப்பட்டுக்கொண்டிருக்கிறேனோ, அந்த இடத்தில் எல்லா நிலைகளிலும் அது பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது. உண்மையில் நான் வாழும் இந்த Tutuila தீவில் எங்கள் வீட்டுக் கதவுக்கு முன்னால் சத்தியத்தின் குரல் புத்தகத்தின் ஐந்து பிரதிகளைத் தயாராக வைத்திருந்தேன். ஏனென்றால், யாராவது வருவார்கள். அவர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கைக்கான தேவனுடைய சித்தத்தை அறிவித்து உதவலாம் என்று எதிர்பார்த்திருந்தேன். எங்கள் தபால் நிலையத்தின் மூலம் ஒரு பெட்டி நிறைய வரும் சத்தியத்தின் குரல் புத்தகங்களை நான் என்ன செய்வது என்று எண்ணவேண்டிய அவசியமில்லை. புத்தகங்களை விநியோகிக்கத் தொடங்குவதற்குச் சரியான இடம் தபால் நிலையம் தான். தபால் அலுவலர்கள் தான் சரியான நபர்கள். ஏனென்றால், அவர்களிடமிருந்துதான் சத்தியத்தின் குரல் புத்தகங்கள் பெட்டியில் வந்ததற்கான ரசீதுகள் எனக்கு வந்தன. அந்த தபால் அலுவலகத்திலேயே இரண்டு மூன்று பேரிடம் நான் பேசவும், அவர்களிடம் சத்தியத்தின் குரல் புத்தகத்தைக் கொடுக்கவும் முடிந்ததைக் குறித்தும் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பட்டியலில் அடுத்து, நாங்கள் பயணிக்கும் வாகனத்திலே சில புத்தகங்களை வைப்பது என் குறிக்கோளாய் இருந்தது. நான் எப்போதெல்லாம் வாகனத்தில் பயணிக்கிறேனோ, அப்போதெல்லாம், ஓட்டுநர் உரிமம், ஒருசில கைப்பிரதிகள், இரண்டு மூன்று சத்தியத்தின் குரல் புத்தகங்களாவது இருக்கிறதா என்று உறுதிசெய்து கொள்வேன். சொல்லப்போனால், மேற்சொல்லப் பட்டவைகள் இருந்தால் தான் நான் பயனிப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்று அறிந்துகொள்வேன். மேலும், சில வேளைகளில் நான் தூரமான இடங்களுக்குப் பணியினிமித்தம் கடல் பயணத்தை மேற்கொள்ள வேண்டியதாயிருக்கும். அப்போதெல்லாம் நான் பெரிய தோள்பையில் 6 முதல் 10 சத்தியத்தின் குரல் புத்தகங்களைச் சுமந்து செல்வேன்.

நான் வாழும் இத்தீவில் ஒவ்வொரு மாலை வேளையிலும் சுமார் ஆறு மணி அளவில் அருகிலுள்ள கிராமங்களில் மணியோசை கேட்கும். அதை வைத்து நான் மாலை ஜெபவேளை ஆரம்பிக்கப்போகிறது என்பதைப் புரிந்து கொள்வேன். இந்த ஜெபநேரமானது பெரும்பாலும் குடும்பத் தலைவர்களால் நடத்தப்படும். மேலும், இது குறுகிய கால அளவை உடையதாயிருக்கும். நான் வாழும் இத்தீவில் எனக்குப் பிடித்தமான விஷயங்களில் ஒன்று, அந்த தியானக்கூட்டங்களை நடத்தும் தலைவர்களுக்கு சில நிமிடங்கள் எடுத்து அவர்களுக்கு சத்தியத்தின் குரல் புத்தகங்களைக் கொடுப்பதற்கு முன்பாக இப்புத்தகங்கள் வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டதென்றும், அதில் வேத வசனங்களும் உள்ளடக்கம் என்று சொல்லி அதன்பின்பு, இதில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் ஒரு பக்க அளவைக் கொண்டதென்றும், மாலை குடும்ப தியானவேளைக்கு இது மிகவும் பிரயோஜனமானது என்றும், சத்தியத்தை உறுதியாய் பற்றிக் கொள்வதற்கும் அதை அப்படியே வேத வசனங்களின்படி பின்பற்ற அது ஏற்றதென்றும் சொல்லுவேன். ✞

## மெய்யான இரட்சிப்பின் திட்டம்

தெய்வீக இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றிய சுருக்கமான வார்த்தைகள் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாக்கியங்களிலிருந்தே வெளிப்படுத்தப்பட்டன. **விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்** (மாற்கு 16 : 16 ). இரட்சிப்படைய இதைவிட சுலபமான வழி எதுவும் இருக்க முடியாது. மிக முக்கியமாக மனித மாற்று எதுவும் இதற்கு இணையாகாது ( மத். 7 : 21 – 23 ). மேலும், கிறிஸ்துவின் நியாயாசனத்தை எதிர்கொள்ளாமல், வேறு வழியில், முத்துக்களாலான பரலோக வாசல் வழியாய்ப் பிரவேசித்து, அதன் தங்க வீதிகளில் யாராலும் நடக்க முடியாது ( I கொரி. 5 : 10 ; வெளி. 21 : 21)

இரட்சிப்பு சம்பந்தமாக யாரும், இப்பூமியிலும், நித்தியத்திலும் தேவனோடு சமரசப் பேச்சுவார்த்தை நடத்த முடியாது. மேலும், நியாயத்தீர்ப்பின் நாளில், **கர்த்தாவே நாங்கள் இவைகளையெல்லாம் உமக்கென்றுதான் செய்தோம். நீர்தான் அவைகளைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை, அதனால் சற்றே காத்திடும்** என்று யாரும் சொல்லமுடியாது.அப்படியே சொன்னாலும், அது எதையும் சாதிக்காது.இரட்சிப்பு சம்பந்தமாக, நமது தவறான தெரிந்துகொள்ளுதலினால் ஏற்படும் நித்திய துயரத்தைத் தவிர்க்க, இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கவனித்து, அதற்குக் கீழ்ப்படிந்து, மெய்யான தெய்வீக இரட்சிப்பின் திட்டத்தைப் பெற்றிடுங்கள்.

# நன்றி சொல்லத் தடை செய்பவை

# Things that Hinder Thanks giving

***P.C. Philemon Rajah***

பிரியமானவர்களே! உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் எனது வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள். நாம் அனைவரும் சர்வ வல்ல பரலோக தேவனுக்கு நன்றி சொல்லவும், நன்றி செய்யவும் வேண்டுவது மிகவும் அவசியமானதால், அதைக்குறித்து நாம் தியானம் செய்வோம்.

நன்றி சொல்லவும், நன்றி செய்யவும் கர்த்தருடைய வார்த்தைகள் நம்மை உற்சாகப்படுத்துகின்றன. I தெச 5 : 18 எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது மற்றும் கொலே 3 : 17 வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.

எப்பொழுதும், எல்லாச் சூழ்நிலைகளிலும் நன்றி கூறுங்கள் மற்றும் நன்றி செய்யுங்கள் ( In everything give thanks to God ) என நம்மை இவ்வசனங்கள் தூண்டுகிறது. எபே. 5 : 20 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுது எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து மற்றும் எபி. 13 : 15 ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்.

இந்த உலகில் நாம் நன்றி சொல்லாதவர்களாகவும், நன்றி செய்யாதவர்களாகவும் இருக்க காரணங்கள் குவிந்து கிடக்கின்றன.மேலும் நன்றி சொல்ல வேண்டியவை என்ற பட்டியலில் நாமாகவே சிலவற்றை, இதற்கெல்லாமா நன்றி சொல்வது? இதற்கு மட்டும் நன்றி சொன்னால் போதும் என்று பிரித்திருக்கிறோம். எனவே நன்றி செலுத்த ( செய்ய, சொல்ல ) நம்மை தடை செய்யும் தடுப்புகளை இந்தப் பாடத்தின் மூலம் உடைக்க முற்படுவோம்.

**I. சிந்தனையற்ற நிலை** (Thoughtlessness)

நாம் உடைக்க வேண்டிய முதல் தடுக்கல் அல்லது தடைக்கல் சிந்தனையற்ற நிலை ஆகும். சிந்தியுங்கள் மற்றும் நன்றி செய்து விடுங்கள் (Think & Thank).

நாம் சிந்தித்து பார்க்க மறப்பதினாலேயே நன்றி செலுத்தவும் மறந்து விடுகிறோம். பரலோகக் கடவுள் நமக்கு செய்தவைகளை அடிக்கடி சிந்திக்க, எண்ணிப்பார்க்க மறந்துவிடுகிறோம். அதினாலேயே நன்றி செலுத்த மறந்து விடுகிறோம்.

பரலோக தேவன் நம்மீது அன்பும் கரிசனையும் உள்ளவர் என்று எண்ணிப்பார்க்க ( சிந்திக்க ) மறந்துவிடுகிறோம். சங்கீதங்களில் நிறைய சங்கீதங்கள், நன்றி பாடல்களே! வாசியுங்கள். சங் 30 : 1 – 12. வசனம் 10 – 12 ல், கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன்; கர்த்தரை நோக்கிக் கெஞ்சினேன். என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர்; என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இருட்டைக் களைந்துபோட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர்.என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை என்றென்றைக்கும் துதிப்பேன். மேலும் வாசியுங்கள் சங் 103 : 1 – 5 மற்றும் சங் 106 : 13. தாவீது ஒவ்வொன்றாக எண்ணி, எண்ணி கணக்கில் எடுத்துக் கொண்டு நன்றி செலுத்துகிறார்.

நாம் எந்த வழிகளில் எல்லாம் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளோம்?உணவு, உடை, உறவு, மன்னிப்பு, மீட்பு, சத்தியத்தை (பைபிள்) பற்றிய அறிவு, பரலோக கடவுளின் கிருபை, இரக்கங்கள் இன்னும் பட்டியல் பல பக்கங்களுக்கு நீளும் என்பதில் ஆச்சரியமில்லை. ஆகையால், அவைகளை ஒவ்வொன்றாக எண்ணி, எண்ணி கணக்கில் எடுத்துக்கொண்டு தேவனுக்கு நன்றி செலுத்தகடவோம்.

**II. விசுவாசமில்லாமை** ( Faithlessness )

நன்றி செலுத்த தடுக்கும் இரண்டாவது தடைக்கல் விசுவாசிக்க மறுத்தல் அல்லது விசுவாசமில்லாத தன்மை ஆகும்.ரோமர் 1 : 20 – 21 அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது.

தேவன் கொடுத்த நன்மையானவைகளை அனுபவித்தாலும், அதை தேவன் தான் கொடுத்தது என்று ஏற்க மறுப்பதும், அல்லது அதை நம்ப மறுப்பதும் நன்றி செலுத்த மிகப்பெரிய தடைக்கல் ஆகும். ஆயினும் பரலோக

கடவுள் சகல ஆசீர்வாதமும் தருபவராக இருக்கிறார்.

III. **திருப்தியற்ற நிலை** ( Discontentment )

நன்றி செலுத்த தடுக்கும் மூன்றாவது தடைக்கல் அதிருப்தி (திருப்தியற்ற) நிலை அல்லது மனநிறைவற்ற தன்மை ஆகும்.ஆகையால் நமது மனநிறைவு நேர்மையாகவும் உண்மையாகவும் இருப்பதற்கு, நன்றி செலுத்தும் முன்பாக நாம் திருப்தியை அல்லது மனநிறைவை அபிவிருத்தி செய்யவும், அதை நமக்கு நாமே உருவாக்கிக்கொள்ளவும் வேண்டும்.

பிலி 4:11-12 என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்.

வேத வசனங்கள் நமது மனநிறைவை வளர்க்க நம்மை ஊக்கப்படுத்து கின்றன. 1 தீமோ 6 : 6 - 8 போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலி ருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம்.

IV. **சுயநலம்** ( Selfishness )

நன்றி செலுத்த நம்மை தடுக்கும் நான்காவது தடைக்கல் சுயநலம் ஆகும்.

மத் 18 : 33 - 35 நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி, அவனுடைய ஆண்ட வன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப் பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்.

பல கோடி ரூபாய் கடனை அடைக்க பல ஆண்டுகள் உழைத்தாலும் சிரமப்பட வேண்டியவனை, அவன் முதலாளி மன்னித்து வாழ வைத்தான். ஆனால் மன்னிப்பு பெற்றவன், பெற்ற நன்மையை சிந்தித்துப் பார்த்து நன்றி நிறை மனம் இல்லாதவனாயிருந்தபடியால், அவனிடம் சில நூறு கடன்

பெற்றவனை சில ஆண்டுகள் தண்டனை பெற்றே ஆகவேண்டி சிறையில் போடுகிறான். காரணம், அவனது சுயநலம்.

இன்றைக்கும் கொள்ளைக்காரர்களும், வட்டிக்கு பணம் கொடுப்பதைத் தொழிலாக செய்யும் சில கிறிஸ்தவர்களும், தேவனுடைய மிகப்பெரிய தண்டனை நமக்குண்டு என்ற எண்ணமற்றுப் போய், என் பணம், நான் பிழைக்க வேண்டுமே, தனக்கு மிஞ்சினது தான் தானமும் தருமமும் என்ற மனப்போக்குடனே வாழ்வதற்கு காரணம் சுயநலம் ஆகும்.

செய்ய வேண்டிய நன்றியை ஏன் செய்ய வேண்டும்?என்று எண்ணிப் பார்க்க மறக்கின்ற இவர்கள் சுயநலமானவர்களே! அப்படிப்பட்ட சுயநலமிக்க வர்கள் சொல்வது: ஏன் நன்றி சொல்ல வேண்டும்? நான் கஷ்டப்பட்டு, பாடுபட்டு சம்பாதித்தேன் இதற்குப்போய் கடவுளுக்கோ, மற்றவர்களுக்கோ ஏன் நன்றி சொல்ல வேண்டும்? என்கிறார்கள்; அல்லது அந்த எண்ணமுடையவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் சுயநலமிக்கவர்களே!

எல்லாவற்றிலும் நன்றியறிதல் உள்ளவர்களாய் இருங்கள் என்று வேதம் கூறுகிறது. சிலர் கூறுவர் முழுவதும் வரவில்லையே, வரவேண்டியது எல்லாம் வரவில்லையே பிறகு ஏன் நன்றி சொல்ல வேண்டும்? என்பார்கள். இன்னும் சிலர், எனக்குப் யார் உதவினார்கள்?நான் ஏன் உதவி செய்யனும்?நான் உதவியும் செய்யவில்லை, உபத்திரவமும் பண்ணவில்லை என்று நினைப்பார்கள் இதுவெல்லாம் சுயநலமேயாகும்.

**V. புறக்கணிப்பு** ( Neglect )

நாம் தேவனுக்கு நன்றி செலுத்த தடைகளாக இருப்பவைகள் என்ன?

1. சிந்தனையற்ற தன்மையா?
2. விசுவாசமற்ற தன்மையா?
3. திருப்தியற்ற (மனநிறைவற்ற)தன்மையா?
4. சுயநலமா?
5. புறக்கணிப்பதால் தோல்வியா? எனச் சிந்தித்து, எது நம்மைத் தடுக்கிறதோ அதை வேத வசனத்தினால் பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்தலின்படி உடைத்து, நன்றியுள்ளவர்களாக வாழ்வோம்!

✝

# கிருபையும் கிறிஸ்தவர்களின் நடத்தையும்

# *Grace and Christians Activity*

B. Arjunan

**கி**ருபையை நாம் சொல்லால் சொல்லிவிட முடியாது அந்த அளவு தேவன் நமக்குக் கிருபை செய்துள்ளார். **முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்** (எபே . 5 : 8). கிறிஸ்து இயேசுக்குள் வருவதற்கு முன்பு நாம் அந்தகாரமாயிருந்தோம். அந்தகாரம் அதாவது பாவ இருள் நம்மைப் பற்றிக்கொண்டிருந்தது.ஆகையால் பழைய மனிதனுடைய வாழ்க்கையில் நாம் அந்தகாரமாயிருந்தோம். **முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களைப் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்** (கொலோ. 1 : 21). நாம் தேவனுக்கு சத்துருக்களாயிருந்தோம். அதாவது, பிசாசின் உபதேசங்களுக்குச் செவிகொடுத்த அந்நியர்களாகவும் துர்க்கிரியைகளை நடப்பிக்கிறவர்களாகவும் இருந்தோம்.இப்படிப்பட்ட நம்மை தேவன் இயேசுகிறிஸ்துவின் மரணத்தினால் அதாவது அவருடைய இரத்ததினால் கழுவி நீதிமான்களாக்கினார். இது அவருடைய கிருபையல்லவா!

மேலும், **அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள்** (எபே. 2 : 12). நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாது இருந்த காலத்தில் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாக இல்லை. அந்நியர்களாகவும், நம்பிக்கையற்றவர்களாகவும், இவ்வுலகித்தில் தேவன் என்றால் யார் என்று கேட்கக்கூடிய அளவிற்கு தேவனற்ற வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்தோம் என்பதை பவுல் நினைப்பூட்டுகிறார். இஸ்ரவேலை தெரிந்துகொண்ட தேவன் அவர்களோடு மட்டுமே வாசம் பண்ணினார். மற்ற யாவரும் தேவனை அறியாதவர்களாக மரம், செடி, கொடிகள் மற்றும் ஆடு, மாடு, பாம்பு போன்றவைகளை வணங்கிக்கொண்டும்,

இதுவே நம்மை உண்டாக்கின தேவன் என்று சொல்லிக்கொண்டும் பாரம்பரியமாக வாழ்ந்து வந்தோம் என்பதையும் நினைப்பூட்டுகிறார். மேலும் பவுல் ஒரு காலத்தில் தேவனுடைய சித்தத்தை அறியாதவராக இருந்து இந்த மார்க்கத்து புருஷரையும் ஸ்திரீகளையும் மரண பரியந்தமும் துன்பப்படுத்தினதாக அப். 22 : 4- ல் சொல்லுவதை வாசிக்கிறோம். தேவனை அறியாது இருந்தபோது பவுல் ஒருவகையில் நம்மைப்போல தேவனை அறியாதவராக இருந்தார். கர்த்தர் அவரைச் சந்தித்தபோது அவருக்கும் அவருடைய வல்லமையுள்ள சுவிசேஷத்திற்கும் கீழ்ப்படிந்து தாமதமில்லாமல் ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் இணைக்கப்பட்டு, ஒரு வல்லமையுள்ள அப்போஸ்தலனாகவும், ஆசிய முழுமைக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும் மாபெரும் சுவிசேஷகனாகவும் அநேக இடங்களில் சபைகளை ஏற்படுத்தி கர்த்தருடைய சபைக்கு முன்மாதிரியான ஊழியக்காரனாகவும் இருந் தார். இது அவருக்கு கிடைக்கப்பெற்ற கர்த்தருடைய கிருபை என்றே சொல்ல வேண்டும்.

இன்றைக்கு கர்த்தருடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்ட நாம் எப்படியிருக்கிறோம்? **கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்** என்கிறார் பவுல். அப்படியானால் ஒருவனுடைய பழைய ஜீவியமானது முற்றிலுமாக அழிக்கப் பட்டுவிட்டது. இப்போது புதுசிருஷ்டியாக இருக்கிறான். இதையே பவுல்; **ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின** என்கிறார் (2 கொரி. 5 : 17). முன்னே அந்நியராக இருந்தவன் கிறிஸ்துவுக்குள் வந்தவுடன் புதுச்சிருஷ்டியாகவும் வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைக்கு பங்காளியுமாகிறான். எத்தனை ஆசீர் வாதம்! மேலும், **ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடை வதற்கு, நம்மை தகுதியுள்ளவர்களாக்கினவரும், இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.( குமாரனாகிய ) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது** (கொலோ. 1:12 – 14).

மேலும், அதே வசனத்தில் வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடந்துகொள் ளுங்கள் எனக் காண்கிறோம். வெளிச்சத்தின் பிள்ளைகளாக எப்படி நடந்து கொள்வது. இருளுள்ள ஸ்தலத்தில் வெளிச்சம் கொடுக்கிற ஒரு விளக்கைப் போன்று இருக்க வேதம் நம்மை ஊக்கப்படுத்துகிறது. ஏனென்றால் அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம்

**சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்** (1 யோவா.1 : 7).தேவன் எப்படியிருக்கிறாரோ அப்படியே ஒவ்வொரு கிறிஸ்தவனும் இருக்கவேண்டும். அப்படிச் செய்யும்போது தேவன் நம்மோடிருப்பார். அந்த வெளிச்சத்திலே வெளிச்சம் காணலாம். ஒருவரோடு ஒருவருக்கு ஐக்கியம் ஏற்படும்.அப்பொழுது நம்முடைய சகல பாவங்களும் நமக்கு மன்னிக்கப்படும். காணும் சகோதர னோடு ஐக்கியமாக இல்லையென்றால் காணாத தேவனோடு நாம் எப்படி ஐக்கியம் கொள்ளமுடியும்? தேவன் எல்லோரையும் நேசிக்கிறார். அவருக்கு ஒரே ஒரு எதிராளிதான். அவனே பிசாசு. அவன் ஆதிமுதல் மனுஷ கொலைபாதகனா யிருக்கிறான். அவன் ஒருவனே தேவனுக்கு சத்துருவாக இருக்கின்றான் எனக் காண்கிறோம். **நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவ னுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத் தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்** (ரோ.12 : 2 ). இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பிசாசின் செயல்பாடுகளோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைப்போல நீங்களும் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஏற்றார் போல ஒத்தவேஷம் தரித்துவிடக்கூடாது. அவர்களுக்கும் நமக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. நாம் தேவனுடைய ஜனங்கள் ஆகவே, தேவனைப் போல நலமான காரியங்களைச் செய்யவேண்டும். ஒவ்வொரு நாளும் தேவனுடைய ஜனங்கள் மறுரூபமாகவேண்டும். மறுரூபம் என்று சொல்லும்போது உடையை மாற்றுவதுபோல நம்மை மாற்றிக்கொள்வது அல்ல. வாழ்க்கையில் தவறிலிருந்து விடுபட்டு, நற்கிரியைகளைச் செய்கிறதில் நாளுக்கு நாள் நம்முடைய செயல்பாடுகள் மாறிக்கொண்டே இருக்க வேண்டும்.

அந்த மனிதன் நேற்றுவரை வாழ்ந்த வாழ்க்கையைப் பாருங்கள். அவர் ஒரு குடிகாரனாகவும், கொள்ளைக்காரனாகவும், கொடூரமானவராகவும் இருந்தார். இப்பொழுது கர்த்தர் என் ஆண்டவர் என்று சொல்லி வாய்பேசாத ஆட்டைப்போல மாறிவிட்டார் என்று ஜனங்கள் சொல்லும் அளவிற்கு ஜனங்கள் மத்தியில் மாற்றம் ஏற்படவேண்டும். இதுவே மறுரூபப்படுவது. இப்படி நாளுக்கு நாள் மாற்றப்படும்போது ஆண்டவர் இயேசுவின் சாயலுக்கு ஒப்பாக மாறுவோம். **இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் போர்கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான். அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டார னைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான்** (அப்.10 : 1, 2). இந்த கொர்நேலியு ஆண்டவர் இயேசுவை குடும்பத்துடன் ஏற்றுக்கொண்டு ஒரு சாட்சியுள்ள மகனாக அந்நாட்டு மக்கள் மத்தியில் வாழ்ந்திருக்கிறார்.அவருக்கு யாராவது

காசுகொடுப்பார்கள் என்றோ, அல்லது அரசாங்கத்தில் சலுகை கிடைக்கும் என்றோ எதிர்பார்த்து வாழவில்லை. தன் வீட்டாரோடு தேவனுக்குப் பயந்து வாழ்ந்தார்.தான் பட்டாளத்தில் வேலைசெய்து கிடைக்கக்கூடிய பணத்தை தன் வீட்டுத் தேவைக்குப் போக ஜனங்களுக்கும் தானதர்மம் செய்யும் பழக்கத்தை உடையவராக இருந்திருக்கிறார். இன்றைக்கு நாம் இவரை மாதிரியாக எடுத்துக் கொள்ளலாம். நமக்கும் ஒரு வேலையிருக்கிறது. அந்த வேலையில் பணம் கிடைக்கிறது. நம்முடைய வீட்டுதேவைகள் போக இவரைப்போல தானதர்மம் செய்கின்றோமா? நம் வீட்டாரோடு தேவனுக்குப் பயந்து ஜீவிக்கின்றோமா? என்று நம்மையே கேட்டுப்பாருங்கள். அந்த ஜனங்கள் மத்தியில் தேவனுடைய நாமத்தை பறைசாற்றும் ஒரு கொர்நேலியு வாழ்ந்திருக்கிறார். அநேகருக்கு வெளிச்சம் காட்டுகிற மகனாக வாழ்ந்திருக்கிறார். நீங்கள் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்? சத்தியத்திலே நாம் நடந்தால் நம்மை வழி நடத்தியவர்களுக்குச் சந்தோஷம் ஏற்படும்.யோவான் பிரியமான அம்மாளுக்கு எழும்போது; **பிதாவினால் நாம் பெற்ற கற்பனையின்படியே உம்முடைய பிள்ளைகளில் சிலர் சத்தியத்திலே நடக்கிறதை நான் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன்** என்கிறார்(2 யோவா. 4).

ஆம், **அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய (அதாவது இயேசுவினுடைய)இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது** என தெளிவாக எபே.1 : 7-ல் படிக்கிறோம். இந்த ஐசுவரியத்தின் கிருபையை அசட்டை செய்யாமல். இயேசுவின் பாடுகளை நோக்கிப்பார்த்து இரட்சிக்கப்படுங்கள். எனக்காக ஒருவர் மரித்திருக்கும்போது அவருடைய உபதேசம் என்ன?அவருடைய போதனை என்ன? என்பதை வேதாகமத்தின் துணைகொண்டு வாசித்து தெரிந்துகொள்ளுங்கள். இந்த உலகத்தில் இப்படிப்பட்ட போதனைகள் அநேகருக்கு மதமாகத் தோன்றுகிறது. பாரம்பரியக் கட்டுகள் அவர்களை கட்டிவைத்திருக்கிறது. ஆகையால் இவைகளுக்குச் செவிகொடுக்க அவர்களுடைய செவி திறப்பதில்லை. இச்செய்தியை கேட்கும் அன்பு நேயரே, நீங்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள். உங்களை நீங்களே இந்த உலகத்தில் இரட்சிக்க முடியாது. உங்களுக்கு ஒரு இரட்சகர் தேவை. அவர் பரிசுத்தமுள்ளவராகவும் பாவம் அறியாதவராகவும், இவ்வுலகத்திற்கு அப்பாற்பட்டவராகவும் இருக்கவேண்டும். அவர் இயேசு ஒருவரே. அவரே உங்கள் பாவத்தைப் போக்கும் பலியாக இவ்வுலகத்திற்கு தேவனால் அனுப்பப்பட்டவர். அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே நமக்கு பாவமன்னிப்பாகிய மீட்பு உண்டாயிருக்கிறது. இதை அறிந்துகொண்டு இரட்சிக்கப்பட பிரயாசப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# வாழ்க்கையின் துயரங்களோடு கர்த்தரைச் சேவித்தல்

## Serving God Along With The Sorrows Of Life

*Bro. E.Z. Selvanayagam*

நம்முடைய வாழ்க்கையில் இருக்கிற குறைவுகள், ஏற்படுகிற துன்பங்கள் அநேக சமயங்களில் நம்மைச் சோர்வடையச் செய்து வாழ்க்கையைக் கசப்பாக்கி விடுகிறது. நமக்குத்தான் ஊரில் இல்லாத துன்பங்களும், பிரச்சனைகளும் இருக்கின்றன. மற்றவர்கள் எல்லாம் எவ்வளவோ மகிழ்ச்சியாயிருக்கிறார்கள். இத்தனைக்கும் அவர்கள் தேவபக்திக்குரிய காரியங்களை இகழ்ந்தும், அசட்டை செய்தும் தங்கள் இச்சைகளுக்கேற்றபடி வாழ்கிறார்கள். சொத்து மேல் சொத்து சேர்கிறது. எடுத்த காரியங்களை வெற்றியோடு முடிக்கிறார்கள். சர்வமும் நிறைந்து காணப்படுகிறது என்றெல்லாம் எண்ணி, நாம் கடவுளைப் பற்றிக் கொண்டிருப்பதால் என்ன நன்மையைக் கண்டடைந்தோம் என்று புலம்புகிறோம். தயவு செய்து 73 ம் சங்கீதத்தை ஜெபத்துடன் வாசித்துச் சிந்தியுங்கள்.

வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்கள், துன்பங்கள் யாவுமே தீமையானவைகள் என்று ஒட்டுமொத்தமாக நினைத்துவிடக் கூடாது. பூச்சி, புழுக்கள் எல்லாம் பயிர்களை அழித்து நாசம் செய்து விடுகின்றன என்று பொதுவாக நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால், சில வகைப் புழுக்கள் பயிர்களுக்கு மிகவும் உபயோகமான பணிகளைச் செய்கிறதாக விவசாய நிபுணர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, சில துன்பங்களும், கஷ்டங்களும் வாழ்க்கையில் நாம் வெற்றி அடைவதற்கு இன்றியமையாதவைகள் என்று அறிந்து ஆறுதல் அடைய வேண்டும்.

நம்முடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதற்கு தேவன் சில வேளைகளில் நம்மைச் சிட்சிக்க வேண்டியிருக்கலாம். ஓர் அறுவைச் சிகிச்சை நிபுணர் தன் நோயாளிகளில் ஒருவரைப் பார்த்து நான் உம்மைக் காயப்படுத்தவேண்டிவரலாம். ஆனால், உம்மை வேதனைப்படுத்த மாட்டேன் என்றாராம். ஆம், நம்மைப் பரிசுத்தப்படுத்துவதற்கு தேவன் நம்மைக் காயப்படுத்த நேரிடலாம். ஆனால், நிச்சயமாக வேதனைப்படுத்த மாட்டார். இதை எபிரெய ஆசிரியர்

விளக்கும் போது, அன்றியும் நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும் போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாக அடங்கி நடக்க வேண்டுமல்லவா? அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள். இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும், பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும் என்கிறார். (எபி 12 : 9 - 11) சிட்சையை அதாவது, கடிந்து கொள்ளுதலை எல்லாருமே விரும்புவதில்லை. ஆனால், அது கர்த்தருடைய பரிசுத்தத்துக்கு நம்மைப் பங்காளியாக்குகிறதே.

நமக்கு நேரிடும் சோதனைகளைக் குறித்து பேதுரு கூறும்போது, அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும் என்கிறார் ( I பேதுரு. 1:7).

நாம் கிறிஸ்துவுக்காகப் படுகிற துன்பங்கள் ஒரு போர் வீரன் யுத்தத்தில் பெறும் விழுப்புண்களுக்குச் சமமானது. அப்போஸ்தலன் பவுல் கலாத்தியருக்கு எழுதும்போது **இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக; கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன்** என்று கூறுகிறார் (கலா 6 : 17). தான் கிறிஸ்துவுக்காகப் பாடுபட்டதினால் ஏற்பட்ட தழும்புகளை மனதில் கொண்டு இப்படி எழுதுகிறார். பழைய ஏற்பாட்டில் யோனாவின் எட்டு வார்த்தைப் பிரசங்கம் நினிவே பட்டணத்து மக்களையும், அரசனையும் உலுக்கியதே, அதற்குக் காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்? யோனா திமிங்கலத்தால் விழுங்கப்பட்டபோது அதன் செரிமான அமிலத்தால் அவன் கூழாகாமல் தப்பின விந்தை அவர்கள் காதுகளுக்கு எட்டியிருக்கலாம். அல்லது அவன் மூன்று நாட்களுக்குப் பிறகு கடற்கரையில் திமிங்கலத்தால் வாந்தி பண்ணப்பட்டதை அப்பட்டணத்தாரில் எவராவது ஒருவர் பார்த்து விட்டுப் போய் அதை ராஜாவிடம் அறிவித்திருக்கலாம். நமக்குச் சரியாய்த் தெரியவில்லை. ஆனால், ஒன்று நிச்சயம். அவனுடைய வாழ்க்கையில் நடந்த இந்த அற்புத சம்பவமும், அதனால் அவன் அடைந்த துன்பங்களும் அதன் விளைவாக அவனுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றமும் தான் அந்த மக்களை மனம்திரும்ப வைத்தது என்று துணிந்து கூறலாம். துன்பத்தைப் பற்றி நமக்குப் பட்டறிவு இல்லாமல்

மற்றவர்களைத் தேற்றுவதும், மாற்றுவதும் எப்படி? ஆகவே, நமக்கு ஏற்படும் துன்பங்களையும் பாடுகளையும் கண்டு துவண்டு போகக்கூடாது.

சில பேர், குறிப்பாகப் பெண்கள் தாங்கள் அழகாக இல்லையே! என்று குறைப்பட்டுக் கொள்கின்றனர். புற அழகை விட நற்குணமே சிறந்தது. அழகுள்ளவர்களெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று எண்ணி விடக் கூடாது. கொஞ்ச நாட்களுக்கு முன்பு பேரும், புகழும் பணமும் படைத்த ஒரு சினிமா நடிகை தற்கொலை செய்து கொண்டதாக செய்தித் தாள்களில் வாசித்தேன். அவளுடைய அழகும், பேரும். புகழும், பணமும் அவளுக்கு வாழ்க்கையில் நிம்மதியைத் தரவில்லை என்பது தானே அவள் அகால மரணம் கூறுகிற சோகக்கதை. ஆகவே, புற அழகை விரும்பி, அதில் தங்கள் கவனத்தைச் செலுத்திக் கொண்டு அக அழகைப் புறக்கணிக்கலாகாது என்று அப்போஸ்தலன் பேதுரு அறிவுரை கூறுகிறார். **மயிரைப் பின்னி பொன்னா பரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந் தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது** என்கிறார் (I பேதுரு 3 : 24). நீதி மொழிகளிலும் **சௌந் தர்யம் வஞ்சனையுள்ளது ; அழகும் வீண். கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்** என்று அழகின் மாயையையும், புத்தியில்லாமல் வெறும் அழகாக மட்டும் இருக்கிற பெண்களை ஒப்பிட்டு கூறும்போது **பன்றியின் மூக்கி லுள்ள பொன் மூக்குத்திக்குச் சமானம்**

நமக்கு அடுக்கடுக்காய் உபத்திரவங்கள் வரும்போது யோபுடைய மனைவியின் மனநிலை ஏற்பட்டு விடுகிறது (யோபு 2 : 9). ஆனால், அதை முயன்று வென்று, யோபுவின் மனநிலைக்கு வரப் பிரயாசப்பட வேண்டும் (யோபு 2 : 10). பல நூற்றாண்டுகளாகியும் யோபின் சகிப்புத் தன்மையும் பொறுமையும் பலராலும் பாராட்டப்படுகின்றன (யாக் 5 : 11). உபத்திரவம் வளர்த்துவிடும் சில நற்பண்புகளைப் பற்றி அப்போஸ்தலன் பவுல் கூறுவதைக் கேளுங்கள். **உபத்திரவம் பொறுமையையும், பெறுமை பரீட்சையையும் ( மனத்தின்மை ), பரீட்சை நம்பிக்கையையும், உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்** என்கிறார் (ரோமர் 5 : 3 – 4).

சிலருக்குத் தாங்கள் ஐசுவரியவான்களாக இல்லையே என்ற மனக்குறை உண்டு. சகோதரர்களே, ஐசுவரியம் வஞ்சனையுள்ளது. பல நற்பண்புகளை அடகு வைத்துத்தான் ஒருவன் செல்வந்தனாக முடியும். ஆகவே, செல்வம் சேர்க்கும் ஆசையே கூடாது. பிரசங்கி இதைக் குறித்து எவ்வளவு தெளிவாய் சொல்லியிருக்கிறார் என்று பாருங்கள். தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு ஞானத்தையும் அறிவையும் இன்பத்தையும் அளிக்கிறார் ;

பாவஞ்செய்கிறவனுக்கோ தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவன் வசமாய் வைத்து விட்டுப் போகும் பொருட்டுச் சேர்த்து குவித்து வைக்கும் தொல்லையை அவர் நியமித்திருக்கிறார் (பிர 2 : 26). இதையெல்லாம் மனதில் கொண்டு தான் பவுல் அடியார் போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்றும், பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது ; சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிவுறுத்தி எச்சரிக்கை செய்கிறார் (I தீமோ 6 : 6, 10 ).

வாழ்க்கையில் நமக்கு நேரிடுகிற கஷ்டங்களும் துன்பங்களும் நமக்கு நன்மையே செய்கின்றன. ஒவ்வொரு குறையும் நம்மைக் கடவுள் பக்கமாக இழுத்துச் செல்லுகிறது. கிறிஸ்துவினிமித்தம் நமக்குப் பலவிதமான நிந்தைகள், ஏன் மரணமே சம்பவிப்பதாயிருந்ததாலும் நாம் நீடிய பொறுமையோடு அவற்றைச் சகித்துக் கொள்வது கர்த்தருக்குப் பிரியமான பண்பு என்று கிறிஸ்தவ நெறி நமக்குப் போதிக்கிறது.

ஆகவே, நாம் செய்ய வேண்டியது, நம்மைச் சுற்றியுள்ள மக்கள் கூட்டத்தைப் பார்த்து ஆறுதல் அடையப் பழகிக் கொள்ள வேண்டும். பலர் பல்வேறு நிலைகளிலிருந்து தேவனுடைய பிள்ளைகளாகும்படி அழைக்கப் பட்டிருக்கிறார்கள். அவரவர் நிலையில் உண்மையுள்ளவர்களாக மன அமைதலோடு கர்த்தருடைய பாதையில் பொறுமையோடே ஓட வேண்டும். கொரிந்து திருச்சபைக்கு பவுல் அப்போஸ்தலன் வரைந்த முதல் நிருபத்தின் 7 - ம் அதிகாரம் 17 முதல் 24 வசனங்களை வாசித்து அதன் கருத்தைச் சிந்தித்துத் தெளிவு பெறுவோமாக! ✝



# அறிஞனின் அறியாமை

ஹெர்பெர்ட் ஸ்பென்சர் ( Herbert Spencer, 1820 - 1903 ) என்ற பிரிட்டிஷ் தத்துவஞானி, தன்னுடைய வாழ்க்கை முழுவதையும் ஆராய்ச்சிக்கும், பரிசோதனைக்கும் செலவழித்துவிட்டு இறுதியில் இவ்வாறு சொல்கிறார். விஞ்ஞானத்தின் ஐந்து அடிப்படைகள் உண்டு : **Time** (காலம்), **Force** (சக்தி), **Action** (செயல்), **Space** (ஆகாயம்), **Matter** (பொருள்). சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒருவர் எழுதி வைத்துள்ளதைத் தான் எதிரொலிக்கிறோம் என்பது அவருக்கு குறைவாகவே தெரிந்துள்ளது. எழுதின மனிதர் மோசே, அவர் எழுதினது ஆதியாகமம். வாசகம் இது தான் : ஆதியிலே (காலம்), தேவன் (சக்தி), வானத்தையும் (ஆகாயம்), பூமியையும் (பொருள்), சிருஷ்டித்தார் (செயல்) (ஆதி 1: 1) என்பது.

# கிறிஸ்துவைப் பிரதிபலிப்போம்

# Let's Reflect Jesus

*Bro. Benny Martin*

உலகத்திலே நாம் எல்லாவகையான பிரச்சனைகளையும் பார்க்கிறோம். உதாரணமாக பகை, போர், கொலைகள், ஒழுக்கக் கேடுகள், பாலியல் பலாத்காரங்கள், சமுதாயப் பின்னணி, மதம் மற்றும் பதவிப் பின்னணிகளை அடிப்படையாக வைத்து பட்சபாதம் காட்டுதல், வியாபாரங்களில் ஏமாற்று, மோசடி திருட்டு போன்ற காரியங்கள் இந்த உலகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதுபோன்ற காரியங்கள் நம்மை அதிகமாக துக்கப்படுத்துகின்றன. இவைகளின் முடிவைக்காண நாம் விரும்புகிறோம். ஒரு வேளை நாம் இந்த உலகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரியங்களைப் போல கிறிஸ்தவர்கள் மத்தியில் நடைபெறுவதில்லை என்று நினைக்கத் தோன்றும். ஆனால், இதைப்பற்றி நீங்கள் ஆழமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று உங்களை நான் உற்சாகப்படுத்துகிறேன்.

உலக முழுவதும் நாம் பார்க்கும் போது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையை பிரிவினை, மாய்மாலம், கள்ள உபதேசங்கள், உலகத்தாரைப்போன்று வாழ்க்கை நடத்துதல், பொய், ஏமாற்று சபை காரியங்களில் ஈடுபாடின்மை போன்ற காரியங்கள் சீரழித்து வருகின்றன. இன்று அநேக கிறிஸ்தவர்கள் தேவனையும், அவருடைய ராஜ்யத்தையும் விட அதிகமாக உலகப் பொருள்களை நேசிப்பதும், தேவனுடைய ராஜ்யம் விரிவடைவதற்காகக் கொடுக்க வேண்டிய அளவிற்கு கொடுக்காமலும் இருக்கிறார்கள்.

கிறிஸ்தவர்கள் மத்தியில் நடைபெறும் இதுபோன்ற காரியங்கள் நம்மை அதிகமாகத் துக்கப்படுத்த வேண்டும். சபையிலே இதுபோன்ற காரியங்களைக் களைந்தெரிய நாம் பாடுபடவேண்டும். இது போன்ற பிரச்சனைகள் எல்லாம் உலகத்திலும், சபையிலும் ஏன் காணப்படுகின்றன? அநேகப் பிரச்சனைகள் ஜனங்கள் சரியாக சிந்திக்காமல் இருப்பதால் தான் ஏற்படுகின்றன. நாம் எப்படிப்பட்ட சிந்தையுடையவர்களாய் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ அப்படி சிந்தியாமல் இருப்பதால் அநேக பிரச்சனைகளை நாம்

சந்திக்கிறோம். அதாவது, கிறிஸ்துவின் குணாதிசயங்களை, நாம் வாழ்கின்ற இந்த உலகத்தில் பிரதிபலிக்கிறவர்களாக இருந்தால் எல்லாப் பிரச்சனைக் களுக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிடலாம். கிறிஸ்துவின் குணாதிசயங்களைப் பிரதிபலிக்க வேண்டுமென்றால் அவர் எப்படிப்பட்ட குணாதிசயங்களை உடையவராய் இருந்தார் என்பதை நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

**தாழ்மை**

அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் (பிலி. 2 : 6,7). நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தாழ்மைக்கு சிறந்த முன்மாதிரியாக இருக்கிறார். பெருமையும், கர்வமும் பிடித்த இந்த உலகத்தில், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாகிய இயேசு தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். நாமெல்லாரும் இயேசு கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்ற கட்டளை பெற்றிருக்கிறோம். மேலும், பெருமையானது கர்த்தர் வெறுக்கும் காரியங்களில் ஒன்றாக இருக்கிறது. **மனமேட்டிமை யுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்** என்று நீதிமொழிகள் 16 : 5ல் நாம் வாசிக்கிறோம்.

வேதாகமத்தில் தேவனுக்கு விரோதமாகப் பெருமை பாராட்டியவர்கள் ஒன்றுமில்லாமல் போயிருக்கிறார்கள். பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மை உள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் என்பதை நாம் உணர்ந்து செயல்படவேண்டும். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ர வேல் ஜனங்களை வழி நடத்திச் சென்ற மோசே ஒரு மாபெரும் தலைவனா யிருந்தும் தன்னை முற்றிலுமாகத் தாழ்த்தினான் என்று பார்க்கிறோம். எண்ணா கமம் 12 : 3ல் மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்த முள்ளவனாயிருந்தான் என்று நாம் வாசிக்கிறோம். எனவே தேவன் நம்மை ஏற்ற காலத்தில் உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்க வேண்டும்.

**அன்பு**

அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார் (I யோவான் 4 : 8 ). அன்பான தேவனை பெற்றுக்கொண்டிருக்கிற நாம் அன்பிலே குறைவுள்ளவர்களாயிருக்கிறோம். முன்பு ஒரு காலத்தில் கிறிஸ்தவர்கள் அன்புக்கு பேர் போனவர்கள் நான் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்கள் நிலங்கள், உடைமைகளையெல்லாம் விற்று

இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவி செய்தார்கள். எனவே, சகோதரர்கள் மத்தியில் சமத்துவம் ஏற்பட்டது. ஆனால், இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் மத்தியில் அன்புக்கு மிகப்பெரிய குறைவு ஏற்பட்டுள்ளது. கிறிஸ்து எவ்வளவு அன்பும், மனதுருக்கமும் உடையவராக இருந்தார். எனவே, கிறிஸ்துவை பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொண்டு அன்பில்லாமல் இருந்தால் அது வீணான காரியமாகும். யோவான் 13 : 34,35 வசனங்களில் இயேசு, **நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன் நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர் களாயிருந்தால் அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார்.** நாம் மற்றவர்களிடம் அன்பு செலுத்து வதினால் கிறிஸ்துவின் நாமத்தை நிச்சயமாகவே மகிமைப்படுத்த முடியும்.

இந்த உலகமானது கிறிஸ்தவர்களிடமிருந்து அதிகமான காரியங்களை எதிர்பார்க்கிறது. எனவே தான் கிறிஸ்தவர்கள் ஏதாவது தவறான காரியத்தை செய்துவிட்டால் இவர்களா இப்படிச் செய்தார்கள் என்று ஆச்சரியத்தோடு கேட்பதுண்டு. கிறிஸ்துவைப் பற்றியும் அவருடைய போதனைகளைப் பற்றியும் உலகத்தாரும் கூட ஓரளவு அறிந்து வைத்திருக்கிறார்கள். எனவே தான் கிறிஸ்தவர்களாகிய நமக்கு கிறிஸ்துவின் குணாதிசயங்களைப் பிரதிபலிப்பது அவசியமாயிருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரிலொருவர் அன்புள்ள வர்களாயிருந்தால் நாம் கிறிஸ்துவின் சீஷர்களென்று உலகம் அறிந்து கொள்ளும், அதினால் தேவனுடைய நாமம் மகிமைப்படும். ஆவியின் கனியைக் கொடுக்க கிறிஸ்தவர்களாகிய நாம் கடமைப்பட்டிருக்கிறோம். **ஆவி யின் கனியில் அன்பு தான் முதலிடம் வகிக்கிறது.** அன்பானது எல்லா நற்காரி யங்களுக்கும் ஊற்றும், உறைவிடமுமாயிருக்கிறது.

நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும் போது மற்றவர்களுடைய தப்பிதங்களை நாம் மன்னிக்கும் குணாதிசயத்தை உடையவர்களாய் காணப்படுவோம். இது தேவன் நம்முடைய தப்பிதங்களை மன்னிக்க வகை செய்யும். அதுமாத்திரமல்ல, நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும் போது நிச்சயமாகவே நாம் தேவனிடத்தில் அன்பு கூறுவோம். அப்போது அவருடைய கற்பனைகளையும் கைக்கொள்ளுவோம். தேவன், **நாம் இந்த உலகத்தாரை விட வித்தியாசமாயிருக்க வேண்டும்** என்று எதிர்பார்க்கிறார். எனவே, உலகத் திலும், சபையிலும் ஏற்படும் பிரச்சனைகளைத் தவிர்க்க நாம் கிறிஸ்துவின் குணாதியங்களைப் பிரதிபலிப்போம், அப்படிச் செய்து உலகத்தில் நாம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி, தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவோம். ✠

# பரிசுத்த ஆவியானவர் யார்?

## Who is the Holy Spirt?

*J.C. Choate*

**ப**ரிசுத்த ஆவியானவர் என்பவர் யார்? அவர் எங்கேயிருந்து வந்தார்? இவ்வுலகில் அவருடைய பணி என்ன? இப்படியாக, இன்னும் அவரைப் பற்றிய அநேகக் காரியங்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

முதலாவதாக, பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்துள் ஒரு நபராக, இருக்கிறார். அதாவது, தேவன், கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவர் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். **ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து...** (மத். 28 : 19) என அப்போஸ்தலர்களிடம் கிறிஸ்து கூறும்போது பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடுகிறார். மேலும், ஒரே தேவன், ஒரே கிறிஸ்து, ஒரே ஆவி உண்டு என எபேசியருக்கு எழுதிய நிருபம் 4 - ஆம் அதிகாரம் 4 - 6 வசனங்களிலும் பவுல் கூறியுள்ளார். ரோம கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதும்போது **நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில் நான் போராடுவது போல நீங்களும் என்னோடு கூடப் போராட வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்** (ரோமர் 15 : 32) என்று எழுதுகிறார். மறுபடியும் கொரி. 13 : 14 ஆம் வசனத்தில் இம்மூவரையும் பற்றிக் கூறுகிறார். **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும் பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக, ஆமென்.**

தேவத்துவத்துள் தேவன், கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் என மூன்று பேர் இருப்பதால், சிலர், திரித்துவம் எனக் குறிப்பிடுகின்றனர். அவர்கள் மூன்று தனிப்பட்ட நபர்களாக இருந்தபோதிலும் தன்மையில் ஒன்றாகத்தானிருக் கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள சிலர் சிரமப்படுகின்றனர். சிலர் மூன்று பேரும் ஒன்றுதான் என நம்புகின்றனர். இக்கூற்றை நியாயப்படுத்த இயேசுவே பிதாவாகிய தேவனாகவும், இயேசுவே பரிசுத்த ஆவியானவரகவும் உள்ளார்

என்றும் கூறுகின்றனர். இப்படிப்பட்ட போதனையானது இயேசு மட்டுமே என்னும் போதனையின் விளைவாகும். இது எவ்வித சந்தேகமுமின்றி தவறான போதனையாகும். தேவன், கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் மூவரும் தனித் தனியான நபர்களாக இருந்தாலும் தேவத்துவத்துத்துள் ஒன்றாகவே இருக்கி றார்கள் என்பது சாத்தியமா என்பதைப் புரிந்து கொள்ள கடினமாக இருந்தாலும் வேதாகமம் இதை வலியுறுத்திப் போதிப்பதால் நாம் விசுவாசத்தோடே அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதும்போது, இவர் என்னுடைய நேச குமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்ன தமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும், மகிமையையும் பெற்றபோது, அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட் டோம். வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் (II பேதுரு 1:17 – 21).

மேற்கண்ட வசனப்பகுதியில் தேவத்துவத்தின் எல்லா அங்கத்தினர்களும் குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் காணமுடியும். அதிலும் குறிப்பாக, பரிசுத்த ஆவி யானவரின் பங்கை நாம் கவனிக்க முடியும். இங்கே பரிசுத்த ஆவியானவர், பரி சுத்த மனுஷர்களைக் கொண்டு வேதவாக்கியங்களை எழுதும் படியாக ஏவினார் என்று பார்க்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ள வைகளாயிருக்கிறது (II தீமோ. 3:16, 17) என்று சொன்னார்.

பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் 88 முறை குறிப்பிடப் பட்டிருக்கிறாரென்றும் அதில் அவர் 18 பெயர்களில் அழைக்கப்பட்டிருக்கிறார் என்றும் சொல்லப்பட்டுள்ளது. அதே வேளையில் புதிய ஏற்பாட்டிலும் பரிசுத்த ஆவியானவர் 264 முறை குறிப்பிடப்பட்டிருக்கிறாரென்றும் 39 வித்தியாசமான பெயர்களில் அழைக்கப்பட்டிருக்கிறார் என்றும் சொல்லப்பட்டுள்ளது. வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவர் 57 வித்தியாசமான பெயர்களில் அழைக்கப்பட்டிருந்தாலும் கூட, இதில் 5 பெயர்கள் பழைய ஏற்பாட்டுக்கும்,

புதிய ஏற்பாட்டுக்கும் பொதுவானது என்பது குறிப்பிடத்தக்கது.

**பரிசுத்த ஆவியானவரின் பணிகளைக் குறித்து நாம் காண்போம்.**

1. ஆவியானவர் மூலமாக நாம் ஞானஸ்நானத்தில் பிறக்கிறோம் (யோவான் 3:3 – 5).
2. ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார் (யோவான் 14 : 16 – 18).
3. ஆவியானவர் நம்முடைய மீட்பின் முத்திரையாயிருக்கிறார் (II கொரி 1 : 22)
4. ஆவியானவர் நம்முடைய அச்சாரமாயிருக்கிறார் (II கொரி 5 : 5).
5. ஆவியானவர் நம்மால் துக்கப்படுகிறார் (எபே. 4 : 30).
6. ஆவியானவரை நம்மால் அவித்துப்போட முடியும் (I தெச. 5 : 19).
7. ஆவியானவர் நம்மை நடத்துகிறார் (கலா. 5 : 18).
8. ஆவியானவருக்குள் நாம் நடக்கிறோம் (கலா. 5 : 16).
9. ஆவியானவர் மூலமாக நாம் கனி கொடுக்கிறோம் (கலா. 5 : 22).
10. ஆவியானவர் மூலமாக நாம் சபைக்குள் பிரவேசிக்கிறோம் ( I கொரி. 12 : 13).
11. ஆவியானவர் நமக்குள் வாசம் செய்கிறார் (I தீமோ 1 : 14 ;I கொரி. 3, 16, 17).
12. ஆவியானவர் நமக்குள் நிலைத்திருக்கிறார் (I யோவான் 4: 13).
13. ஆவியானவர் நம்மைப் பெலப்படுத்துகிறார் (எபே. 3 : 16 – 21).
14. ஆவியானவராலே நம் சரீரத்தின் செய்கைகளை அழிக்கிறோம் (ரோமர் 8 : 13).
15. ஆவியானவர் தாமே நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று சாட்சி கொடுக்கிறார் (ரோமர் 8 : 16).
16. ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார் (ரோமர் 8 : 26, 27; எபே. 2 : 18).
17. ஆவியானவர் நமக்குப் போதிக்கிறார் (I கொரி. 2 : 13).
18. ஆவியானவர் ஆராய்ந்து நிதானிக்கிறார் (I கொரி. 2 : 14).
19. ஆவியானவருக்குள் நாம் ஜெபிக்கிறோம் (யூதா 1 : 19, 20).
20. ஆவியானவர் நமக்குக் கொடுத்த வசனங்கள் ஜீவனுள்ளதாயிருக்கிறது (யோவான் 6 : 63).

22. ஆவியானவர் நமக்கு விடுதலையைக் கொடுக்கிறார் (II கொரி 3 : 17).

23. ஆவியானவர் கர்த்தருடைய சாயலாக நம்மை மறுரூபப்படுத்துகிறார் ( II கொரி. 3 : 18).

24. ஆவியானவர் மூலமாக நாம் ஜீவனை அறுவடை செய்கிறோம் (கலா. 6 : 8).

25. ஆவியானவர் மூலமாக நாம் பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம் (எபே. 2 : 18).

26. பரிசுத்த ஆவியின் பலத்தினாலே நமக்கு நம்பிக்கை பெருகுகிறது (ரோமர் 15 : 13).

27. பரிசுத்த ஆவியினாலே நாம் தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறோம் (எபே. 2 : 22).

28. ஆவியானவரும் மணவாட்டியாகிய சபையும் வா என்கிறார்கள் (வெளி. 22 ;17)

பின்வரும் பாடங்களில் கிறிஸ்துவில், அப்போஸ்தலர்களிடத்தில், ஆதித் திருச்சபையில் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகிற சபையில் பரிசுத்த ஆவியானவரின் பணியை நாம் ஆராய்ந்து பார்க்கலாம். நாம் கற்றுக் கொள்ளும் பாடங்களெல்லாம் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்திக் கொடுத் திருக்கிற தேவனுடைய வார்த்தைகளோடு இசைந்திருக்கிறது. வேத வாக்கியங்களின் ஆதாரமில்லாமல், நாங்கள் எதையும் செய்யமாட்டோம் என்பது எங்கள் குறிக்கோளயிருக்கிறது. ✝

## யார் கிறிஸ்தவன்

- கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவன் **கிறிஸ்தவன்** ( I பேதுரு 2 : 21 )
- கற்றுக்கொள்ளும் மனதையுடையவன் **கிறிஸ்தவன்** ( அப். 11 : 26 )
- திராட்சை செடியின் கொடியாயிருப்பவன் **கிறிஸ்தவன்** ( யோ. 15 : 16 )
- புது சிருஷ்டியாயிருப்பவன் **கிறிஸ்தவன்** ( II கொரி. 5 : 17 )
- உலகத்திற்கு வெளிச்சமாயிருப்பவன் **கிறிஸ்தவன்** ( மத். 5 : 14 – 16 )
- நல்ல போர்ச் சேவகனாயிருப்பவன் **கிறிஸ்தவன்** ( II தீமோ. 2 : 3 )


# வேதாகமமும் கிறிஸ்துவும்

# The Bible and Christ

*Cecil May, Jr.*

**ஆ**ண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது நாட்களில் வாழ்ந்த பரிசேயர்களைப் பார்த்து, **வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே. அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை** (யோவான் 5 : 39, 40 ) என்று சொன்னார். **நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால் என்னையும் விசுவாசிப்பீர்கள்; அவன் என்னைக் குறித்து எழுதியிருக்கிறானே** (யோவான் 5 : 46) என்றார்.

பரிசேயர் தங்களை வேதவாக்கியங்களுக்கு முழுமையாக அர்ப்பணித்திருந்தார்கள். நியாயப்பிரமானத்தைக் கைக்கொள்வதில் அதிக அக்கறை செலுத்தி அதற்காக அவர்கள் கடுமையாக வாதாடினார்கள். ஆனால் அதின் முக்கியமான காரியங்களின் கருத்தைக் கவனிக்கத் தவறிவிட்டார்கள். அதாவது



தாவீதின் குமாரனாகிய மேசியாவானவர், ஏசாயாவிலும், சங்கீதப் புத்தகங்களிலும் அவர் பாடுபடும் தாசனாகவும், பாவிகளுக்காக மரிப்பாரென்றும் அவரில் விசுவாசம் வைப்பவர்கள் மட்டுமே உண்மையுள்ள இஸ்ரவேலில் அங்கம் வகித்து தேவனுடைய ஆசீர்வாதங்களைச் சுதந்தரிக்க முடியும் என்று, சொல்லப்பட்டிருக்கிற முக்கியமான காரியத்தைக் கவனிக்கத் தவறி விட்டார்கள்.

மேலும், அவர்கள் வேத வாக்கியங்களில் தேறினவர்களாக இருந்த போதிலும் கூட, வேத வாக்கியங்கள் யாரை மையமாகக் கொண்டு பேசினதோ அவரை அடையாளங் காணத் தவறிவிட்டார்கள்.

வேதவாக்கியங்கள் தேவனுடைய வார்த்தைகளாகவும், தேவ ஆவியினால் அருளப்பட்டவைகளுமாயிருக்கின்றன (II தீமோ. 3 : 16). இயேசு கிறிஸ்து வேத வாக்கியங்களை மேற்கோள் காட்டி, அவைகள் தேவனுடைய வார்த்தைகள் என்று தெளிவுபடுத்தினார் (மத். 19 : 45). வேத வாக்கியங்களின் ஒவ்வொரு வார்த்தையும், அதன் ஒவ்வொரு இலக்கண நுணுக்கங்களும் அதில் தேவன் தொடர்பு படுத்தியிருக்கிற ஒவ்வொரு காரியமும் முக்கியமானதாகும். (மத் 4 : 4 ; 22 : 31, 32 ; கலா 3 : 16). வேதவாக்கியங்களைச் சரியாகப் புரிந்து கொள்ள அவைகளை ஜாக்கிரதையாக ஆராய்ந்து அதன்படி வாழ்வது தான் சாலச் சிறந்த வாழ்வாகும்.

இருந்தபோதிலும், நாம் ஒவ்வொரு முக்கியமான பிரச்சனைகளுக்கும் ஆக்கப்பூர்வமான கருத்துக்களைத் தெரிவித்தாலும், நம் மொழித்திறனால் ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள உறுப்புகளை தனித்தனியே வகையறுத்தாலும், ஆயிரமாயிரம் வசனங்களை மனனம் செய்தாலும், ஒவ்வொரு முக்கியமான உபதேசத்தின் விளக்கங்களுக்கு நவீன கால வேத வல்லுநர்கள் தொடங்கி, ஆதித்திருச்சபையின் மூப்பர்கள் வரை பின்னிட்டுப் போய்ப் பார்த்தாலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறிவதிலும், அவரை நேசிப்பதிலும், அவருடைய மதிப்பை உணர்த்துவதிலும் தவறினால், அதுவும் குறிப்பாக, நம்முடைய பாவமன்னிப்புக்காக அவரை விசுவாசிக்கத் தவறினால், நம் ஒட்டுமொத்த வாழ்வும் வீணானதாக, கனியற்றதாக மாறிவிடும்.

நாம் இயேசு கிறிஸ்துவோடு சரீரப்பிரகாரம் உறவுமுறை கொள்வதென்பது வேதவாக்கியங்களுக்குப் புறம்பானது. இயேசு கிறிஸ்து ஒரு நபராக இருப்பதால் நாம் அவரோடு சரீரப்பிரகாரமான உறவுமுறை வைத்துக் கொள்வதும் சாத்தியமில்லாத ஒன்றாகும். அதே வேளையில் தூரத்திலிருக்கும் நம் பிரியமானவர்களுடன் நம்முடைய தனிப்பட்ட உறவுமுறை எப்படியிருக்கிறதோ, அதேபோன்ற உறவுமுறையை நாம் அவரோடே வைத்துக்கொள்ள முடியும்.

இயேசு கிறிஸ்து ஒரு நபர். அவரோடு நாம் தனிப்பட்ட உறவுமுறையை வைத்துக் கொள்ள முடியும்

இத்தனிப்பட்ட உறவுமுறையில் நமக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிற வார்த்தைகள் யாரோ ஒருவரிடமிருந்து வந்த அதிகாரமான வார்த்தைகள் அல்ல. மாறாக அவைகள் அன்பின் இரட்சகரிடமிருந்து வந்த அன்பின் வார்த்தைகளாகும். நாம் அவருடைய வார்த்தைகளை ஆர்வத்துடன் படித்து அதின்படி அவரைப் பிரியப்படுத்த விரும்புவதால், அவருக்குப் பிரியமானது என்னவென்று அவருடைய வார்த்தைகளில் ஆராய்ந்து அதைக் கண்டுபிடித்து செய்வதின் மூலம் நாம் தேவனை மகிமைப்படுத்துகிறோம் திருப்தியடைகிறோம்.

வேத வாக்கியங்கள் நமக்கு கிறிஸ்துவைக் காட்டுகின்றன. அவைகள் கிறிஸ்துவைப் பற்றி போதிப்பதால் அவரை நாம் ஏற்றுக் கொண்டு விசுவாசிக்க வேண்டும்.

வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகிற இயேசுவை நாம் காண்பது மிக முக்கிய மானதாகும். வேதாகமத்திலுள்ள சுவிஷேப் புத்தகங்களிலும் நிருபங்களிலும் நாம் கிறிஸ்துவைப்பற்றி கற்றுக்கொள்கிறோம். மேலும் கிறிஸ்துவை நாம் விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்ளும்போது, அவருடைய சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபமாக்கப்படுவோம் ( I கொரி. 3 : 18). வேத வாக்கியங்கள் நமக்கு கிறிஸ்துவைக் காட்டுகின்றன. அவைகள் கிறிஸ்துவைப் பற்றி போதிப்பதால் அவரை நாம் ஏற்றுக் கொண்டு விசுவாசிக்க வேண்டும்.

---

## வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது


சத்தியத்தை அநியாயத்தினாலே அடங்கிவைக்கிற மனுஷருடைய எல்லா வித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவ கோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனைக் குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எப்படி யென்றால் காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக் கிறவைகளினாலே உலகமுண்டானதுமுதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை (ரோமர் 1 : 18 - 20 ).

சாட்சியங்கள்

# எல்லாவற்றிலும் பொருந்துகிறது

# Fitting it All in

*Brad Harrub, Ph.D.,*



நம்மில் பலரால், பள்ளிக்கூடத்தில் அமர்ந்து உலக வரலாற்றைப் பற்றிக் கற்றுக்கொண்டதை நினைவுக்குக் கொண்டுவர முடியும். இருந்தபோதிலும், ஒரு நிமிடம் நின்று உண்மையாகவே நமக்கு எது போதிக்கப்பட்டது என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். அதேபோன்று தான், நம்மில் பலரால் ஞாயிற்றுக்கிழமை ஆராதனைக்கும், வார இடைப்பட்ட நாட்களில் வேதபாட வகுப்புகளுக்கும் வேதாகமத்தைக் கற்றுக்கொள்வதற்குப் போன காரியங்களை மறுபடியும் நம்மால் நினைவுக்குக் கொண்டுவர முடியும். ஆனால், வேதாகமத்திலிருந்து கற்றுக்கொண்டவைகளும், பள்ளிக்கூடத்திலிருந்து கற்றுக்கொண்டவைகளும் ஒருபோதும் இசைவாயிருக்கவில்லை. ஆகவே, தேவ ஆவியினால் ஏவப்பட்ட வேதாகம வார்த்தைகள் உண்மையாயிருப்பதால், நாம் வேதாகம வரலாற்றை உலக வரலாற்றோடு பொருத்திப் பார்க்கவேண்டும்.

இப்பூமியின் வயதைப் பற்றி யாராவது நம்மிடம் கேட்டால், நம்முடைய பதில் வேதாகமத்தின் வார்த்தைகளிலிருந்துதான் ஆரம்பமாக வேண்டும். அதே வேளையில் தேவன் படைத்த உலகம் பற்றிய விவாதத்தைக் கடந்து செல்ல வேண்டும். மேலும், தேவன் படைத்த உலகில் நாம் எதைப்பார்க்கிறோமோ அவைகள் தேவனுடைய வார்த்தைகளோடு பூரணமாக ஒத்துப்போகிறபடியால் அதை நாம் முழுமையாக விசுவாசிக்க வேண்டும். உண்மையான விஞ்ஞானம் எப்போதுமே சிருஷ்டிகரைத்தான் சுட்டிக்காட்டுகிறது. ஊடகங்கள், பொதுமக்கள் மத்தியில் வேதாகமத்திற்கும், விஞ்ஞானத்திற்கும் இடையே போட்டி நிலவுவது போன்ற ஒரு காட்சியைக் காட்டினாலும், விஞ்ஞானத்தின் ஆசானாக தேவனே இருக்கிறபடியால், வேதமும், விஞ்ஞானமும் ஒன்றோடொன்று கைகோர்த்துச் செல்லுகிறது. ஆகையால் இப்பூமியின் வயது என்ன?

இக்கேள்விக்குப் பதிலளிக்க கீழ்க்காணும் வசனங்கள் நமக்கு உதவுகின்றன.

**ஆதி 1 : 1**

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.

**சங் 33 : 6, 9**

கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது. அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்.

**கொலோ 1 : 16**

ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது, பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும் சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும் அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.

**மத்தேயு 19 : 4**

அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார்.....

**மாற்கு 10 : 6**

ஆகிலும், ஆதியிலே மனுஷரைச் சிருஷ்டித்த தேவன் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார்.

**I கொரி 15 : 45**

அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது........

**ஆதி 3 : 20**

ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான்.........

மேற்கண்ட வசனங்களிலிருந்து நாம் கீழ்க்காணும் காரியங்களைக் கற்றுக்கொள்ள முடியும்.

- நாம் வாழும் இப்பூமி ஆதியிலே தேவனால் சிருஷ்டிக்கப்பட்டது.
- இது வேகமாக நடைபெற்ற ஓர் நிகழ்வாகும்.
- தேவன் தான் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார் (பரிணாம வளர்ச்சி அல்ல)
- ஆரம்பத்திலிருந்தே அங்கே ஆணும் பெண்ணும் இருக்கிறார்கள்.
- ஆதாம் தான் முதல் ஆண் (சிருஷ்டிப்பின் ஆரம்பத்திலிருந்தே).
- ஆதாமின் மனைவியாகிய ஏவாளிடமிருந்துதான் மனித இனத்தின் அனைத்து வம்சமும் வந்தது.

பரிணாமக் கொள்கையானது, நாம் வாழும் இப்பூமியானது கோடிக் கணக்கான வருடங்கள் பழமையானது என்றும், பரிணாம வளர்ச்சியின் விளைவாக முப்பது இலட்சம் வருடங்களுக்கு முன்பாகத்தான் மனிதன் தோன் றினான் என்றும் போதிக்கிறது. மனிதனால் உண்டாக்கப்பட்ட இக்கொள்கை யானது, சிருஷ்டிப்பின் ஆரம்பத்திலிருந்தே மனிதன் இப்பூமியில் இருந்து வருகிறான் என்று இயேசு கிறிஸ்துவால் சொல்லப்பட்டவைகளுக்கு நேர் எதிராக உள்ளது. இந்த உண்மையை மனதில் கொண்டு ஆதியாகமம் 5-ஆம் அதிகா ரத்தில் இடம்பெற்றுள்ள ஆதாமின் வம்சவரலாற்றைப் பார்த்து இப்பூமியின் உண்மையான வயதை வரலாற்றுப் பூர்வமாக நாம் கண்டறிய முடியும்.

ஆதியாகமம் ஐந்தாம் அதிகாரத்தை ஆராய்ந்து பார்த்தால், இப்பூமியின் துல்லியமான வயதை நாம் கண்டுபிடித்துவிடலாம் ( ஆதியாகமம் 11 மற்றும் லூக்கா 3 ஆம் அதிகாரத்தைப் பார்க்கவும் ). இக்கால அட்டவணை ஆதாம் மெத்தூசலாவிடம் பேசியிருக்கக் கூடும் என்பதையும் நிரூபிக்கிறது. ஏனென் றால் அவர்கள் ஆபிரகாம் மற்றும் ஈசாக்கின் காலத்தில் வாழ்ந்த சமகாலத்தவர்கள் ஆவர்.

வம்சவரலாறுகளிலும் இடைவெளிகள் இருப்பதாக சிலர் யூகிக்கும்படி சோதிக்கப்படுகிறார்கள். இருந்தபோதிலும், புதிய ஏற்பாட்டு புத்தகமாகிய யூதா 14-ம் வசனத்தில் ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கு என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த உண்மைக்கு ஆதாரம் ஆதியாகமம் ஐந்தாம் அதிகாரத்தில் உள்ளது. ஒருவர் தொலைந்துபோன வம்சவரலாறுகளைக் குறித்து வாதாடினால் அது அர்த்தமற்றதாகிறது. ஏனென்றால், அந்த இடைவெளிகள் ஏனோக்குக்குப் பிறகுதான் வருகிறது. ஆகவே, பரிணாமக்கொள்கைக் காரர்களுக்கு, பரிணாமக் கால அட்டவணையில் ஏற்பட்டுள்ள இடைவெளியை சரிசெய்வதற்குப் போதுமான ஆதாரம் இல்லை. அதேநேரத்தில் வேதாகம வம்ச வரலாற்றில் சில இடைவெளிகள் இருந்தாலும்கூட, ஆதியாகமம் 5 மற்றும் 11-ம் அதிகாரத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்கிற காலக்கிரம அட்டவணையை எவ்விதத்திலும் பாதிப்பதில்லை. காலக்கிரம அட்டவணை என்பது காலங்களின் பதிவாகும்.

ஆனால், வம்சவரலாறு என்பது சந்ததிகளின் பதிவாயிருக்கிறது. ஆகவே, வம்சவரலாறு பொருத்தமான காலக்கிரம தகவல்களை உள்ளடக்கியதாக இல்லை. வம்சவரலாறு இடைவெளிகளைக் கொண்டுள்ளதால் அது பிரயோஜனமற்றது என்று சொல்பவர்கள், வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டவைகள் என்பதை மறுத்து, உண்மையைப் புரட்ட முயற்சிக்கிறவர்களாக இருக்கிறார்கள். ஆனால், வேத வசனங்கள் உலக வரலாறு வேதகாம வரலாற்றோடு பொருந்துகிறதாவே இருக்கிறது என்று ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கிறது.

✝

## உங்கள் பக்திவிருத்தி........

காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக,தேவனுக்குப்பயந்து,அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும் அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும், தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வருவார். ஆனாலும், இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரர், பொருளாசைக் காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாராதனைக்காரர், இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்ககூடாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தைவிட்டு நீங்கிப்போக வேண்டியதாயிருக்குமே. ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும் (பிரசங்கி 12: 13: 14; II கொரி 5:10).

தேவனுடைய வார்த்தை

# நோக்கத்தின் முதன்மையான இடம்

## The Preeminent Place Of Purpose

*David Deffenbaugh.*

சமீபத்தில் எனக்கு ஒருவரால் ஒரு பாறாங்கல் காட்டப்பட்டது. அவர் அதைக் குறித்து பெருமையாகப் பேசினார். அது அப்படியொன்றும் அழகானதல்ல. அதில் விலையேறப்பெற்ற, உலோகமோ அல்லது இரத்தினமோ இல்லை. அது வெறும் சாதாரணமானதுதான். அது பெருமையோடு, பாதுகாப்பாக வைக்கப் பட்டதற்கான காரணம் அது பல வருடங்கள், அந்த நபருடைய தாயார் படுத் திருந்த கட்டில் கால் முறிந்துவிட்டபடியால் அதற்குத் தாங்கலாக வைக்கப்பட்டது. அது பலவருடங்கள் பயன்பட்டு, தேய்ந்துபோய் ஒரு கோப்பை வடிவில் மாறிவிட்டது. அது ஒருவருக்கு உணர்வுப்பூர்வமான மதிப்புள்ளதாயிருக்கிறது. அது அதன் நோக்கத்தை நிறைவேற்றியிருக்கிறது. அது அக்குறிப்பிட்ட நபருக்கு மதிப்புள்ள பொக்கிஷமாயிருக்கிறது.

எந்த ஒரு காரியத்திலும் நோக்கம் மிக முக்கியம். அது ஒருவருடைய கண்ணோட்டத்தையும், மதிப்புயர்வையும் முற்றிலும் மாற்றிவிடும். நாம் ஒருவருடைய நோக்கத்தைத் தவறாகப் புரிந்துகொண்டால் அவருடைய மதிப்பை நாம் சரியாக உணரவில்லை என்றுதான் பொருள்.

வேதாகமத்தின் நோக்கம் அவர்களை வசதியாக, ஆரோக்கியமாக அல்லது வெற்றியுள்ளவர்களாக மாற்றுவதாகவே இருக்கிறது என்று பலர் நினைப்பது போல் தெரிகிறது. மேலும் அவர்கள் **வேதாகமம் எங்களுக்கு என்ன செய்யும்** என்னும் கேள்வியுடன் வேதாகமத்தை அணுகுவதுபோல் தெரிகிறது.இக்கேள்வி ஒரு தவறான கேள்வியாகும்.மாறாக கேள்வியானது **வேதத்தின் மூலம் நாங்கள் என்ன செய்யவேண்டும்?** என்பதாயிருக்கவேண்டும். வேதாகமத்தின் நோக்கம், தேவனுக்கு ஏற்றவனாக மனிதனை மாற்றுவதாயிருக்கிறது. உதாரணமாக, லேவியராகமம் புத்தகம் மோசேயின் பிரமாணத்தை உள்ளடக்கிய குறிப்பிட்ட சட்டதிட்டங்களைக் கொண்டுள்ளது. அந்தப் பிரமாணங்களில் போதனைகள், தடைகள் ஆகியவற்றின் நோக்கம் என்னவாயிருந்தது? **உங்கள் நடுவில் என்**

வாசஸ்தலத்தை ஸ்தாபிப்பேன்; என் ஆத்துமா உங்களை அரோசிப்பதில்லை. நான் உங்கள் நடுவிலே உலாவி உங்கள் தேவனாயிருப்பேன்; நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள் (லேவி 26 : 11 : 12) என்று மிகத்தெளிவாக பிரமாணத்தின் நோக்கம் விளக்கப்பட்டுள்ளது.



இந்த நோக்கம் வேதவாக்கியங்கள் முழுவதும் தொடர்ந்து வந்துள்ளது. அப்போஸ்தலனாகிய பவுல், கீழ்க்காணும் காரியங்களில் சபை தேவனுக்கு ஏற்றதாயிருக்கவேண்டுமென்பது தேவனுடைய நோக்கமாயிருக்கிறது என்று சொன்னார். **தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும் கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்** (எபே . 5 : 26 , 27 ). பேதுரு சில பரிச்சயமான பழைய ஏற்பாட்டுப் பதங்களைப் பயன்படுத்தி **நீங்கள் தேவனுக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்** என்று எழுதினார் (II பேதுரு 2 : 9). தேவன் தம்மோடு ஐக்கியமாயிருக்க, நெருக்கமாயிருக்க தமக்கு சொந்தமானவர்களாயிருக்க ஒருகூட்ட ஜனம் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். ஆனால், நம் பாவங்களின் காரணமாக நமக்கு ஏற்பட்டிருக்கிற நிற்கதியை அவருடைய வார்த்தைகள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. மேலும், நமக்கு இரட்சிப்பு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலமாக மாத்திரமே சாத்தியம் என்றும், சபை இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம் என்றும், மீட்கப்பட்ட ஜனங்கள் எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழவேண்டும் என்பதையும் வேதவாக்கியங்கள் நமக்குத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

வேதாகமத்தின் நோக்கம் நம்மை மாற்றுவதற்கான, உருவாக்குவதற்கான, வழிநடத்துவதற்கான ஒன்று என்று நாம் உணரும்போது, அது நம்மில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது குறிப்பிடத்தக்க உண்மையாயிருக்கிறது. ✝

---

**நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும்**
**நீங்கள் செய்வீர்களானால்,**
**என் சிநேகிதராயிருப்பீர்கள்** - (யோவான் 15 : 14).

# பெரிய வார்த்தை சிறிய பொருளைத் தர முடியும்

# BIG words Can be Small

Ardron Hinton

கிறிஸ்தவர்களுடைய அகராதியில் மிக முக்கியமான வார்த்தைகளுள் ஒன்று இல்லை என்பதாகும். பெரும்பாலானவர்கள் தாங்கள் எதிர்க்கும் காரியங்களைச் செய்வதற்குக் காரணம் இல்லை என்று சொல்லும் திறன் இல்லாததுதான். சமீபத்தில் JIM DAVIDSON என்பவர் ஒரு மனிதன் வாழ்க்கையில் சிறந்தவைகளைப் பெற்றுக்கொள்ள ஒரே வழி சரியான சமயத்தில் சரியான விதத்தில் காரியங்களை இல்லையென்று சொல்ல கற்றுக்கொள்வதுதான் என்று சொல்லுகிறார். நீதிமொழிகள் 1 : 10 என் மகனே உன் தகப்பன் புத்தியைக் கேள் உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே என்று சொல்லுகிறதை, இல்லை என்று சொல்ல முடியுமா! சொல்லுங்கள்.

நிச்சயமாக இல்லை என்பது மாத்திரம் சிறிய வார்த்தை இல்லை. உண்மையாகவே, வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள முக்கியமான வார்த்தைகள் எல்லாமே சிறிய வார்த்தைகள் தான். தேவன் என்னும் மூன்றெழுத்து வார்த்தையும் சிறிய வார்த்தைதான். கிறிஸ்தவ வாழ்க்கையின் தூண்களான விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு போன்ற வார்த்தைகளும் சிறியவைகள்தான். அதே நேரத்தில் மறுமுனையில் நாம் பார்க்கும்போது நாம் தவிர்க்க வேண்டிய காரியங்களான பாவம், தீமை, பகை போன்ற வார்த்தைகளும் சிறிய வார்த்தைகளாக இருக்கின்றன. அத்தோடு, கிருபை நம்பிக்கை போன்ற வார்த்தைகளும் இருக்கின்றன.

நாங்கள் சொல்லவிரும்பும் கருத்து இதுதான். கிறிஸ்தவ மார்க்கத்தின் அடிப்படைக் காரியங்கள் புரிந்து கொள்வதற்கு கடினமானவைகளல்ல. நாம் அறிந்து கொள்ள வேண்டிய அவசியமான காரியங்கள் வேதவாக்கியங்களில் எளிய மொழி நடையில் தான் கொடுக்கப்பட்டுள்ளன. புதிய ஏற்பாடு தெரிந்து கொள்ளப்பட்ட சிலருக்கு அல்ல, அது திரளான கூட்டத்தாருக்காக கொடுக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ மார்க்கத்தின் அடிப்படைக் காரியங்கள் புரிந்து கொள்வதற்கு கடினமானவைகளல்ல. ✝

# சுவிசேஷத்தைப் பிரசங்கத்தில்
## பிலிப்பியர் 1 : 12-18
## *Preaching the goespel*
*philipians 1 : 12-18*

Gary C. Hampton.

**சிறைவாசத்தில் கிடைத்த வாய்ப்புகள்**

சிறைவாசம் பவுலின் சுவிசேஷப் பணியைத் தடுத்துவிடும் என்று சிலர் நினைத்தார்கள். ஆனால், அச்சூழ்நிலை தான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தேவன் தனக்கு நிறைய வாய்ப்புகளைத் திறந்து தந்ததாக பவுல் சொன்னார். கட்டப்பட்ட நிலையில் இருந்த பவுல், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தனக்கு கதவுகள் திறக்கப்பட்டதைக் கண்டார். சர்வவல்ல தேவன் பவுலின் சூழ் நிலைகளைப் பயன்படுத்தியவிதம் உபத்திரவக் காலங்களில் வாய்ப்புகளை உற்றுநோக்க நம்மை உற்சாகப்படுத்துகிறது ( பிலி . 1 : 12 ). பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது, **அன்றியும் அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்** (ரோமர் 8 : 28). பாடு களிலிருந்துகூட நன்மை உண்டாகுமென்று தேவதாசனாகிய பவுலிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும்.

பவுல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த செய்தி அந்நாட்களில் வாழ்ந்த மக்க ளுக்குத் தெரிந்திருந்தது. அவர்கள், பவுலுக்கு ஏன் இப்படியெல்லாம் நடந்தது என்று கேள்வி கேட்டார்கள். அப்படிக் கேட்டக்கப்பட்ட கேள்விகள் கிறிஸ்து வைப்பற்றிச் சொல்ல எண்ணற்ற வாய்ப்புகளை பவுலுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது. இங்கே, பவுல்தான் கட்டப்பட்டிருந்தார் அவருடைய செய்தி அல்ல. அவர் தீமோத்தேயுவுக்குச் சொல்லும்போது **தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசு கிறிஸ்து என் சுவிசேஷத்தின்படியே மரித்தோரிலிருந்தெழுப்பட்டவரென்று நினைத்துக்கொள். இந்தக் சுவிசேஷத்தினிமித்தம் நான் பாதகன்போலக் கட்டப்பட்டு, துன்பத்தை அனுபவிக்கிறேன்; தேவவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை** (II தீமோ . 2 : 8,9) என்றார். மேலும், பவுல் கட்டப்பட்ட

நிலையிலும்கூட ராயனுடைய அரண்மனையிலிருந்தவர்களிடத்தில், தான் கிறிஸ்துவுக்காக கட்டப்பட்டதாகச் சொன்னார் (பிலிப்பியர் 1 : 13).

அப்போஸ்தலனாகிய பவுலின் சிறைவாசத்தைக் கண்டு அங்கே ஊழியம் செய்த சகோதரர்கள் பெலனடைந்தார்கள். முன்பு பயத்தோடு தேவனுடைய வார்த்தைகளைப் பிரசங்கித்த சகோதரர்கள் சுவிசேஷத்திற்காக மரிக்கவும் தயாராக இருந்த பவுலின் துணிச்சலைக் கண்டு தைரியமடைந்தார்கள் (பிலி. 1 : 14 ). எபேசு சபை மூப்பர்களிடம் பவுல் பேசின வார்த்தைகள் தேவனுடைய பணியைத் தைரியமாகச் செய்ய சகோதரர்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்திருக்கும் என்று விசுவாசிக்கிறேன். பவுல் சொல்லும்போது எருசலேமிலே என்ன நடக்கும் என்று தனக்குத் தெரியாது என்றும், கட்டுகளும் உபத்திரவங்களும் வைக்கப்பட்டிருக்கிறதை பரிசுத்த ஆவியானவர் தனக்கு வெளிப்படுத்தினார் என்றும் தெரிவித்தார். **இப்பொழுதும் நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன், அங்கே எனக்கு நேரிடுங்காரியங்களை நான் அறியேன்; கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன்** (அப் . 20 : 22,23) என்றார்.

**பிரசங்கத்திற்கான நோக்கங்கள்**

அப்போஸ்தலனாகிய பவுல், ஒரு வெற்றிகரமான பிரசங்கியாராக இருந்ததைப் பார்த்து சிலர் பொறாமைப்பட்டார்கள். அவர்களிடையே பிரிவினையின் ஆவி உண்டாகி தங்களைப் பின்பற்றும்படி மற்றவர்களை உற்சாகப் படுத்தினார்கள் ( பிலி 1 : 15 ). இவர்கள் அரசியல்வாதிகளைப் போல் ஆதரவு திரட்டியிருக்கிறார்கள். இந்த மனிதர்களிடம் சரியான செய்தி இருந்தது, ஆனால் அவர்களுடைய நோக்கம் தவறானதாக இருந்தது. I கொரி . 16 : 14-ல் அப்போஸ்லனாகிய பவுல் **உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது** என்றார். பிரிவினையின் ஆவி, அன்பு என்னும் முக்கியமான அம்சத்தை நீக்கிப்போடுகிறது. தேவனுடைய நோக்கத்தை நன்றாய் அறிந்த பிரசங்கிமார்கள் தனிப்பட்ட காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இயேசுகிறிஸ்துவினுடைய கர்த்தத்துவத்தின் கீழ் எல்லாக் கிறிஸ்தவர்களையும் இணைக்க முயற்சிப்பார்கள் (I கொரி . 1 : 10-13).

வேறு சிலர், பவுலைப்பற்றிய நல்லெண்ணத்துடன் சத்தியத்தின் மீது அன்பு கொண்டவர்களாய் கிறிஸ்துவைப் பிரசங்கித்தார்கள். அவர்கள் சுவிசேஷத்திற்கு உத்தரவு சொல்ல அல்லது சுவிசேஷத்திற்காகப் போராட பவுல் கொண்டிருந்த மனதைரியத்தைக் கண்டு, அதன் காரணமாக சத்தியத்தின் மீது அன்பு கொள்ள

தூண்டப்பட்டவர்கள். நாம் சரியான செய்தியையும், சரியான நோக்கத்தையும் கொண்டிருக்க வேண்டும். நாம் சொல்லுகிறதையெல்லாம் கேட்கும் குழந்தைகளைப் போலிராமல், நாம் தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் வளருகிறவர்களாயிருக்கும் படியாக அன்புடன் சத்தியத்தைக் கைக்கொள்ள வேண்டும் (எபே . 4 : 15). மேலும், I கொரி . 13 : 13-ல் இடம் பெற்றுள்ள பரிசுத்த பவுலின் வார்த்தைகள், அன்பில்லையென்றால் நாம் பெரிய காரியங்களைச் செய்தாலும் ஒன்றுமில்லை என்பதை நமக்கு எப்பொழுதும் நினைவுபடுத்துகிற ஒன்றாகவே இருக்கிறது.

**கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதில் களிகூருதல்**

கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதால் சிலருக்கு தனிப்பட்ட முறையில் ஆதாயம் கிடைத்திருந்தாலும், பவுல் அதைப் பற்றிக் கவலைப்படாமல் கிறிஸ்து பிரசங்கிக்கப்படுவதைக் குறித்துச் சந்தோஷப்பட்டார் (பிலி 1 : 18). இது அவர்கள் கள்ளப்போதர்கள் அல்ல என்பதை நமக்கு அறிவிக்கிறது. ஆனால், அவர்கள் தவறான நோக்கத்திற்காகப் பிரசங்கித்தார்கள் என்பதையும் காட்டுகிறது. புறஜாதிகளுக்கான அப்போஸ்தலன் பவுல், ஊழியச்சகோதரர்கள் தனக்கு விரோதமாகச் செயல்பட்டபோதிலும் அவர்கள் கிறிஸ்துவைப் பிரசங்கித்தபடியால் அவர் களிகூர்ந்தார்.

பவுல் பார்வையை இழந்தபோது, தனக்கு பார்வை கிடைக்கும்படி அனனியா என்னும் சீஷனுக்காகக் காத்திருந்தார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அனனியாவிடம் நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான் என்று சொன்னார் ( அப் . 9 : 15). அந்த குறிக்கோள் பவுலின் வாழ்க்கை முழுவதிலும் ஆதிக்கம் செலுத்தியது. அது நிறைவேற்றப்பட்ட விதத்தைப்பற்றி அவர் கவலைப்படவில்லை. தேவனுடைய பணியில் மனிதர்களுக்குப் பாராட்டுகள் கிடைப்பதைக் குறித்து அவர் கவலைப்படவில்லை. ஏனென்றால் எல்லாப் பலன்களும் தேவனை ஆதாரமாகக் கொண்டுள்ளது. விளையச் செய்கிற தேவனாலே எல்லாமாகும் என்பதை அவர் அறிந்திருந்தார் (I கொரி . 3 : 5-7). ✞

---


**ஆண்டவரே... நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே.**
**நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய**
**கிறிஸ்து** - (யோவான் 6 : 69, 70).

## ஓட்டப்பந்தயம் வேகமானவர்களுக்கல்ல ஓட்டத்தை முடிப்பவர்களுக்கே

## The Race Isn't To The Swift But To The One Who Finishes

*Jodie Boren*

புறா ஓர் ஆச்சரியமான பறவை, அது எவ்வளவு தூரத்தில் பறந்தாலும், அது எந்தக் கூண்டிலிருந்து பறக்கவிடப்பட்டதோ அந்த இடத்தை மிகத்துல்லியமாகக் கண்டறிந்து திரும்ப வந்துவிடும். புறா போட்டியின் போது, அதன் உரிமை யாளர்கள் தங்கள் புறாக்களைக் கொண்டு வந்து, அவைகளை ஒரே நேரத்தில் பறக்கவிடுகிறார்கள். அப்புறாக்கள் மிக நேர்த்தியாக, எவ்வித சிரமமுமின்றி எந்தக் கூட்டிலிருந்து வந்ததோ அதே கூட்டிற்குச் சென்று விடுகிறது.



அருமையானவர்களே! நாம் நித்திய வீட்டிற்குப் பறந்துசெல்ல வேண்டுமென்றால், நம் கடந்த கால சாதனைகளை நினைத்து கர்த்தருக்குச் சேவை செய்வதை நிறுத்தக் கூடாது. மாறாக, நம் ஓட்டத்தை முடிக்க வேண்டும். ஓட்டத்தை முடிப்பவர்களுக்கே நீதியின் கிரீடம் காத்திருக்கிறது (I தீமோ . 4 : 6 - 8).

காலத்தியர் 6 : 9-ல் அப்போஸ்தல னாகிய பவுல் நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக, நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப் போம் என்று சொல்லுகிறார். பாவத்தாலும், துக்கத்தாலும் நிறைந்திருக்கிற இவ்வுலகிற்கு, தமது சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் கட்டளையை கிறிஸ்தவர்களாகிய

நமக்குக் கொடுத்திருக்கிறார். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் கர்த்தர் சித்தமுள்ளவராயிருக்கிறார் ( I தீமோ. 2 : 4). இது ஒரு மாபெரும் வேலை, ஆகவே நாம் சோர்ந்துபோகக் கூடாது. நாம் உயிரோடிருக்கும் வரைக்கும் நம்மை படைத்தவருக்குப் பணிபுரிய வேண்டும். ஏனென்றால், ஒருவேளை மரணம் நம்மைத் தாக்கினால் தேவனுக்கென்று நம்மால் வேலை செய்ய முடியாமல் போய்விடும் (யோவான் 9 : 4). **ஆகையால் எனக்குப் பிரியமான சகோதரரே கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக** (I கொரி 15 : 58 ) என்று பவுல் நம்மை உற்சாகப்படுத்துவதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

இருந்தபோதிலும் பலர் விதைக்கிறவனுடைய உவமையில் காணும் விதையைப் போலிருக்கிறார்கள் ( மத் 13 : 1-23 ). முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்ட விதையாகிய வசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் உலகக் கவலையும், ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போட்டதினால் பலனற்றுப் போய்விட்டது. **நீங்கள் நன்றாய் ஓடினீர்களே; சத்தியத்திற்கு கீழ்ப்படியாமற்போக உங்களுக்குத் தடை செய்தவன் யார்?** (கலா . 5 : 7) என்று பவுல் கேட்கிறார். சாத்தானாகிய பிசாசு நம் இருதயங்களை பேராசை, பெருமை போன்ற பொல்லாதவைகளினால் நிரப்புவது உண்மையாக இருக்கிறது. ஏனென்றால் அவன் யூதாஸ் காரியோத்துக்கும், அனனியா சப்பீராளுக்கும் அப்படித்தான் செய்தான் (யோவான் 13 : 2 ; அப். 5 : 1 -11). இருந்தபோதிலும் அவர்கள் சாத்தானுக்குச் செவிகொடுத்து சோதனையில் விழுந்திருக்கக் கூடாது.அதேபோல் நாமும் சாத்தானின் சோதனையில் விழுந்துவிடக்கூடாது. நாம் சோதிக்கப்படும்போதெல்லாம் தேவன் அதிலிருந்து தப்பித்துக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் (I கொரி.10 : 13). **கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்க அறிந்திருக்கிறார்** (II பேதுரு 2 : 9) என்று பேதுரு வலியுறுத்தியிருக்கிறார்.

ஒலிம்பிக் போட்டிகளில் ஓட்டப்பந்தய வீரர்கள் எல்லாச் சட்டதிட்டங்களுக்கும் உட்பட வேண்டும். ஒரு முக்கியமான விதி என்னவென்றால் ஒரு ஓட்டப்பந்தய வீரன் பந்தயப் பொருளைப் பெறவேண்டுமென்றால் ஓட்டத்தை முடிக்க வேண்டும். இது ஓர் அடிப்படை விதி.நாமெல்லாரும் இதை மிக எளிதாகப் புரிந்துகொள்கிறோம்.இந்தவிதி அப்போஸ்தலனாகிய பவுலால் I கொரி. 9 : 24ல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கே அவர் பெற்றுக்கொள்ளத்தக்கதாக

ஓடுங்கள் என்று நம்மை உற்சாகப்படுத்துகிறார்.நம்முடைய ஆவிக்குரிய ஓட்டத்தில் பிலிப்பியர் 3 : 16-ல் போதிக்கப்பட்டிருக்கிற தேவனுடைய சட்டத்தின் படியே ஒழுங்காய் நடந்து கொள்ள வேண்டும். இந்தச் சட்ட திட்டங்கள் நாம் ஓட்டத்தை முடிக்கவேண்டுமென்று போதிக்கிறது. நம் ஆண்டவர் வெளி. 2:10-ல் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன் என்று சொல்லியிருப்பதால் நாம் இன்னும் ஒருபடி மேலே செல்ல உந்தப்படுத்துகிறோம். ஞானி சாலொமோன் சொல்லும்போது, ஓடுகிறதற்கு வேகமுள்ளவர்களில் வேகமும் போதாது (பிரசங்கி 9 : 11) என்று சொன்னார். ஆனால், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோ முடிவுபரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான் என்று சொல்லி ஊக்கப்படுத்துகிறார் (மத். 24 : 13).

சகோதரரே, நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார் (எபே. 2:10). நாம் நம்முடைய கண்களை ஏறெடுத்து அறுவடையை நோக்கி நம் வாழ்நாளெல்லாம் கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்து நம் ஓட்டத்தை முடித்திடுவோம். ✝


## பாவம் ! பாவம் !!

பாவம் நம்மிடமிருந்து எவைகளையெல்லாம் கொள்ளையிடுகிறது :

* தேவனுடனான உறவை
* நம்முடைய குணாதிசயத்தை
* நம்முடைய முடிவெடுக்கும் திறனை
* நம்முடைய சுய மரியாதையை
* நம்முடைய சமாதான வாழ்வை
* நம்முடைய ஆவிக்குரிய வாழ்வை
* இறுதியில் நம்முடைய நித்திய ஜீவனை
* ஆகவே, எச்சரிக்கையாயிருப்போம்!

# பிரசங்க மேடையில் வெறுங்காலுடன்
## *BAREROOT IN THE PULPIT*
Bobby Dockery

பிரசங்கியார்களில் அநேகர் ஞாயிற்றுக்கிழமை ஆராதனைக்கு ஆயத்தமாகாமல் இருப்பது போல் கனவு காண்பதுண்டு. அதுபோல் எனக்கும் திரும்ப திரும்ப கனவு உண்டானது. என்னுடைய கனவில் அது ஞாயிற்றுக் கிழமை காலை வேலையாயிருந்தது. கிட்டத்தட்ட ஆராதனைக்கு நேரமாகி விட்டது. அந்நேரத்தில் என் காலணியையும், காலுறையையும் காணவில்லை. நான் அவைகளைத் தேடிக் கண்டுபிடித்த பிறகும் அவைகளை என்னால் அணிய முடியவில்லை. நான் போராடிக்கொண்டிருக்கும் வேளையில் நேரம் என்னை விரட்டிக்கொண்டிருந்தது. ஆராதனை தொடங்குவதற்கான நேரமும் நெருங்கிவிட்டது. ஆராதனைக்குச் சரியான நேரத்தில் போகமுடியாது என்பதை அறிந்திருந்தேன். பின்பு கனவில் நான் பிரசங்க பீடத்தில் காலுறை இல்லாமல் வெறுங்காலில் நிற்பதைப் பார்த்து நான் வியப்படைந்தேன்.



என் கனவு எதைப் பற்றியது என்பதை நான் நன்றாக அறிவேன் அது ஆயத்தம் என்று. பிரசங்கியார்களுக்கு ஒரு வேலை யைச் செய்வதற்கான காலக்கெடு முடிவற்ற ஒன்றாக அவர்களைத் துரத்திக்கொண்டே இருக்கும். எப்போதுமே புதிய பிரசங் கங்கள், வேதபாட வகுப்பு களுக்கான புதிய பாடங்களைத் தயார் செய்வதற்குத் தேவையான நேரம் ஒதுக்கவேண்டும். சுருக்கமாகச் சொன்னால் பிரசங்கியார்கள் எப்போதுமே ஆயத்தமாயிருக்க வேண்டும்.

ஆயத்தத்தின் அவசியத்தை நாமெல்லாரும் நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும். இது, ஆவிக்குரிய வாழ்விற்கு மிகவும் ஊக்கமளிக்கக்கூடிய

ஒன்று என்பது உண்மையாயிருக்கிறது.ஆமோஸ் தீர்க்கதரிசி உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு என்று நீண்ட காலத்திற்கு முன்பே எச்சரித்தார் (ஆமோஸ் 4 : 12). ஆயத்தம் என்கிற வார்த்தையைக் குறித்து எண்ணிலடங்கா மக்கள் வேதவாக்கியம் போதிப்பதை ஆராய்ந்து அதை சிந்தித்து அதின்படி செயல்படவேண்டும்.

**1. ஆராதனைக்கு ஆயத்தப்படுங்கள்**

ஒரு பழங்கால பிரசங்கியார், சிறுவனாக இருந்தபோது தன் குடும்பம் ஞாயிறு ஆராதனைக்கு ஆயத்தமான விதத்தைச் சொன்னார். சனிக்கிழமை வஸ்திரங்கள் துவைக்கப்படும் காலணிகள் பளபளப்பாக்கப்படும், குடும்பத் தலைவன் இரவு வேளைகளில் தேவையற்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில்லை. தாமதமாக வீட்டுக்கு வருவதில்லை. மாறாக, நேரத்தோடே வந்துவிடுவார். ஞாயிறு அதிகாலையிலேயே வீட்டிலுள்ள யாவரும் குளித்துவிடுவார்கள். இப்படியாகத் தன்னுடைய குடும்பம் ஒவ்வொரு ஞாயிறு ஆராதனைக்கும் தயாராக இருக்க வேண்டுமென்பதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார். இந்த மனநிலையை நாம் இறுகப் பிடித்துக்கொள்ள வேண்டும். பலர், சனிக்கிழமை இரவுகளில் பலவிதமான செயல்பாடுகளில் ஈடுபட்டு, ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில் கண்சொருக அமர்ந்திருப்பதை நம்மால் பார்க்க முடியும். **நம்முடைய ஆயத்தம் சிறப்பாக இருக்குமானல், ஆராதனை அர்த்தமுள்ளதாக இருக்கும்.** ஆராதனையில் கலந்து கொள்வதற்கு முன்பாக தேவனுடைய வார்த்தையை வாசித்து, தியானித்து வரவேண்டும். ஆராதனையை வழிநடத்துபவருக்காக ஜெபிக்க வேண்டும். ஆராதனைக்கு ஆவலோடும், ஆயத்தத்தோடும் வர வேண்டும்.

**2. வாழ்க்கைக்கு ஆயத்தப்படுங்கள்**

வாழ்க்கை என்பது பலவிதமான சோதனைகளாலும், தடைகளாலும், சவால்களாலும் ஏமாற்றங்களாலும் நிறைந்திருக்கிறது. இப்படியிருக்க நாம் எப்படி ஆயத்தமாக முடியும். நம் வாழ்க்கையில் வீசும் புயலுக்கு ஒப்ப நாம் எதிர்த்து நிற்க வேண்டுமென்றால், நாம் ஆவிக்குரிய பிரகாரம் ஆழமாக வேரூன்ற வேண்டும். நமக்கு ஆகாரமும், பயிற்சியும் தேவை. அதனால் தான் ஞாயிறு காலை ஆராதனையும், மாலை ஆராதனையும், புதன்கிழமை வேதபாட வகுப்புகளும் ஒட்டுமொத்த குடும்பத்திற்கும் மிகவும் அவசியமாயிருக்கிறது. மேலும், நம் வாழ்வில் வேத வாசிப்பு, ஜெபம், ஊழியம் மற்றும் தியாகம் போன்ற இவைகளெல்லாம் ஆவிக்குரிய வாழ்வுக்கு நாம் ஆயத்தமாக உதவி செய்கின்றன.

### 3. நித்தியத்துக்கு ஆயத்தப்படுங்கள்

பழைய ஏற்பாட்டில் தேவன் எசேக்கியா ராஜாவிடம் செய்தியை அறிவிக்கும் படி தூதுவரை அனுப்பி நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குபடுத்தும்; நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் (II ராஜா 20 : 2) என்று சொன்னார். இது, நம் எல்லோருக்கும் நல்ல ஆலோசனையாயிருக்கிறது. வாழ்க்கை என்னும் நாள் காட்டியில் மரணம் என்பது ஒவ்வொருவருக்கும் குறிக்கப்பட்டிருக்கிறது (எபி. 9 : 27 ). இவ்வாழ்க்கை நாம் தேவனைச் சந்திக்க ஆயத்தமாகும் ஓர் மைதான மாகும். நாம் நித்தியத்தின் நிழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வாழ்க்கை யின் மிகப்பெரிய பணி அடுத்து வரும் நித்திய வாழ்வுக்கு நம்மை ஆயத்த மாக்குவதுதான்!

நமக்கு உண்மையாகவே நியாயாத்தீர்ப்பைக் குறித்தும், நாம் ஆயத்தமில் லாமல் இருப்பதைக் குறித்தும் திகில் உண்டாக வேண்டும். ஆகவே, நாம் எப்போ துமே ஆயத்தமாக இருக்கவேண்டும். நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷ குமாரன் வருவார்; ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (மத்.24 : 44) என்று நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னார். நீங்கள் மகிமையின் வாழ்வுக்கு ஆயத்தமாயிருக்கிறீர்களா?

காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே (பிரசங்கி 12 : 13).

## ஞானஸ்நானத்தின் நோக்கம்

| | | |
|---|---|---|
| பாவமன்னிப்பு | - | அப். 2 : 38 |
| பாவங்கள் கழுவப்படுதல் | - | அப். 22 : 16 |
| கிறிஸ்துவின் சரீரத்திற்குள் வருதல் | - | கலா 3 : 26 - 27 |
| ராஜ்ஜியத்தில் சேர்க்கப்படுத்ல | - | யோவா 3 : 3 - 5 |
| புதிய மனிதனாக பிறத்தல் | - | II கொரி. 5 : 17 |
| புதிய வாழ்வு பெறுதல் | - | ரோமர். 6 : 4 |

# கிறிஸ்துவால் நிராகரிக்கப்படும் விசுவாசி

## The Believer Whom Christ Rejects

*Perry N.Hall*

மிக மோசமான நிலையை வெளிப்படுத்துகிறது நம் தலைப்பு. இருந்த போதிலும் இது நிச்சயமான உண்மையாயிருக்கிறது. எப்படியென்றால் கிறிஸ்து வால் நிராகரிக்கப்படுகிற சில விசுவாசிகளும் இருக்கிறார்கள். மார்க்க உலகில் அநேகர் விசுவாசத்தினாலே மாத்திரம் இரட்சிப்பு என்னும் உபதேசத்திற்கு ஆதரவாகப் பேசி வருகிறார்கள்.விசுவாசத்தினாலே மாத்திரம் என்னும் உப தேசத்தின்படி விசுவாசிக்கும் ஒருவர் அப்போதே இரட்சிக்கப்படுகிறார், அடுத்து அவர் எந்த நிபந்தனைகளுக்கும் உட்படவேண்டிய அவசியமில்லை. அதாவது, அதோடு ஒன்றுங் கூட்ட வேண்டியதுமில்லை, குறைக்க வேண்டியதுமில்லை. இரண்டு வருடங்கள் நான் ஒரு மார்க்கப் பிரிவினை பழ்கலைக்கழகத்தில் இருந்தபோது, அவர்களுடைய நிலை இதுதான் என்பதைப்பற்றிய நேரடியான அனுபவம் எனக்குக் கிடைத்தது.இந்த உபதேசம் தவறானது, பரிதாபத்திற் குரியது. இந்த உபதேசத்திற்கு ஆதரவாக வாதாடுபவர்கள் யோவான் 12 : 40, 43 போன்ற வசனங்களை மேற்கோள் காட்டி தங்களின் வாதம் சரி என்று நிரூபிக்க முயற்சிக்கிறார்கள்.

அதாவது இவ்வசனங்களில், யூதர்களில் பல அதிகாரிகள் கிறிஸ்து வினிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும், மனுஷரால் வரும் மகிமையை அவர்கள் அதிகமாக விரும்பினபடியால், தங்கள் விசுவாசத்தை அறிக்கை பண்ணாமல் இருந்தார்கள் (கிரேக்க பாஷையில் அவர்கள் தொடர்ந்து அறிக்கை பண்ணாமல் இருந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது). கள்ளப் போதகர்கள் இவ்வசனப்பகுதியின் வெளிப்படையான விளக்கத்தைத் தராமல், யூதர்களுடைய விசுவாசம் அறிவுப்பூர்வமான விசுவாசம், இது இருதயத்தில் உண்டாகும் விசுவாசமல்ல என்று சொல்லுகிறார்கள். அதாவது, ஒருவகையான

விசுவாசம் மனதிலிருந்து வருகிறது, வேறொரு வகையான விசுவாசம் இருதயத்திலிருந்து வருகிறது என்று சொல்லுகிறார்கள். இது முற்றிலும் தவறான உபதேசமாகும்.

வேதாகமம் இருதயம் மனம் இரண்டையும் வேறுபடுத்திக் காட்டுவதில்லை. தங்களை இரட்சிப்புக்குள்ளாக்கும் வல்லமை அறிக்கை செய்வதற்கு உண்டு என்பது அவர்கள் இருதயத்தில் இருந்தது. ஆனால், மனுஷரால் வரும் மகிமை அவர்கள் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட பெரிய தடைக்கல்லாக இருந்தது. விசுவாசத்தைப் பூரணப்படுத்தும் கீழ்ப்படிதல் அவர்களிடத்தில் இல்லை. இந்த வசனப்பகுதியை WESTCOTT என்பவர் யாக்கோபு இரண்டாம் அதிகாரத்தில் அதின் ஆசிரியர் விவாதிக்கும் பிசாசின் விசுவாசத்தோடு ஒப்பிடுகிறார். கீழ்ப் படிதலுக்கு வழிவகுக்காத விசுவாசம் செத்ததாயிருக்கிறது. இது ஆவிக்குரிய அழிவை ஏற்படுத்துகிறதாயிருக்கிறது (யாக். 2:14,26). விசுவாசத்தினாலே நாம் தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்பட வேண்டுமென்றால் அது, கீழ்ப்படிதலி னாலே பூரணப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது.



மேலும், மத்தேயு 7 : 21 – ல் இயேசு கிறிஸ்து குறிப்பிடும் போது, ஒருவர் விசுவாசமுடைய வராயிருந்து தம்மை கர்த்தர் என்று அறிக்கையிட்டாலும் கூட அந்த விசுவாசம் தேவ சித்தத்திற்குக் கீழ்ப்படிய ஏவ வில்லையென்றால், அப்படிப்பட்ட விசுவாசம் அவரை அக்கிரமக்காரராகத்தான் மாற்றுகிறது என்றார். ஆகவே, இப்படிப்பட்ட மக்கள் நியாயத்தீர்ப்பு நாளிலே கிறிஸ்துவால் நிராகரிக்கப்படுவார்கள்.

**அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டார்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்** (யோவான் 1 : 12). அவர்களுக்கு தேவனுடைய பிள்ளைகளாகும்படி கிறிஸ்துவனிடத்திலிருந்து அதி காரம் கிடைக்கிறது. அதனடிப்படையில் அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசத்தை உண்டாக்கும் சுவிசேஷத்தை சர்வசிருஷ்டிக்கும் பிரசங்கித் தார்கள். ஆகவே, விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத்

தீர்க்கப்படுவான் (மாற்கு 16 : 16) என்று கிறிஸ்து சொன்னார். சுவிசேஷத்தின்படி அறிக்கை செய்த போது ( ரோமர் 10 : 17 ) அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் கொடுக்கப்பட்டது. பெந்தெகொஸ்தே நாளிலே நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டவர்களிடத்திலே பேதுரு, தேவ ஆவியினால் ஏவப்பட்டு நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்.... என்று சொன்னார் ( அப் . 2 : 38 ). இவ்வார்த்தைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிந்தபோது, தேவனுடைய குடும்பமாகிய சபையிலே சேர்க்கப்பட்டார்கள் (அப். 2 : 41,47 ; I தீமோ . 3 : 15).

சவுல், தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் இயேசுவை கிறிஸ்து என்று விசுவாசித்தார். ஆனால், அதற்குப் பிறகும் அவர் பாவத்தில்தான் இருந்தார். தமஸ்குவில் அனனியா என்னும் கர்த்தருடைய மனிதன் சவுலைப்பார்த்து இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்று சொன்னார் (அப் . 22 : 16).

பிரதான கட்டளையிலும் சரி, அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் நாம் காணும் மனமாற்ற சம்பவங்களிலும் சரி, இயேசு கிறிஸ்து தமது வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்களையே ஏற்றுக்கொள்கிறார் என்று நாம் காண்கிறோம் ( எபி. 5 : 8, 9 ). அதே வேளையில், கீழ்ப்படியாத எல்லோரையும் அவர் நிராகரித்தும் விடுவார் (II தெச . 1 : 7-9). எனவே, விசுவாசத்தினாலே மாத்திரம் ஒருவர் தன்னுடைய பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுகிறார் என்று போதிக்கிறவர்கள் பரிதாபத்திற்குரியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, பலர் சத்தியத்தை அறிந்துகொள்ளவும், அதற்குக் கீழ்ப்படியவும் உதவி செய்ய தேவன் நம்மை உகந்த கருவியாகப் பயன்படுத்தும்படிக்கு வேத வசனங்களுக்கு நம்மை முழுமையாக அர்ப்பணிப்போம். ✠

## ஆவிக்குரிய வளர்ச்சிக்கான திறவுகோல்கள்

- வேதவாக்கியாங்கியாங்களின் மீது வாஞ்சைப்படுதல் (I பேதுரு 2 : 2).
- வேதவாக்கியங்களைத் தியானித்தல் (சங்கீதம் 1 : 2).
- மரணபரியந்தம் உண்மையாயிருத்தல் (வெளி 2 : 10).

சபை

# இயேசு ஒற்றுமைக்காக ஜெபித்தார்

## *Jesus prays for unity*

*Wayne Barrier*

இயேசு தம்முடைய சபையைக் கட்டுவதாகச் சொன்னார் (மத். 16 : 18). அச்சபை அதற்கு எதிராகத் தோன்றும் எல்லாவற்றையும் எதிர்த்து நிற்கும். சபை என்னும் வாகனத்தின் மூலமாக மாத்திரமே மனிதன் இவ்வுலகிலிருந்து பரலோகத்திலிருக்கும் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க முடியும். சபையை இயேசு கிறிஸ்து தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்தார் (I பேதுரு 1: 18,19). கீழ்ப்படியும் விசுவாசிகளை அவருடைய சபையிலே சேர்க்கிறார் ( அப். 2 : 37,38,42,47). மெய்யான சபை ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது (எபே. 4 : 4). ஆனால், இன்று பல சபைகள் தங்களைக் கிறிஸ்துவால் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளாகச் சொல்லிக்கொள்கின்றன. ஆகவே, சபைக்குள் ஒற்றுமை எவ்வளவு முக்கியமானது என்பதை இயேசு கிறிஸ்து வலியுத்துகிறார்.

### சபைக்குள் ஒற்றுமை எவ்வளவு முக்கியமானது?

இக்கேள்விக்கான பதிலை இயேசு கிறிஸ்து தெளிவுபடுத்துகிறார். யோவான் 17 :20-23 ம் வசனங்களில் அவர் நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல, அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும் என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல, அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றார்.

அடுத்ததாக, ஒருவர் பூரணராக வேண்டுமென்றால் அவர் மற்ற விசுவாசி

களோடு ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று இவ்வசனப் பகுதி போதிக்கிறது. நாம் பாவமில்லாதவர்களாயிருக்கும்போது பூரணராயிருக்கிறோம். பிரிவினை பாவமாகும் ( I கொரி. 1 : 10 ). நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும்போது பாவத்திலிருந்து விடுதலையாகிறோம் (ரோமர் 8 : 1; எபே. 1 : 3). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் நாம் இருக்க வேண்டுமென்றால், அவருக்கு நாம் கீழ்ப்படிய வேண்டுமென்று கட்டளையிடுகிறார் (எபி. 11 : 8 ; II தெச. 1 : 8 ; மத். 28 : 20). இறுதியாக, விசுவாசிகளிடையே காணப்படும் ஒற்றுமையானது, தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே உறவுப்பாலமாக இருக்கிறது.

**இன்று, கிறிஸ்தவத்தில் நாம் எப்படி ஒற்றுமையாக இருக்க முடியும்?**

நாமெல்லாரும் வேத வாக்கியங்களின் போதனைகளைப் பின்பற்றினால் ஒற்றுமையாக இருக்க முடியும் (I தீமோ. 3 : 16,17) உபதேசம் மற்றும் நீதியின் அடிப்படை வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் வேதவாக்கியங்கள் எல்லாவற்றையும் அடிப்படையாகக் கொண்டு, உபதேசம் என்னும் வார்த்தைக்கு விளக்கம் கொடுக்க ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். அரைகுறையான வாக்கியங்களைக் கொண்டல்ல. வேதவாக்கியங்களை ஆதாரமாகக் கொண்டிராத உபதேசமோ அல்லது மார்க்க சம்பந்தமான நடைமுறையோ பிரிவினையில் அல்லது கீழ்ப்படியாமையில் தான் கொண்டுபோய்விடும். நாம் தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொள்ள வேதவாக்கியங்கள் எல்லாவற்றையும் அறிந்துகொள்ள வேண்டும். அப்பொழுது கிறிஸ்து விரும்புகிற ஒற்றுமையை நாம் பெற்றுக்கொள்ள முடியும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒற்றுமைக்காக ஜெபித்தார்.

**இந்த வசனப்பகுதி ஒற்றுமை சம்பந்தமாக நாம் புரிந்து கொள்வதற்கு அவசியமான பல பாடங்களை நமக்கு வெளிப்படுத்துகிறது.**

**முதலாவது, அவிசுவாசிகள் தேவனுக்கு கீழப்படியும்படியாக உந்தப்படும் அளவுக்கு இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் ஒற்றுமையாயிருக்க வேண்டும்.**

**இரண்டாவது பிரிவினை என்பது மக்களைத் துரத்திவிடுகிறது. எந்த ஒரு அமைப்பிலும் பிரிவினை என்பது தோல்விக்கான பாதையாயிருக்கிறது.**

✝

# சபை
# The church

*Andrew Connally*



- **சபையானது** மற்றவர்களைவிட தாங்களே சிறந்தவர்கள் என்று எண்ணும் மக்களால் ஆனதல்ல. மாறாக, தங்களைவிட மற்றவர்களே சிறந்தவர்கள் என்று எண்ணும் மக்களால் ஆனதாகும். மேலும், இப்படிப் பட்டவர்கள் தொடர்ந்து மற்றவர்களுக்கு சிறந்ததையே செய்யப் பாடுபட வேண்டும்.

- **சபையானது** பூரணமானவர்களால் ஆனதல்ல. ஆனால், பூரணமான கர்த்தரையும், பூரணமான பிரமாணத்தையும் பின்பற்றுகிறோம் என்று உணர்கிற மக்களால் ஆனது. இப்படிப்பட்டவர்கள் தங்களால் இயன்ற வரை சிறந்ததையே செய்யவேண்டும்.

- **சபையானது** தவறே செய்யாதவர்களால் ஆனதல்ல. ஆனால், தங்கள் தவறுகளை ஒத்துக்கொண்டு, அவைகளை விட்டுவிடுகிறவர்களால் ஆனது. நாம் தொடர்ந்து நம் தவறுகளை நியாயப்படுத்தவோ அல்லது தொடர்ந்து திரும்ப திரும்ப அதே தவறுகளைச் செய்து கொண்டோ இருக்கக்கூடாது.

- **சபையானது** ஒவ்வொருவரிடமிருந்தும் தன்னை விலக்கிக்கொள்ள முயற்சிக்கவில்லை. ஆனால், ஒளியில் நடக்க விரும்புவர்களை அன்பிலும், ஐக்கியத்திலும் இணைக்க முயற்சி எடுக்கிறது.

- **சபையானது** யாரையும் தடை செய்வதற்கு சர்வாதிகாரத்தனமான சட்டங்களை இயற்ற முயற்சிப்பதில்லை. மாறாக, எல்லோருக்கும் உதவி செய்யத்தக்க கிறிஸ்துவின் பூரணமான பிரமாணத்தைக் எடுத்துப் போதிக்கிறது.

- **சபையானது** ஒருவருடைய வாழ்க்கையிலிருந்து மகிழ்ச்சியை எடுத்துப் போட எப்போதுமே முயற்சிப்பதில்லை. அதே வேளையில் ஒவ்வொரு வருடைய வாழ்க்கையிலும் மகிழ்ச்சியை உண்டாக்கும் விதமாக காரியங் களைச் செய்கிறது.

- **சபையானது** உங்களைத் தாழ்வாக உணரச் செய்யும்படி முயற்சிக்க வில்லை. மாறாக, பரிசுத்த அழகை உங்கள் வாழ்க்கைக்குள் கொண்டு வருகிறது.

- **சபையானது** உங்கள் வாழ்க்கையின் எஜமானாக இருப்பதில்லை. அது உங்களை எஜமானிடத்தில் கொண்டு செல்லும் பாலமாக இருக்கிறது.

- **சபையானது** உங்களை உங்கள் பணத்திடமிருந்து பிரித்தெடுக்க முயற்சிக்கவில்லை. மாறாக, தேவனிடத்திலிருந்து பணம் உங்களைப் பிரித்துவிடாமல் பாதுகாத்துக்கொள்ள உதவி செய்கிறது.

- **சபையானது** உங்கள் வாழ்க்கையின் முதன்மையானவைகளைக் கொள்ளையிட முயற்சிப்பதில்லை. ஆனால், உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எவைகளுக்கு முதலிடத்தைக் கொடுக்கவேண்டுமென்று கற்றுத் தரும் கல்விக் கூடமாயிருக்கிறது. ✞

---

## மனதின் விருப்பம்

*நன்மை செய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது. நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை. ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன். அந்தப்படி நான் விரும்பாததை நான் செய்தால், நான் அல்ல எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. ஆனபடியால், நன்மைசெய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமை யுண்டென்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன். உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன் (ரோமர் 7:18,22).*

# ஒன்று மற்றொன்றைப் போலவே இருக்கிறதா?

# *One as Good as Another ?*

*Bill Dillon*



நண்பர்கள் இருவர் தாங்கள் புதிதாக வாங்கின வாகனத்தின் நன்மைகளை அல்லது நிறைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். நகைச்சுவையுடன் இருவருமே அவரவர் வாகனம் மற்ற வாகனங்களை விட எப்படிச் சிறந்தது என்பதற்கான காரனங்களைக் கொடுத்தார்கள். அப்பொழுது அந்த வழியாய் அவர்களுக்குத் தெரிந்த ஒரு நண்பர் சென்று கொண்டிருந்தார். அவர்கள் அவரையும் தங்கள் நட்புரீதியான வாக்குவாதத்தில் இணைத்துக் கொண்டார்கள். அவரிடம் அவர்கள் **இந்த இரண்டு வாகனத்தில் உங்களுக்கு எது பிடித்திருக்கிறது?** என்று கேட்டார்கள். அந்த நண்பர் இவர்களுடைய வாக்குவாதத்தில் தான் இழுக்கப்பட விரும்பாததால் எனக்குத் தெரியவில்லை, **இரண்டுமே ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது என்று சொல்லி தப்பித்துக் கொண்டார்.**

இரண்டுமே ஒரே மாதிரியாக எப்படி இருக்க முடியும்? சில விஷயங்களில் வேண்டுமானால் அப்படியிருக்கலாம். ஆனால் எல்லாவற்றிலும் அப்படி இருக்க முடியாது? ஒரு ஆணோ அல்லது பெண்ணோ மற்றவர்களைப் போல் எப்படி இருக்க முடியும்? ஒரு உணவு மற்ற உணவைப்போல் எப்படி இருக்க முடியும்?

அதுபோலவே, இயேசு கிறிஸ்து ஒரே சபையைத் தான் கட்டினார். அதைத் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே வாங்கினார் என்று வேதம் போதிக்கிறது. **ஆகையால் உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தததினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்** ( அப் 20 : 28 ). சபையைக் குறித்துத்தான் நாம் அக்கறையுள்ள்வர்களாக இருக்க வேண்டும். ஒருவர் இயேசு கிறிஸ்துவின் மீதான தன்னுடைய அன்பை வெளிப்படுத்தி அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்போது அவர் சபையிலே சேர்க்கப்படுகிறார். இப்போது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள். **கர்த்தருடைய சபையிலா அல்லது மார்க்கப் பிரிவினை சபையிலா?**

✞


---

## கிறிஸ்துவின் போர்ச்சேவகர்களுக்கான அறிவுரைகள்

நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர் களாகும்படிக்கு தேவனுடைய சர்வாயுதவர்களையும் எடுத்துக்கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களையும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்; சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களையும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல் லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களையும் நில்லுங்கள். இரட்சணியாமன்னும் தலைச் சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். (எபே 6 : 11–7).

சாத்தானுடனான யுத்தத்தில் பக்தி வாழ்வில் பயிற்சி எடுக்காமல், காலத்தைக் கழித்துவிட்டால், ஒருமுறைகூட நம்மால் வெற்றி பெறவே முடியாது! ஆகவே, முறையான பயிற்சியும், பொருத்தமான வஸ்திரமும் இருந்தால் தான் ஆவிக்குரிய வாழ்வில் அச்சுறுத்தலை ஏற்படுத்தும். அந்த எதிரியை நம்மால் எளிதாக வீழ்த்தி, ஆன்மீக வாழ்வில் வீரநடை போட்டு, கிறிஸ்துவோடு சேர்த்து பரலோகம் சென்று பரமவாழ்வை வாழமுடியும்.

# மெய்யான சபை
# True Church



" **Ekklesia** " என்னும் கூட்டு கிரேக்க வார்த்தையின் அடிப்படை விளக்கம் **அழைக்கப்பட்டவர்களின் கூட்டம்** என்பதாயிருக்கிறது. முதல் நூற்றாண்டுக்கு முன்பாக பல நூறு வருடங்களுக்கு முன்பே நபர்களின் கூட்டத்தைக் குறிப்பதற்காக **Ekklesia** என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாடு, **Ekklesia** என்னும் வார்த்தையை அதன் நிருபங்களில் **114 முறை** பயன்படுத்தியிருக்கிறது. இவ்வார்த்தையானது மத சம்பந்தமாகவும், மத சம்பந்தமற்ற முறையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வார்த்தை எந்தச் சூழ்நிலையில் பயன்படுத்தப்ட்டிருக்கிறது என்பதை வைத்தே அதன் பொருள் அமையும். உதாரணமாக, அப்போஸ்தலர் 19 : 32,39 மற்றும் 41-ம் வசனங்களில் மத சம்பந்தமாகப் பயன்படுத்தப்படாமல், வெறுமனே கூட்டம் என்றுதான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலர் 7 : 38 - ல் **Ekklesia** என்ற பதம் எகிப்திலிருந்து வெளியேறிய இஸ்ரவேலர்களைக் குறிக்கிறது.

மேலும் **சபை** என்னும் பதம் புதிய ஏற்பாட்டில், கிறிஸ்தவர்களின் கூட்டத்தைக் குறிப்பதற்காக மூன்று விதங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒன்றான மெய்சபையின் உலகளாவிய தன்மையக் குறிக்கும் விதமாக, இயேசு கிறிஸ்துவானவர் தாம் கட்டுவதாக வாக்குத்தத்தம் பண்ண **சபை** என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார் ( மத். 16 : 18 ).சபை ஸ்தாபிக்கப்பட்ட நாளிலிருந்து, இயேசு கிறிஸ்துவின் வருகை வரைக்கும், உலகமெங்கும் பல தலைமுறையினரால் பின்பற்றப்பட்டு, எல்லா இடங்களிலும் பரவும் தன்மை பெற்றிருக்கிறது. உண்மையான சபை இயேசு கிறிஸ்துவுக்குச் சொந்தமானது என்பதை நாம் கண்டுகொள்ளாமல் இருக்கக்கூடாது. வேறுசில சந்தர்ப்பங்களில் **சபை** என்னும் வார்த்தை ஒரு குறிப்பிட்ட பகுதியில் கூடும்

கிறிஸ்தவர்களின் கூட்டத்தைக் குறிக்கிறது. உதாரணமாக, கொரிந்து பட்டணத்தில் கூடிய கிறிஸ்தவர்களின் கூட்டத்தைக் குறிக்கிறது (I கொரி. 1 : 2). கடைசியாக, I கொரிந்தியர் 14-ல் சபை என்னும் பதம் ஒரு உள்ளூர் சபையில் ஆராதிக்கும் கூட்டத்தைக் குறிக்கிறது ( 14 : 4, 5 ). இந்த அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் சபை என்னும் வார்த்தையை உள்ளூர் சபையைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தியிருக்கிறார்.

சபை என்பது ஒரு கட்டடத்தையோ அல்லது இடத்தையோ குறிப்பதாக நமக்கு வேதத்தில் எந்த வசன ஆதாரமும் இல்லை.வேதாகமத்தில் சபை என்பது எப்போதுமே கூடிவரும் ஜனங்களைத்தான் குறிப்பதாயிருக்கிறது. ஜனங்கள் கூடிவரும் இடத்தை ஒருபோதும் குறிக்காது. Ekklesia என்னும் கிரேக்க வார்த்தையானது மதசம்பந்தமான கூடுகையாக இருந்தாலும் சரி மத சார்பற்ற கூடுகையாக இருந்தாலும் சரி, அது கூடிவரும் ஜனங்களைத்தான் குறிக்கிறது.சபை என்பது எப்போதுமே, உலகளாவிய அளவில் கூடிவரும் ஜனங்களைத்தான் குறிக்கிறது. **ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக.** ஆமென் (I பேதுரு 4 : 11).

✝

---

## உங்கள் மேலான விசுவாசத்தின் அளவீடு:

முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள். ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள். கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல் அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள். அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே. அவைகளெல்லாம் கடிந்துகொள்ளப்பட்டு வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும்; வெளியரங்கமாக்குகிறதெல்லாம் வெளிச்சமாயிருக்கிறது. ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார். ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். (எபே.5 : 8-16)

# சில காரியங்களைச் செய்யவே முடியாது
## Some things cannot be done

*Hollies miller*

ஒருவர் தன் மனதை ஈடுபடுத்திச் செயல்பட்டால் அவர் எதை விரும்புகிறாரோ அதை அவரால் செய்ய முடியும் என்று சொல்வதைக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? இந்த வாக்கியத்தில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆனால், ஒரு காரியத்தைச் செய்ய ஆசைமட்டும் போதுமானதல்ல.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சில காரியங்கள் சாத்தியமில்லை என்று போதித்திருக்கிறார். மத்தேயு 6 : 24-ன்படி **இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது** என்று நாம் பார்க்கிறோம். ஒருவர் தேவனுக்கும், உலகப்பொருளுக்கும் ஒரே நேரத்தில் ஊழியஞ்செய்ய முடியாது. **வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு** ( யாக் . 3 : 16 ) என்று யாக்கோபு ஆசிரியர் எழுதியிருக்கிறார். மேலும் அவர், **உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாயிருக்கிறான்** ( யாக் . 4 : 4 ) என்றும் சொல்லுகிறார்.

ஒருவர் தேவனுக்கும், உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய முயற்சித்தால் அம்முயற்சி தோல்வியில் தான் போய் முடியும். ஒருவர் உலகத்துக்கு சிநேகிதனாயிருக்க முயற்சிக்கும்போது, இயல்பாகவே அந்த நபர் தேவனுக்கு பகைஞனாகி விடுகிறார். கசப்புணர்வும், காழ்ப்புணர்ச்சியும் ஆளுகை செய்யும்போது அதனால் சபையிலும், சமுதாயத்திலும், குடும்பத்திலும் சமாதானம் இருக்காது.

அப்போஸ்தலனாகிய பவுல், நம்மை இரட்சிக்கும்படியான விசுவாசம் தேவனுடைய வசனத்தைக் கேட்பதினாலே வரும் என்று சொல்லுகிறார் ( ரோமர் 10 : 17 ) . இதன் பொருள், இரட்சிப்பிற்கான விசுவாசம் உணர்வுப்பூர்வமான அனுபவத்தினாலேயோ அல்லது சூரிய அஸ்தமனத்தின் அழகினாலேயோ வருவதில்லை. தேவன் விசுவாசம் சம்பந்தமாக வேதவாக்கியங்களில்

எவைகளைக் கொடுத்திருக்கிறாரோ அதற்கு மாற்றாக யாரும் தங்கள் சுய எண்ணத்தின்படி விளக்கத்தைக் கொடுக்க முடியாது. இயேசு கிறிஸ்துவின் நாட்களில் வாழ்ந்த பரிசேயர்கள் அவ்வாறு முயற்சித்து தோற்றுப்போனார்கள். அவர்களைப் பற்றி பவுல் சொல்லும்போது **தேவனைப்பற்றி அவர்களுக்கு வைராக்கியமுண்டென்று அவர்களைக் குறித்துச் சாட்சி சொல்லுகிறேன்; ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. எப்படி யென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல் தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவ நீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்** (ரோமர் 10 : 23) என்று சொல்லுகிறார். நாம் தேவனுடைய வர்த்தையை ஓரமாக வைத்துவிட்டு, நீதியைப் பற்றி சொந்தக் கருத்துகளைப் புகுத்தினால் முடியாததை முயற்சிக்கிறோம் என்று தான் பொருள்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய உபதேசத்திற்குக் கீழ்ப்படி கிறவர்கள் தம்மீது முழுமையான விசுவாசம் வைக்க வேண்டுமென்று எதிர் பார்க்கிறார். அவர் இந்தப் பூமியில் வாழ்ந்த நாட்களில் தம்மைப் பார்த்து ஆண்டவரே, ஆண்டவரே என்று அழைத்தும், தாம் போதித்தவைகளை செய்யத் தவறினவர்களைக் கடுமையாகச் சாடினார் (லூக். 6 : 46). இருபது நூற்றாண் டுகள் உருண்டோடிய பிறகும், அவருடைய மனநிலையில் மாற்றம் ஏதாவது ஏற்பட்டிருப்பதுபோல ஆதாரம் ஏதும்மில்லை.

பிரியமானவர்களே! முடியாததை முயற்சிப்பதைக் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஏனெனில், இவ்வுலகில் சில காரியங்களைச் செய்யவே முடியாது என்பதால்.

✝

---

## தேவனுடைய வார்த்தையை எப்படிப் படிக்க வேண்டும்?

- திறந்த மனதுடன் படிக்க வேண்டும் (அப். 17 : 11; II பேதுரு 3 : 2).
- ஆவிக்குரிய சிந்தையுடன் படிக்கவேண்டும் (கொலோ 1 : 9 ; யாக்கே. 1 : 8).
- சத்தியத்தை அறியும் ஆசையுடன் படிக்கவேண்டும் (சங்கீதம் 119 : 11).
- வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்கிற எண்ணத்தோடு படிக்கவேண்டும் (II தீமோத் 3 : 16,17).

# ஊழியத்திற்கான தடைகள்
# *Hindrances to Evangelism*

*Randall Caselman*

தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஊழியம் செய்கிறவர்களாயிருக்க வேண்டுமென்று புதிய ஏற்பாடு போதிக்கிறதென்பதில் எந்தச் சந்தேகமுமில்லை.

**நமக்கு நேரடியான கட்டளை உண்டு:**

நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்தானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்கு 16: 15;மத் 28 :19).

**நமக்கு ஊழியத்திற்கான உதாரணம் உண்டு:**

சிதறிப்போனவர்கள் எங்குந்திரித்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள் (அப் 8 :4).

**நமக்கு ஊழியம் செய்யும்படியான கட்டளையும் உண்டு:**

அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான் (அப் 4 : 12). இயேசுவாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை என்றிருக்கிறபடியால் நாம் மற்றவர்களிடத்தில் இயேசு கிறிஸ்துவைப்பற்றி எடுத்துரைத்து ஊழியம் செய்யவேண்டும்.

ஆத்துமாவைக் குறித்து நாம் உணர்வில்லாதவர்களாய் இருக்கும்படி பிசாசு பலவிதமான தந்திரங்களைப் பயன்படுத்துகிறான். சாத்தானின் யுக்திகள் சில வேளைகளில் நம் ஆத்தும ஆதாய முயற்சிக்குப் பெரும் தடையாக அமைந்துவிடுகிறது.

**நம்முடைய முயற்சிகளில்லாமலேயே ஆத்துமாக்கள் ஆதாயப்படுத்தப்படும் என்று நாம் தீர்மானிக்கும்போது:**

நாம் தேவனுக்கு உடன்வேலையாட்களாக இருக்கிறோம் என்பதை நாம்

புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக் கிறோம்;அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார் என்று பவுல் சொல்லுகிறார் ( எபே 2 : 10 ). மற்றவர்களை நாம் தேவனுக்காக ஆதாயப்படுத்துவதைவிட அவருக்காக நாம் வேறு என்ன வேலை செய்யமுடியும்? பேதுரு ஆசிரியர் குறிப்பிடும் போது, ஒரு வரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார் (II பேதுரு 3 :9).

**நாம் இயேசு கிறிஸ்துவை அறிவிக்கும் முயற்சியில், மேம் போக்காகவும், இயந்திரத்தனமாகவும் இருக்கும்போது:**

கேள்விகள்! மற்றவர்களைச் சுவிசேஷத்துடன் சந்திப்பதற்கு நம்மிடத்தில் ஏதாவது திட்டம் இருக்கின்றதா? நாம் யாரை இயேசு கிறிஸ்துவினிடத்தில் கொண்டுவர விரும்புகிறோமோ அவர்களுக்காக ஜெபிக்கிறோமா? அவர்களை நாம் தேவனோடும், அவருடைய பிள்ளைகளோடும் தனிப்பட்ட ரீதியில் இணைக்க முயற்சிக்கிறோம் என்பதை அவர்கள் அறிந்துகொள்கிறார்களா? நாம் அவர்களைப் பார்த்து தேவன் உங்களை நேசிக்கிறார், நீங்கள் இரட்சிக்கப்பட அவர் விரும்புகிறார் என்று சொல்லி அவர்களை ஆதாயப்படுத்த வேண்டும். மேலும் இழந்துபோனவர்களைத் தேடுகிற காரியத்திலும், அவர்களை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்துகிற காரியத்திலும் நாம் தீர்மானம் உடையவர்களாக இருக்க வேண்டும்.

**மற்றவர்களை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்துகிறது பிரசங்கி யாருடைய பொறுப்பு மாத்திரமே என்று நாம் தீர்மானிக்கும்போது:**

முதல் நூற்றாண்டில் கர்த்தருடைய சபை சிதறடிக்கப்பட்டபோது, பிரசங்கியார்கள் அதாவது அப்போஸ்தலர்கள் எருசலேமிலே இருந்தார்கள். ஆகவே சபை அங்கத்தினர்கள் எங்கெல்லாம் சென்றார்களோ அங்கெல்லாம் சுவிசேஷத்தை அவர்கள்தான் பிரசங்கித்தார்கள் (அப் 8 : 4).

**நம் கவனத்தை உள்நோக்கித் திருப்பும்போது:**

இன்று சபை மூலமாக நடத்தப்படும் பல நிகழ்ச்சிகள் தேவனுடைய நோக் கத்தை மையமாகக் கொண்டு நடத்தப்படாமல், நம் தனிப்பட்ட தேவைகளைப்

பூர்த்தி செய்யும்படிக்கே நடத்தப்படுகின்றன. ஆனால், தேவன் அவருடைய குமாரனைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் (யோவான் 3 : 16). தேவன் நம்முடைய தனிப்பட்ட தேவைகளைச் சந்திக்கும்படி தம்முடைய ஒரேபேறான குமாரனை அனுப்பவில்லை. மாறாக நம்முடைய ஆத்துமாக்களை இரட்சிக்கும்படியாகவே அனுப்பினார். இயேசு கிறிஸ்துவின் செயல் திட்டமே நம்முடைய செயல் திட்டமாகவும் இருக்கவேண்டும். அதாவது, இழந்துபோனதை தேடுவதும் இரட்சிப்பதும் நம் செயல் திட்டமாக இருக்க வேண்டும் ( லூக்கா 19 : 10) .

**ஆத்துமாக்களைவிட நம் பிரச்சனைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும்போது:**

ஆதித் திருச்சபையின் முதன்மையான பணி விழுந்து போனவர்களை இரட்சிப்பதாக இருந்தது. நம்மில் பலர் பலவிதமான பிரச்சனைகளில் அகப்படும் பொழுது, விழுந்துபோனவர்களின் தேவைகளை நாம் காணாதபடிக்கு நம் கண்கள் குருடாகிவிடக்கூடாது. ஆம், பிரச்சனைகளைக் குறித்து விவாதிப்பது முக்கியமானதுதான்; ஆனால் அவைகள் முதலிடத்தைப் பிடித்து, தேவனுடைய கிருபையைக் குறித்துக் நாம் மற்றவர்களிடம் எடுத்துரைக்கும் ஆவியை அணைத்துவிடக்கூடாது. இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ள அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன் (I கொரி 2 : 2 ) என்று பவுல் சொன்னார்.

**சகோதர சிநேக உணர்வை நாம் இழக்கும்போது:**

ஒற்றுமையின்மை ஆத்தும ஆதாயப்பணிக்குப் பெருந்தடையாக இருக்கிறது. நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால்,அதனால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்று கிறிஸ்து சொன்னார் ( யோவான் 13 : 35 ). ஆனால் இங்கே, உள்ளூர் சபைகளில் காணப்படும் பிரச்சனைகளும், போட்டிகளும் ஆத்தும ஆதாயப் பணிகளுக்குப் பெரும் தடைகளாக இருக்கின்றன. இரட்சிப்பு சபையின் மூலமாக கிறிஸ்துவுக்குள்தான் இருக்கிறது. அதாவது இரட்சிப்பின் விளைவுதான் சபை. இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் (அப். 2 : 47).

**நாம் உபதேசத்திற்கு மாறாக தவறான வாழ்க்கை வாழும்போது:**

உலகம் நம்மை உற்றுநோக்கிக்கொண்டிருக்கிறது. இழந்துபோனவர்கள் நம் ஒழுக்கக்காரியங்களைக் குறித்து அறிந்திருக்கிறார்கள். மற்றவர்களால் வாசிக்கப்படும் புத்தகமாக நாம் இருக்கிறோம். நாம் நம் மார்க்கத்தைக்குறித்து

மற்றவர்களுக்கு அறிவிக்கவேண்டும். திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாத படிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது ( யாக் 1 : 27 ). நம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கு நாம் கிறிஸ்துவைப் போன்றே மாதிரியாக இருக்க வேண்டும். நாம் வேதாகமத்தை எடுத்துக்கொண்டு சபைக்குப் போவதை மற்றவர்கள் காண்பது போதுமானதல்ல; அதை நாம் இருதயங்களில் சுமந்து நம் அனுதின ஜீவியத்தில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும்.

**நாம் உபதேசத்தில் கண்டிப்பாக இல்லாதபோது:**

இன்று பல சபைகள் சபை அங்கத்தினர்களின் தேவைகளை தரை மட்டமாகத் தளர்த்திவிட்டன. அதன் காரணமாக அப்படிப்பட்ட சபைகள் சபை அங்கத்தினர்களிடம் ஒழுக்கத்தை எதிர்பார்ப்பதில்லை. நாமோ தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாகவும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார் (I பேதுரு 2 : 9).

**இப்போது நமக்குத் தேவை ஓர் இலட்சிய வார்த்தை**
**அந்த இலட்சிய வார்த்தை ஊழியம்**

## பாவத்தைப்பற்றிய உண்மை

- இயற்கை அதை அறிவிக்கிறது! ஏனென்றால், அது அதன் சாபத்திற்குள்ளாகி இருக்கிறது (ஆதியாகமம் 3:17).
- மனிதன் அதை ஒத்துக்கொள்கிறான் நான் பாவம் செய்தேன் ( லூக். 5 : 2).
- நியாயப்பிரமாணம் அதைக் கண்டறிந்திருக்கிறது இப்படியிருக்க பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமானத்தினால் வருகிறது (ரோமர் 3 : 20).
- கிறிஸ்து அதை வெளிப்படுத்தியிருக்கிறார் பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் (யோவான் 8 : 34).

# தனிநபர் ஊழியத்தில் ஈடுபடுவதற்கான வழிகள்

## Ways to Get Involved in Personal Evangelism

*Jimmy Young*

**இந்த வருடம் நான் தனிநபர் ஊழியத்தில் ஈடுபடப்போகிறேன்** என்று நம்மில் பலர் சொல்லியிருக்கிறோம். இது நல்லது தான். ஏனென்றால், அதின் தேவையை நாம் காண்கிறோம். ஆகவே நாம் தனிநபர் ஊழியத்தில் ஈடுபட கடமைப்பட்டிருக்கிறோம். சுவிசேஷத்தை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வதை விட முக்கியமான வேலை எதுவும் இருக்க முடியாது (அப் . 8 : 4 ; I தெச . 1 : 8). இது குறித்து அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளைக் கவனியுங்கள். **ஆதலால், என் குமாரனே நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு. அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி** (II தீமோ. 2:1, 2). கீழ்க்காணும் காரியங்கள், ஒருவர் தன்னை தனிப்பட்ட ரீதியில் சுவிசேஷ ஊழியத்தில் முழுமையாக ஈடுபடுத்த எளிய திட்டங்களாகும்.

### நேரத்தை அர்ப்பணிப்பது அவசியமாயிருக்கிறது

நாம் செய்யவேண்டிய காரியங்களைக் குறித்து எப்போதுமே மனதில் ஒரு தீர்மானம் இருக்கவேண்டும் (II கொரி 9 : 5-8). நீங்கள் தனிநபர் ஊழியத்தில் ஊக்கமாகத் துடிப்புடன் செயல்படவேண்டுமென்றால் அந்த வேலைக்கென்று நீங்கள் நேர்மையாக ஒவ்வொரு வாரமும் நேரத்தைச் செலவு செய்யவேண்டும். நம் எல்லோருக்குமே ஒவ்வொரு வாரமும் 168 மணிநேரம் உண்டு. அதில் நாளொன்று இரண்டு (2) மணி நேரம் ஊழியத்திற்குச் செலவழித்தால் கூட அது நம் முடைய நேரத்தில் 1.2%, சதவீதமாகத்தான் இருக்கும். அதுபோல் இரண்டரை ( 2 1/2 ) மணிநேரம் என்று எடுத்துக்கொண்டாலும் கூட அது நம் முடைய நேரத்தில் 1.5% சதவீதமாகத்தான் இருக்கும். இம் முயற்சிகளெல்லாம் தோல்வி யடைந்தாலும்கூட, ஊழியத்திற்கென்று நேரம் கிடைக்கத்தக்கதாக, சில காரியங் களை நாம் தியாகமாக விடமுடியும். இயேசு கிறிஸ்துவும் ஒரு சந்தர்ப்பத்தில் சமாரிய ஸ்திரீயிடம் அவளுடைய ஆத்துமாவைக் குறித்துப்

பேசிக்கொண்டிருந்தார் (யோவான் 4 : 1 – 34). குறைந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்த காரியங்களைத் தியாகம் செய்வதற்கு உகந்த ஒன்றாக ஊழியம் இருக்கிறது என்று நான் நிச்சயப்படுத்துகிறேன். நீங்கள் ஊழியத்திற்கென்று வாரத்திற்கு பலமணி நேரம் என்று ஒதுக்கினாலும் அல்லது ஒவ்வொரு நாளின் மாலைப்பொழுதை ஒதுக்கினாலும் சரி, மிக முக்கியமான விஷயம் என்னவென்றால் தொடர்ந்து அத்திட்டத்தை கடைசிவரை நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும்.

**ஒரு குறிப்பேடு அவசியமாயிருக்கிறது**

விலை உயர்ந்த ஒன்றாக இந்தக் குறிப்பேடு இருக்க வேண்டிய அவசியமில்லை. இக் குறிப்பேட்டின் நோக்கம் ஆத்துமாவை ஆதாயப்படுத்துவதற்கு வாய்ப்புள்ளவர்களைக் குறிப்பெடுத்து அவர்களைச் சந்திப்பதற்குத்தான். இக்குறிப்பேட்டில் நாம் சந்தித்தவர்களுடைய பெயர், விலாசம், தொலைபேசி எண்கள், தேதி இன்னும் நாம் அவர்களுக்குப் போதிக்க உதவும் எல்லாத் தகவல்களையும் பதிவு செய்யவேண்டும். நீங்கள் யாரைப் போய் சந்திக்கிறீர்களோ அவர்கள் விருப்பமில்லையென்று சொன்னாலும், விட்டுவிடாமல் அவர்களைக் குறிப்பெடுத்து, தொடர்ந்து அவர்களைச் சந்திக்கவேண்டும். ஒருவேளை அந்த நபர் விரும்பாத பட்சத்தில் அவருடைய பெயரை உடனே எடுக்காமல், அவர் மரித்த பிறகுதான் அந்த நபரின் பெயரை குறிப்பேட்டிலிருந்து நீக்கவேண்டும். அதே வேளையில் ஒருவர் உயிருடன் உள்ளவரை அவரை ஆதாயப்படுத்துவதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கிறது என்பதைக் கவனித்து, நம்முடைய குறிப்பேட்டில் எழுதப்பட்டுள்ள நபர்களின் ஆத்தும இரட்சிப்புக்காக தினந்தோறும் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும்.

**செய்த வேலைகளைப் பற்றிய குறிப்பு அவசியமாயிருக்கிறது**

தனிநபர் ஊழியத்தில் நீங்கள் எவ்வளவு நேரத்தை அர்பணித்திருக்கிறீர்கள் என்பதற்கு இது மிகவும் அவசியமாயிருக்கிறது. இதன் மூலம் நீங்கள் ஒரு வாரத்தில் எவ்வளவு நேரம் ஊழியப்பணி செய்தீர்கள் என்பதைத் துல்லியமாகக் காணமுடியும். அப்பொழுது நமது ஞானமும் திறமையும் இதிலே வெளிப்படும். ஊழியத்தின் ஏதாவதொரு நிலையில் உங்களை ஈடுபடுத்திக்கொள்ள முடியும் என்று நீங்கள் எண்ணும்போது ஆச்சரியப்படுவீர்கள். ஆகவே, கீழ்க்காணும் காரியங்களைச் செய்யும்படி உங்களை நான் உற்சாகப்படுத்துகிறேன்.

- ஊழியம் சம்பந்தமாக ஜெபியுங்கள்
- வேதவாக்கியங்களை எடுத்துரைக்கத்தக்க உங்களை ஆயத்தப்படுத்துங்கள்

- ஆத்துமாக்களை தேடும் பணியில் தொய்வின்றி செயல்படுங்கள்
- கிறிஸ்தவரல்லாதவரோடும் வேதபாடத்தைப் படியுங்கள்
- பலவகையான விதைக்கும் செயல்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.
- அப்பொழுது, இவைகள் அதிக மேன்மை தரும்.

மேற்சொல்லப்பட்ட காரியங்களில் நீங்கள் கைப்பிரதிகள், ஆவிக்குரிய புத்தகங்கள் கொடுப்பதன் மூலமாகவும் ஈடுபடமுடியும். எல்லாவற்றையும் முயற்சித்துச் செய்வதிலே நாம் ஒருபோதும் தோற்றுப்போகதிருக்க வேண்டுமெனில், சபையில் மூப்பரிடமோ அல்லது பிரசங்கியாரிடமோ சென்று ஊழியத்திற்கு நான் என்னால் இயன்ற உதவியைச் செய்கிறேன் என்று சொல்லுங்கள்.

**உங்களுக்கு கணக்கொப்புவிக்கத்தக்க ஒரு நபர் அவசியமாயிருக்கிறது**

உங்கள் செயல்பாடுகளைக் கண்காணிக்க ஒரு நபர் தேவை. இதைக்குறித்து யோசியுங்கள். உங்களோடு நெருங்கிய தொடர்புடைய ஒருவரை நீங்கள் தெரிந்துகொண்டு ஒவ்வொரு வாரமும் தனிநபர் ஊழியத்தில் எவ்வளவு நேரம் ஊழியப்பணியாற்றினீர்கள் என்று அவரிடம் கணக்கொப்புவியுங்கள். உங்கள் செயல்பாடுகளை அவரோடு பகிர்ந்துகொள்ளும்போது உங்கள் ஊழியப்பணியில் நிறைகுறைகளைக் குறித்து அவர் நல் ஆலோசனைகளை வழங்குவார். ஆனால் அந்தநபர் கண்டிப்பாக உங்கள் கணவனாகவோ, மனைவியாகவோ இருக்கக்கூடாது. ஏனென்றால் அவர்களிடமிருந்து நீங்கள் எளிதாகத் தப்பி விடுவீர்கள்.

**மற்றவர்களுக்குப் போதிக்கும்படியான வேதபாடங்கள் எப்போதும் உங்கள் வசம் இருக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது**

ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்கதாக சுருக்கமான வேதவசன அறிமுகப் பாடங்களை வைத்துக்கொள்ள வேண்டும். இப்பாடம் இரண்டு நோக்கங்களை நிறைவேற்றுகிறது.

- ஒருவரை ஒருமுறை மட்டுமே சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்து பின்பு அவரைச் சந்திக்கும் வாய்ப்பே கிடைக்காத பட்சத்தில் அவரோடு வேதபாடங்களைச் சுருக்கமாகப் பகிர்ந்துகொள்வதற்கு இது உதவுகிறது. இதன்மூலம் அடிப்படைப் பாடங்களை நாம் மற்றவர்களுக்குப்

போதித்தபிறகு, சுவிசேஷத்தை நாம் மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டோம் என்ற திருப்திகரமான உணர்வு நமக்குள் ஏற்படுகின்றது.

☛ அடிப்படைப் பாடத்தை ஒருவரிடம் போதிக்கும்பொழுதே அவர் மேற் கொண்டு சத்தியத்தைக் கற்றுக்கொள்ள விரும்புகிறாரா என்பதை அறிந்து கொள்ளவும் இது உதவுகிறது. ஆகவே ஒவ்வொரு கிறிஸ்தவனும் மற்றவர் களுக்கு ஆழமான சத்தியத்தைப் போதிப்பதற்கு முன்பாக அடிப்படைப் பாடங்களைத் தங்கள் வசம் வைத்திருக்க வேண்டியது அவசியம்.

மற்றவர்கள் மீதான நம்முடைய அன்பு, வார்த்தைகளைத் தாண்டிச் செல்லவேண்டும். தேவையில் இருப்பவர்களுக்கு நாம் உண்மையாகவே உதவி செய்யவேண்டும் ( I யோவான் 3 : 16-18 ). கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பதுதான் இன்றைய கிறிஸ்தவத்தின் அவசரமாகவும், அச்சாரமாகவும் இருக்கிறது.

ஆகையால் என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்... திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது (யாக்கோபு 1:19, 27). ✝

## தேவனும் மனிதனும்

தங்களைப் பெரிதாக நினைத்துக்கொள்ளும் மனிதர்கள்
சர்வவல்ல தேவனுக்கே சவால்விடும் மனிதர்கள்
அகங்காரத்துடன் தேவனிடத்தில் எதிர்த்து நிற்கும் மனிதர்கள்
தேவன் இல்லையென்று சொல்லுகின்ற மனிதர்கள்
தங்களை ஒருபோதும் இயற்கையோடு ஒப்பிடா மனிதர்கள்!

ஆகாயத்துக் காரணிகள் தேவனுடைய கரங்களின்
கிரியைகளுக்கு மிகச்சிறந்த உதாரணங்களாகத் திகழ்கின்றன
சுடர்கள், இப்பால்வழிப் பாதையை ஜொலிக்கச் செய்கின்றன
ஆம்! நாம் ஆச்சரியமாகப் பார்க்கும் இப்பிரபஞ்சத்தை
தேவன் தமது வாயின் வார்த்தைகளினாலே உண்டாக்கினார்!

வசன ஆராய்ச்சி

# ரோமர் 13 : 1 – 7

## Romans 13 : 1 - 7

## Jerry Bates

1. கிறிஸ்தவர்கள் தீமையான அரசாங்கத்திற்கு கீழ்ப்படிய வேண்டுமா?
2. பவுல் இந்நிருபத்தை எழுதியபோது ரோம சக்கரவர்த்தியாக இருந்தவர் யார்?
3. உண்டாயிருக்கிற அதிகாரங்கள் யாராலே நியமிக்கப்பட்டிருக்கிறது?
4. ஆளுகின்ற அரசாங்கங்கள் யாரிடமிருந்து அதிகாரங்களைப் பெறுகின்றன?
5. அரசாங்கங்களிடம் அதிகாரம் இருக்கிறபடியால் அவர்கள் விருப்பப்படி செய்யமுடியுமா?
6. நாம் அதிகாரத்திற்கு எதிர்த்து நின்றால் யாருக்கு எதிர்த்து நிற்கிறோம்?
7. எதிர்த்து நிற்கிறவர்களுக்கு என்ன நடக்கும்?
8. மேலும் அதிகாரிகள் ________________, ____________________ க்கே பயங்கரமாயிருக்கிறார்கள்.
9. நாம் எப்படி அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்க முடியும்?
10. அரசாங்கங்கள் பட்டயத்தினால் மக்களைக் கொல்வது தேவனுடைய பார்வையில் தவறானதா?
11. அதிகாரத்தில் இருப்பவர்கள் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக்காரர் களாயிருக்கிறார்கள். அவர்கள் எப்படி நீதியைச் செலுத்துகிறார்கள்?
12. எந்த இரண்டு காரணங்களுக்காக நாம் அரசாங்கத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்?

13. நாம் மனச்சாட்சியினிமித்தம் அரசாங்கத்திற்கு கீழ்ப்படிய வேண்டுமென்றால் பொருள் என்ன?

14. கிறிஸ்தவர்கள் வரி செலுத்த வேண்டுமா?

15. ஆகையால் யாவருக்கும் ____________ வேண்டிய கடமைகளைச் ____________ எவனுக்கு ____________ செலுத்தவேண்டியதோ அவனுக்கு ____________ எவனுக்குக் ____________ செலுத்த வேண்டியதோ அவனுக்கு ____________ செலுத்துங்கள்.

## (ரோமர் 13 : 1 - 7)

எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது.ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமித்திற்கு எதிர்த்துநிற்கிறான்; அப்படி எதிர்த்துநிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள்.மேலும், அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள்; ஆகையால் நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்க வேண்டுமானால் நன்மைசெய், அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும்.உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் தேவ ஊழியக்காரனாவாயிருக்கிறான்.நீ தீமைசெய்தால் பயந்திரு; பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை.தீமைசெய்கிறவன்மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி அவன் நீதியைச் செலுத்துகிற தேவஊழியக் காரனாயிருக்கிறானே.ஆகையால் நீங்கள் கோபாக்கினையினிமித்தம் மாத்திரமல்ல, மனசாட்சியினிமித்தமும் கீழ்ப்படியவேண்டும். இதற்காகவே நீங்கள் வரியையும் கொடுக்கிறீர்கள். அவர்கள் இந்த வேலையைப் பார்த்துவருகிற தேவ ஊழியக்காரராயிருக்கிறார்களே. ஆகையால் யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்; எவனுக்கு வரியைச் செலுத்தவேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்தவேண்டியதோ அவனுக்குத் தீர்வையும் செலுத்துங்கள்; எவனுக்குப் பயப்படவேண்டியதோ அவனுக்குப்பயப்படுங்கள்; எவனைக் கனம்பண்ணவேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள்.

ரோமர் 13 : 1 - 7 வசனப்பகுதி, மேலான அதிகாரத்திற்கு அதாவது அரசாங்கத்திற்கு எவ்விதம் கீழ்ப்படிய வேண்டுமென்று, கிறிஸ்தவர்களுடைய பொறுப்பைப் பற்றிப்பேசுகிறது. அரசாங்கங்கள் தேவனிடத்திலிருந்துதான் அதிகாரத்தைப் பெறுகின்றன. ஆகவே, தாங்கள் விரும்பியபடி செயல் படலாம்மென்று அவர்கள் நினைக்கக்கூடாது.எல்லோருமே, ராஜாவாக இருந்தாலும்கூட தேவனுக்கு கீழ்ப்படியவேண்டியவர்களாயிருக்கிறார்கள். தீமை செய்பவர்களைத் தண்டிப்பதுதான் அரசாங்கங்களின் பிரதானமான பணி என்று பவுல் சொல்லுகிறார். தீமை செய்பவர்களைத் தண்டிக்கும் பொறுப்பை தேவன் தனிமனிதனுக்குக் கொடுக்காமல் அதை அவர் அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கிறார்.

கிறிஸ்தவர்கள் தேச சட்டங்களை ஒத்துகொள்ளாவிட்டாலும் கூட, தேவ தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளும்படியாக அரசாங்கத்திற்கு கீழ்படியவேண்டும். அப்படிக் கீழ்படியும்போது, நாம் தேவனுக்குக் கீழ்ப் படிகிறோம். நம்மை ஆளுகிறவர்கள் தேவ ஊழியக்காரர்களாயிருக்கிறபடியால், அவர்களுக்கு வரி செலுத்தவும், அவர்கள் வகித்திருக்கும் பதவியினிமித்தம் அவர்களைக் கனப்படுத்தவும் வேண்டும்.

**ஒரு கிறிஸ்தவன் கடுமையான அடக்குமுறை செய்கிற அரசாங்கத்தின் கீழிருக்கும்போது எப்படி நடந்துகொள்ள வேண்டும்?** நிச்சயமாகவே பல அரசாங்கங்கள் தேவன் விரும்புகிறபடி செயல்படுவதில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இயற்கையாகவே அரசாங்கத்திற்கு விரோதமாக கிறிஸ்த வர்களுக்கு பொறுப்புணர்ச்சி வந்துவிடுகிறது. தேச சட்டம் தேவனுடைய சட்டத்திற்கு எதிராக இருக்கும்போது மாத்திரம் நாம் கீழ்ப்படியக்கூடாது. மாறாக தேவனுடைய சட்டத்திற்குத்தான் கீழ்ப்படிய வேண்டும் ( அப். 5 : 29 ). இருந்தபோதிலும், பொதுவான விதி என்னவென்றால், கிறிஸ்தவர்கள் எந்த அரசாங்கத்தின் கீழ் வாழ்கிறார்களோ அதற்கு கீழ்ப்படியவேண்டும்.கிறிஸ்தவம் கலகத்தை உற்சாகப்படுத்துவதில்லை, அதேபோல் தேசத்துரோகத்தையும் உற்சாகப்படுத்துவதில்லை.

---

## அன்பிலே இல்லாத இரண்டு செயல்கள்

- **அன்பிலே** பயம் இல்லை (I யோவான் 4 : 18)
- **அன்பிலே** பொல்லாங்கு இல்லை (ரோமர் 13 : 10)

# கர்த்தர் நம்மோடு இருக்கிறார்

## The Lord is with us

*John Gipson*

கிறிஸ்துவின் சபைகளுக்கு அது கஷ்டகாலமாயிருந்தது. ஏனெனில் ஆசியா முழுவதும் விசுவாசிகளுக்குத் துன்பம் காத்திருந்தது. அப்போஸ்தலனாகிய யோவான் முன்னதாகவே பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்டிருந்தார். யோவானகிய நான் தேவவசனங்களினிமித்தமும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியினிமித்தமும் பத்மு என்னும் தீவிலே இருந்தேன் என்று யோவான் சொல்கிறார். அடுத்து அவருக்கு என்ன உபத்திரவம் சம்பவிக்கும் என்று யாருக்கும் தெரியாது.

ஆனாலும், கர்த்தருடைய நாள் ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் விசேஷித்த நாளாகவே இருக்கிறது. ஏனெனில் அந்த நாள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளாக இருக்கிறது. இந்த நாளில் தான் நம் ஆண்டவர் ஸ்திரீகளுக்கும், பிறகு பதினொருவருக்கும் தரிசனமானார். ஆகவே ஆண்டவர் உயிர்த்தெழுந்த வாரத்தின் முதல்நாளில் தான் கிறிஸ்தவர்கள் அப்பம் பிட்கும்படியாகவும், திராட்சரசம் பருகும்படியாகவும் அதாவது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூரும் படியாகவும் கூடிவந்தார்கள்.

அப்போஸ்தலானாகிய யோவான் பத்மு தீவிலே இருந்தபடியால் கர்த்தருடைய நாளிலே பரிசுத்தவான்களோடு கூடி தேவனை ஆராதிக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. எனவே, எபேசு மற்றும் சிமிர்னா போன்ற இடங்களில் சக பரிசுத்தவான்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க முடியாதபடி ஆழி அவரைப் பிரித்தது. ஆனாலும், யோவான் அவர்களோடு சரீரப்பிரகாரமாக இல்லாவிட்டாலும் அவர் ஆவியிலே ( நினைவிலே ) அவர்களோடிருந்தார். அப்பொழுது அவருக்குப் பின்னாலே எக்காளசத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தம் கேட்டது. நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் அனுப்பு என்று விளம்பினது.

அப்பொழுது யோவான் தனக்குப் பின்னாலே உண்டான சத்தத்தைப்

பார்க்கத் திரும்பியபோது ஏழு பொன் குத்துவிளக்குகளையும் அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே நிலையங்கி தரித்து மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டார். அந்த ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அந்தச் சபைகளின் மத்தியில் வாசம் செய்தார். அந்தச் சபைகள் மறக்கப்படவில்லை, கைவிடப்படவில்லை! இயேசு கிறிஸ்து உலகத்தின் முடிவு பரியந்தமும் தம்முடைய சீஷர்களோடு இருப்பதாக வாக்குத்தத்தம் செய்தார். அவர் வாக்குத் தத்தம் செய்தபடியே அவர்களோடு இருந்தார். அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி : **வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும். அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகலநாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்.** ஆமென்! (மத். 28 : 18 - 20).

**கர்த்தருடைய சபைகள் களிகூருவதாக!**
**அவர் நம் மத்தியில் வாசம் செய்கிறார்!**
**அவர் நம்மோடு இருக்கிறார்!**

**ஏனெனில் இரண்டுபேராவது, மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறீர்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்** (மத் 18 : 20).

---


## உலகமனைத்திற்குமான தேவனின் கொடை

- **தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை நமக்காக ஒப்புக்கொடுத்தார் (யோவான் 3 : 16,17).**
- **தேவன் எல்லா மனுசரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று சித்தங்கொண்டிருக்கிறார் (தீமோத்தேயு 2 : 3 4).**
- **தேவன் சுவிசேஷத்தை எல்லோருக்கும் கொடுத்திருக்கிறார் (ரோமர் 1 : 16).**

# வெளியேற ஆயத்தம்

## EAGER TO LEAVE

சபைக்கு செல்வது அப்போதுதான் என் முதல் அனுபவமாயிருந்தது. உண்மையாகவே நான் அங்கே விருப்பமில்லாமல் தான் சென்றேன். ஏனென்றால் என் நண்பன் தொடர்ந்து என்னை வற்புறுத்தியதின் காரணமாக, சரி, ஒரு முறை போய் வரலாம் என்று அங்கே சென்றேன். அங்கே செல்வதற்கு முன்பாக, சபைக்காரியங்கள் எனக்கானதல்ல, நான் நல்லவனாகத்தானே இருக்கிறேன், சபை எனக்கு எதற்காக வேண்டும்? என்று தான் நான் எப்போதுமே நினைத்துக்கொண்டிருந்தேன். மேலும், எல்லா சபைகளும் நமக்கு குற்ற உணர்வை ஏற்படுத்தி நம்மிடம் பணம் பறிக்கும் பாசறையாக இருக்கிறது என்பதும் என் ஓட்டத்தில் இருந்தது.



எப்படியோ ஒருவழியாக, சபைக்கு நான் சென்றபோது புன்னகை பூத்த முகங்களுடன் இருந்த விசுவாசிகளால் நான் வரவேற்கப்பட்டேன். அதனால் நான் வியந்துபோனேன். ஏனென்றால், சபைக்கு வெளியே உள்ளவர்களை அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று தான் நான் நினைத்திருந்தேன். ஆனால், அங்கே அப்படி யாரும் இல்லை. ஆராதனையில் விசுவாசிகள் பாடு வதை உட்கார்ந்து கவனித்தேன். அவர்கள் பாடிய பாடலில் ஒன்றுகூட எனக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால், எல்லாப் பாடல்களையும் நான் உள்வாங்கிக் கொண்டேன். பாடலைப் பாடியவர்களில் பலருக்கு அழகான, இனிமையான குரல்வளம் இருந்ததை என்னால் காணமுடிந்தது. அதேநேரத்தில் பாடலை ராகத்தோடு பாடாதவர்களும் அங்கே இருந்தார்கள். அப்படி அவர்கள் ராகத் தோடு பாடாவிட்டாலும், உணர்வுப்பூர்வமாக, புன்னகை பூரித்துக்கொண்டே பாடியது பாடல்கள்மீது அவர்களுக்கிருந்த ஈடுபாட்டைக் காட்டியது. அப்பாடல் வரிகளில் சில கருத்துக்கள் எனக்குப் புரியாதிருந்தது. ஏனெனில் தேவனைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாமலிருந்ததுதான்.

சபையில் என் ஆர்வத்தை வெகுவாகத் தூண்டிய ஒரு செயல் பிரசங்கம். பிரசங்கியார் இயேசு என்னும் கதாப்பாத்திரத்தைக் குறித்துப் பிரசங்கித்தார். இயேசு என்பவரைக் குறித்து நான் கொஞ்சம் அறிந்திருக்கிறேன். ஆனால், அவர் செய்த தியாகங்களைக் குறித்து நான் ஆழ்ந்து யோசித்ததில்லை. அப்பிர சங்கியார் பல வசனங்களை வேதத்திலிருந்து வாசித்தார். அவ்வசனங்களை அவர் குறிப்புகளாகப் பயன்படுத்தினார். அவர் வாசித்த வசனங்கள் என்னை ஆச்சரியப்படுத்தின. இயேசுவானவர் எப்படி வாதிக்கப்பட்டார், எப்படி துன்புறுத் தப்பட்டார் என்பதையெல்லாம் தத்ரூபமாக எடுத்துக்காட்டினார். அவர் நீண்ட நேரம் பிரசங்கித்தார். ஆனால் ஒருமுறைகூட நான் என் கடிகாரத்தைப் பார்க்க வில்லை. அவர் பாவத்தைக் குறித்தும் அதற்கான பலிகளைக் குறித்தும் என்ன பிரசங்கித்தார் என்பதை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தேன். அவர் பாடத் தின் மையக்கருத்துக்கு வரும்போது நீண்ட பிரசங்கமாக அது இருந்தபோதிலும் சிலநிமிடங்களே கடந்துபோனது போல் ஓர் உணர்வு ஏற்பட்டது. அவர் மிக அருமையாக இது செயல்படுவதற்கான வேளை என்று சொல்லி, **உங்கள் பாவங்களை உதறித்தள்ளிவிட்டு சிலுவையை எடுத்துக் கொண்டு இயேசு கிறிஸ் துவை பின்பற்றுவதற்கான நேரம் இது** என்று போதித்தார். அவர் தொடர்ந்து ஞானஸ்நானத்தைப் பற்றி போதித்து அது எப்படி இரட்சிப்பிற்கான படி என்ப தையும் விவரித்தார். இது மிகவும் எளிதானது போல் தெரிந்தது. அப்பிரசங்கியார் நிச்சயமாகவே என் கவனத்தை ஈர்த்தார். ஆகவே நான் அவர் மூலம் அதிகமான காரியங்களைக் கற்றுக்கொள்ள விரும்பினேன்.

மேலும், அப்பிரசங்கியார் நீங்கள் இன்னும் கிறிஸ்தவராகாவிட்டால் ஏதாவது விதத்தில் நாங்கள் உங்களுக்கு உதவி செய்ய முடியும் என்று சொன்னார். அவர் இந்த வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கியபோதே சபையிலிருந்து ஜனங்கள் வெளியேற தங்கள் உடைமைகளை தயார் நிலையில் வைக்கத் தொடங்கினார்கள். அப்படி அவர்கள் வெளியேற ஆயத்தமானபோது அவர்கள் வைத்திருந்த பாடல்தாளின் சத்தமும், அவர்களுடைய அசைவுகளின் சத்தமும் என் கவனத்தைச் சிதறடித்து விட்டன. ஆனாலும் அந்தப் பிரசங்கியார் தொடர்ந்து பேசிக்கொண்டுதான் இருந்தார். மேலும், அங்கே கூடியிருந்தவர்களுடைய வேண்டுகோள் என்ன என்பதை முன்பாக வந்து தெரிவிக்குமாறும் கேட்டுக் கொண்டார். அப்படித் தெரியப்படுத்தினால் அந்தக் காரியங்களுக்காக ஜெபிக்கப்படும் என்றும் அறிவித்தார். ஆனால், அங்கே கூடியிருந்தவர்களோ அவருடைய அறிவிப்புகளையெல்லாம் கண்டுகொள்ளவேயில்லை. மாறாக, அடுத்துப் பாடவிருக்கும் பாடலை அவர்கள் அறிந்திருந்தபடியால், பாடல் புத்தகத்தைப் புரட்டிக்கொண்டும் தங்கள் இருக்கைளில் அசைந்து கொண்டும் இருந்தார்கள். இன்னும் சிலர், அவர்களுக்கு ஏதோ முக்கியமான காரியம் இருப்பதுபோல் அவசர அவசரமாகப் புறப்படத் தாயாராயிருந்தார்கள்.

சபையில் கூடியிருந்தவர்களின் செயல்பாடு, பிரசங்கியார் வலியுறுத்தின இரட்சிப்பின் காரியங்கள் தங்களுக்கு அவசியமில்லை என்று எண்ணியது போல்தான் எனக்குத் தோன்றியது. மேலும், அவர் பாவத்தைக் குறித்து வலியுறுத்தின காரியங்களும் அதே விதமாகத்தான் அவர்கள் அவசியமில்லை என்று நினைத்திருப்பார்கள். ஆனால், நான் எந்தப் பாவமும் செய்யவில்லை. ஏனென்றால், அதுவரை நான் நன்றாகத்தான் இருந்தேன். ஆகவே, நான் முன்பாக மேடைக்குப் போனாலும், போகாவிட்டாலும் என் வாழ்க்கைப் பயணம் தொடர்ந்துகொண்டு தான் இருக்கும்.

நான் சபையை விட்டு வெளியேறி வீட்டுக்குச் சென்றபோது, சபையிலே நடந்த காரியங்களைக் குறித்து சிந்தித்துப் பார்த்தேன். சபையின் விசுவாசிகளே முன்பாகப் போய் தங்களுடைய வேண்டுகோளைத் தெரிவிக்காதபோது, அதை முக்கியமான ஒன்றாகக் கருதாதபோது நான் மட்டும் ஏன் அக்கறைப்பட வேண்டும் என்று நினைத்தேன். ஏனென்றால், எனக்கு தேவனைப்பற்றி பெரிய அளவில் ஒன்றும் தெரியாது. ஆனாலும் அப்பிரசங்கியின் வார்த்தைகள் அவர்களுக்கு முக்கியமாகத் தோன்றவில்லையென்றாலும், என் வாழ்க்கைக்கு அது மிகவும் நன்மையானது என்றே தீர்மானித்தேன்.

எனவே, நான் சபையை விட்டு வெளியேற ஆயத்துமானபோது நிச்சயமாகவே அவர்களின் செயல்பாடு எனக்கு முக்கியமாகத் தோன்றவில்லை. அப்பிரசங்கியாரின் வார்த்தைகள்தான் என் செவிகளில் தொனித்துக் கொண்டேயிருந்தது. ✝

# ஒத்துழைப்பா அல்லது ஒத்துழையாமையா?
## *Co-operation or Contention?*




அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க்கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது (எபே. 4:16).

தம்முடைய ஜனங்கள் எப்போதுமே ஒற்றுமையாயிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (I கொரி . 1 : 12; 12 : 1 2). நம் வாழ்க்கை பலவிதமான இன்ப, துன்பங்களை உள்ளடக்கியது என்பதை தேவன் அறிந்தவராகவே இருக்கிறார். அவ்வப்போது நம்முடைய விசுவாசம் பரீட்சிக்கப்படுகிறது என்பதை

நாமும் அறிந்தவர்களாகவே இருக்கிறோம். எபிரெய ஆசிரியர், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு தமது வாழ்வின் துயரங்கள் சம்மந்தமான சரியான புரிந்துகொள்ளுதல் இருந்தது என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல் எல்லாவிதத்திலும் நம்மைப்போல சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார் (எபி. 4:15).

யாக்கோபு ஆசிரியரும்கூட சோதனைகள் மற்றும் பாடுகளின் நிச்சயத்தை வலியுறுத்தியிருக்கிறார். என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள் (யாக். 1:2-3).

நாமும் நம் வாழ்க்கையில் பலவிதமான பிரச்சனைகளை எதிர்கொள் கிறோம். அப்படிபட்ட வேளைகளில் நாம் எப்படி மகிழ்ச்சியாயிருக்க முடியும்? வாழ்கையில் வீசும் பிரச்சனை என்னும் புயலை நாம் தனியாகத் தான் எதிர்கொள்ள வேண்டும். மேலும், நாம் சபையில் ஒருவரோடொருவர் ஒற்றுமையாக இருந்தால் அது நமக்குப் பெரிய அளவில் உதவியாக இருக்கும். ஆமோஸ் தீர்க்கனும்கூட இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ? என்று எழுதினார் (ஆமோஸ் 3 : 2). ஆகவே, நாம் நம் சகோதரர்களோடு உபதேசக் காரியங்களில் ஒன்றிணைந்து பிரயாசப்பட்டு ஒத்துழைப்பு என்னும் மனநிலையை ஆவிக்குரிய வாழ்வில் மேம்படுத்துவோம்.

ஆதித்திருச்சபை ஒத்துழைப்புக்கு மிகச்சிறந்த முன்மாதிரியை ஏற்படுத்தி யிருக்கிறது. எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டுமென்பது தேவனுடைய சித்த மாயிருக்கிறது (லூக்கா 14 : 23 ; யோவான் 3 : 15-17 ; I தீமோ 2 : 4 ; தீத்து 2 : 11; II பேதுரு 3 : 9 ). அவருடைய சித்தத்தின்படி வசனத்துக்குக் கீழ்ப்படி கிறவர்களைக் கர்த்தர் சபையிலே சேர்க்கிறார். தேவனைத் துதித்து ஜனங் களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டுவந்தார் (அப் . 2 : 47). கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் ஒத்துழைக்காமல் இருந்திருந்தால், முதல் நூற்றாண்டில் கர்த்தருடைய சபை பக்திவிருத்தி அடைந்திருக்குமா? (அப். 2:41 ; 4 : 4). ஆதித் திருச்சபை பல விதமான பாடுகளை அனுபவித்தபோதிலும், கிறிஸ்தவர்கள் தங்களுக்கு உண்டானவைகளை விற்றுத் தங்கள் ஆவிக்குரிய குடும்பமாகிய சபையின் தேவைகள் சந்திக்கும்படியாக முழுமனதோடு தொய்வின்றி உற்சாகமாகக் கொடுத்தார்கள் (அப். 2:45; 4:34-37; 11:29).

முதல்நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தங்கள் உடைமைகளை மாத்திரம் கிறிஸ்தவர்களுக்குப் பகிர்ந்துகொடுப்பதில் ஒத்துழைப்பு கொடுத்ததோடு நிற்காமல் உலகெங்கிலும் சுவிசேஷ செய்தியை எடுத்துச் செல்லும் காரியத்திலும் ஒத்துழைப்புக் கொடுத்தார்கள் (மத். 28 : 19, 20 ; ரோமர் 1 : 16). புற ஜாதிகளுக்கும் சுவிசேஷம் அவசியம் என்பதை வலியுறுத்தும் விதமாக பேதுருவுக்கு மூன்று தரிசனங்கள் கொடுக்கப்பட்டன ( அப். 10 : 9 - 48 ). ரோம ராணுவத்தில் நூற்றுக்கதிபதியாயிருந்த கொர்நேலியு நற்கிரியைகளைச் செய்து நல்ல மனிதராக வாழ்ந்து வந்தார். ஆனாலும் அவர், பாவத்தில் தன் ஆத்துமாவை இழந்தநிலையில் தான் இருந்தார். பேதுவின் நாட்களில் வாழ்ந்த யூதர்கள் புறஜாதிகளின் ஆத்தும இரட்சிப்பு குறித்து அக்கறையில்லாதவர்களாகத்தான் இருந்தார்கள். ஆனால் புறஜாதி மனிதனாகிய கொர்நேலியுவின் வாழ்க்கை நம்முடைய எண்ணங்களை, ஆசைகளை, ஒத்துழைப்பை கர்த்தருக்கும், அவருடைய சித்தத்திற்கும் ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று நமக்குப் போதிக்கிறது. மேலும் எல்லோரோடும் நாம் சமாதானமாயிருக்க ஒத்துழைப்பு மிகவும் அவசியமாயிருக்கிறது. பவுல், **உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்** (ரோமர் 12 : 18) என்று சொல்லியுள்ளார். வேதாகமத்தின் அடிப்படையில் பார்க்கும்போது அநேகருடைய செயல்பாடுகள், மனநிலைகள், நம்பிக்கைகளின் காரணமாக அவர்களோடு நாம் ஒத்துப்போக முடியாது என்றும் பார்க்கிறோம் (எபே . 5 : 11; II யோவான் 1 : 9 -11).

ஆகவே, சபையில் தேவனுடைய காரியங்களுக்கு சக கிறிஸ்தவர்களோடு நாம் ஒத்துழையாதவர்காளக அல்ல ஒத்துழைக்கிறவர் களாயிருக்க தேவன் உதவி செய்வாராக. ஒருவேளை நாம் ஒத்துழையாதவர் களாக இருந்தால் நமக்கு நாமே தீங்கிழைத்துக்கொண்டு மனிதனுக்காக, தேவனுடைய திட்டத்தைப் பின் பற்றத்தவறுகிறவர்களாக இருப்போம். எனவே நாம் தேவனுக்கு முன்பாக அப்படியிராதபடிக்கு தேவன் தாமே நமக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார். நித்திய ஜீவனை அளிப்பேன் என வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் ( I யோவான் 2 : 25 ). இன்னுமாக பவுல் ஜீவவசத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போல பிரகாசிக்கிற நீங்கள் அவருடைய வசனத்தின்படி வேதத்தின் வெளிச்சத்திலே நடக்கும்போது நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருக்குமென்று சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்தார் (சங் 119 : 105 ; ரோமர் 12 : 1, 2).

✞

❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋

# போஜனமும் - விசுவாசமும்
# Food and Faith

❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋

ஒரு பொருளும் தன்னியே தீட்டுள்ளதல்லவென்று கார்த்தராகிய இயேசுவுக்குள் அறிந்து நிச்சயத்திருக்கிறேன்; ஒரு பொருளைத் தீட்டுள்ளதென்று எண்ணிக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு அது தீட்டுள்ளதாயிருக்கும். போஜனத்தினாலே உன் சகோதரனுக்கு விசனமுண்டாக்கினால், நீ அன்பாய் நடக்கிறவனல்ல; அவனை உன் போஜனத்தினாலே கெடுக்காதே, கிறிஸ்து அவனுக்காக மரித்தாரே. உங்கள் நன்மை தூஷிக்கப்பட்ட இடங்கொடாதிருங்கள். தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. இவைகளிலே கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கிகரிக்கப்பட்டவனுமாயிருக்கிறான். ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்தி விருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம். போஜனத்தினிமித்தம் தேவனுடைய கிரியையை அழித்துப்போடாதே. எந்தப் பதார்த்தமும் சுத்தமுள்ளதுதான்; ஆனாலும் இடறலுண்டாகப் புசிக்கிறவனுக்கு அது தீமையாயிருக்கும். மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும் மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது தவறுகிறதற்காவது பலவீனப்படுத்துகிறதற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்.உனக்கு விசுவாசமிருந்தால் அது தேவனுக்கு முன்பாக உன்மட்டும் இருக்கட்டும். நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தன்னைக் குற்றவாளியாக்காதவன் பாக்கியவான். ஒருவன் சமுசயப்படுகிறவனாய்ப் புசித்தால், அவன் விசுவாசமில்லாமல் புசிக்கிறபடியினால், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுகிறான். **விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே** (ரோமர் 14:13-23). இப்படியிருக்க நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக. ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக்கொள்ளுங்கள்.

✞

# உறுதியான தகப்பனின் ஆறு குணாதிசயங்கள்

## Six Characteristics Of A Strong Father

*Keith Parker*

உலகெங்கும் இன்று ஒரு பெரிய எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக அது கிறிஸ்தவ ஆண்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. பல ஆண்கள், நான் சிறந்த கணவனாக அல்லது சிறந்த தகப்பனாக அல்லது ஒரு நல்ல ஆவிக்குரிய குடும்பத் தலைவனாக விரும்புகிறேன் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட உறுதியான தகப்பனின் ஆறு குணாதிசயங்களைப் பற்றி உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

**1. உறுதியான தகப்பன் தன் குடும்பத்திற்கு தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறார்:**

அவர் வேலை அவருடைய முதன்மையானதல்ல. அவருடைய பொழுது போக்கு அம்சங்கள் அவர் வாழ்க்கையில் முதலிடத்தைப் பிடிக்கக்கூடாது. மேலும், விளையாட்டு போன்ற காரியங்களுக்கும் அதிக முக்கியத்துவத்தைக் கொடுக்கக்கூடாது. மாறாக, தேவனுக்கு அடுத்தபடியாக குடும்பம் தான் அவருக்கு முதன்மையாக இருக்கவேண்டும். அவர் தன் வாழ்க்கையில் மிக முக்கியமானது பொருட்கள் அல்ல.... உறவுகள் தான் உன்னதம் என்பதை உணரவேண்டும்.

**2. உறுதியான தகப்பன் தன் குடும்பத்தோடு நேரத்தைச் செலவழிக்கிறார்:**

தகப்பன் தன் குடும்பத்தோடு செலவழிக்கும் நேரம் நாம் உயிர் வாழத் தேவையான மூச்சுக்காற்று போன்றதாகும், அது மனைவியோடு மனம்விட்டுப் பேசுவதாக இருக்கலாம், அல்லது தன் குழந்தைகளோடு மகிழ்வாக இருக்கும் பொழுதாகவும் இருக்கலாம். மொத்தத்தில் தகப்பன் அவர்களோடு இருப்பதே அவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியான தருணமாக இருக்கும் என்பதை தகப்பன் உணரவேண்டும்.

**3. உறுதியான தகப்பன் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கிறார்:**

கிறிஸ்தவ குடும்பங்களை சாத்தான் இன்று பலவிதங்களில் தாக்குகிறான். அவைகள் வியாதியாக இருக்கலாம், வேலை இழப்பாக இருக்கலாம்,

பணிமாற்றமாக இருக்கலாம், ஏன் அது மரணமாகக்கூட இருக்கலாம். இப்படி பிரச்சனைகள் சாத்தான் மூலமாக பல்வேறு கோணங்களில் உருவாகலாம். இப்படிப்பட்ட பிரச்சனைகளின் மத்தியிலும் கூட உறுதியான தகப்பன், பரலோக தகப்பனின் ஆலோசனையை நாடுகிறவராக, அவரது பெலனை உணருகிறவராக இருக்கிறார் (மத். 7 : 7-11).

**4. உறுதியான தகப்பன் குடும்பத்தில் ஆவிக்குரிய தலைவராக இருக்கிறார்:**

உறுதியான தகப்பன், பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக என்று எபே . 6 : 4-ல் பவுல் சொல்லியிருப்பதை அறிந்தவராயிருக்கிறார். மேலும், உபா 6 : 5-7 வசனங்களில் உள்ள மோசேயின் போதனைகளையும் பொருத்திப் பார்க்கிறார். நீ உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் அன்புகூருவாயாக. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது.

**5. உறுதியான தகப்பன் நன்றி நிறைந்தவராகக் காணப்படுகிறார்:**

உறுதியான தகப்பன் தன் பெற்ற ஆசிர்வாதங்களை எண்ணிப்பார்த்து தன்னுடைய நன்றியுள்ள மனநிலையை தேவனுக்குத் தெரியப்படுத்தி தன் ஆவிக்குரிய வாழ்வை மேம்படுத்திக் கொள்கிறார். மேலும், அவர் தன் குடும்பத்தில் காணப்படுகின்ற அன்பு சந்தோஷம், சமாதானம் போன்றவைகளுக்காகத் தேவனுக்கு முன்பாக என்றென்றும் நன்றியறிதல் உள்ளவராயிருக்கிறார்.

**6. உறுதியான தகப்பன் அனைவரிடமும் நட்புறவை ஏற்படுத்திக் கொள்கிறார்:**

உறுதியான தகப்பன், நேர்மறையான கருத்துக்களை மட்டும் பகிர்ந்து கொண்டு, எதிர்மறையான கருத்துக்களைப் புறம்பே தள்ளுகிறார். அவர் இடிப்பதைவிட, கட்டுவதற்கே அதிக நேரத்தைச் செலவழிக்க விரும்புகிறார். ஆகவே, அவர் கேட்கிறதற்குத்தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும் இருக்கிறார் (யாக் 1 : 19).


தேவதாசனாகிய யோசுவா ஓர் ஆவிக்குரிய தகப்பனாக இப்படியாகச் சொல்லுகிறார், நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்று (யோசுவா 24 : 15). அதுபோல, தகப்பன்மார்களே! உங்கள் வீட்டிலும் காரியங்கள் இப்படியிருக்கிறதா? என்று சிந்தித்து, தேவனின் திருவுளச் சித்தத்துக்கு உங்களை ஒப்புக்கொடுத்து உறுதியான தகப்பனாக உங்களை முன்னிறுத்தி உங்கள் குடும்பத்தை தேவனுக்கு முன்பாக ஒப்புரவாக்குங்கள். ✞

# பெற்றோர்களின் கடமை என்ன?

## *What Is the Duty of Parents?*

*Travis L. Quertermous*

**பெ**ற்றோர்களில் அநேகம்பேர் தங்கள் பிள்ளைகள் வாழ்க்கையில் வெற்றிபெற்றவர்களாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். இன்னும் சில பெற்றோர்கள் ஒருபடி மேலே சென்று தங்கள் பிள்ளைகள் தாங்கள் பெற்றிருந்தவைகளைவிட அதிகமாகப் பெற்றிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். வறுமையில் வளர்ந்த பெற்றோர்கள் தங்களைவிட தங்கள் பிள்ளைகள் மேம்பட்ட வாழ்க்கையை வாழவேண்டுமென்றும் விரும்புகிறார்கள். அதற்காகப் பெற்றோர்கள் அதிக நேரம் உழைத்து பல தியாகங்களைச் செய்து பிள்ளைகளுக்கு சிறப்பான கல்வியையும், ஒரு நல்ல வாழ்க்கையையும் கொடுக்கிறார்கள்.



பெற்றோர்கள் மேற்சொல்லப்பட்ட காரியங்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமா? பிள்ளைகள் பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்றாலோ; அல்லது பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகத்தில் முதலிடத்தில் வந்தாலோ அல்லது பிரபல விளையாட்டு வீரராகவோ இருந்தால் தேவனுடைய பார்வையில் நாம் நம்முடைய கடமையைச் செய்திருக்கிறோமா? தேவதாசனாகிய மோசேயைக் கொண்டு இஸ்ரவேல் பெற்றோருக்கும், இன்று பெற்றோராகிய நமக்கும் தேவன் சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள். **இஸ்ரவேலே கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.**

**நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக் கூடாது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள் கிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி, அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக் குறியாய் இருக்கக்கடவது. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும் உன் வாசல்களிலும் எழுதுவாயாக** (உபா 6 : 4-9).

பெற்றோர்கள் எல்லாவற்றையும்விட, முதலாவது தேவனிடத்தில் அன்பு கூர்ந்து, தெளிவாக அவருடைய வார்த்தைகளை அறிந்து, வேதாகமத்தைத் தங்கள் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதிக்கவேண்டும் என்பதுதான் தேவனுடைய பார்வையில் முதன்மையானதாக அந்நாட்களில் காணப்பட்டது. இதன் மூலம் முழுக்குடும்பமும் பரலோகம் செல்லமுடியும். நாம் பரலோகத்தைத் தவறவிட்டால், அதைவிட முக்கியமானது வேறு ஏதாவது இருக்கிறதா? ஆகவே தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து **மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப் படுத்திக்கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?** என்று கேட்டார் (மத் 16 : 26). ஆகவே, பிள்ளைகளை நடக்க வேண்டிய வழியிலே நடத்தி, அவர்களை கர்த்தரிடமாகத் திருப்புவோம். ✝

---

## யுத்தத்திற்கான பொருத்தமான ஆயுதம்

குதிரை வண்டியை ஓட்டப் பயன்படுத்தும் சாட்டையைக் கொண்டு யாரும் கரடியை வேட்டையாடத் துணியமாட்டார்கள். அதேபோல், குழந்தைகள் விளையாடும் விளையாட்டுப் பொருட்களைக் கொண்டு யாரும் கொள்ளைக்காரர்களைப் பிடிக்க முயற்சிக்க மாட்டார்கள். ஆகவே, நாம் பிசாசுக்கு எதிரான யுத்தத்தில் பொருத்தமான ஆயுதமில்லாமல் ஒருமுறை கூட வெற்றியை எதிர்பார்க்க முடியாது.

# கிறிஸ்துவின் வாழ்வில் நான் யார்?

## Who am I?

*Rebecca Rushmore*

**என்னை உங்களால் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறதா? கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கவனமாக வாசித்து யோசியுங்கள். நீங்கள் கண்டு பிடிக்கும் ஒவ்வொரு நபருக்கும் 10 மதிப்பெண்களை உங்களுக்கு நீங்களே கொடுத்துக்கொள்ளுங்கள். என் அடையாளத்தை நீங்கள் உறுதி செய்துவிட்டால், சரிபார்க்க தேவனுடைய வார்த்தையிலிருந்து வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.**

1. நான் இயேசுவுக்கு சொந்தக்காரன். அவரைவிட ஆறுமாதங்கள் மூத்தவன். (லூக்கா 1 : 36).
2. பெத்தானியா ஊரில் வசித்த, இவர்களை இயேசு மிகவும் நேசித்தார் (யோவான் 11 : 1 – 5).
3. கிறிஸ்துவை நான் காணுமுன்னே மரிக்கமாட்டேன், அவரை என் கைகளில் ஏந்தினேன் (லூக்கா 2 : 22 – 35).
4. கிறிஸ்து எரிகோவில் பிரவேசித்தபோது அவரைக் காணும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினேன் (லூக்கா 19 : 1 – 6).
5. இயேசு என்னிடத்திலிருந்து ஏழு அசுத்த ஆவிகளைத் துரத்தினார் (லூக்கா 8 : 2).
6. இயேசு என்னுடைய பன்னிரெண்டு வயது மகளை உயிரோடு எழுப்பினார் (லூக்கா 8 : 41 – 56).
7. நாங்கள் மறு ரூபமலையில் கிறிஸ்துவோடு தோன்றினோம் (லூக்கா 9 : 28 – 36).
8. நான் இயேசுவுக்கு நன்றி செலுத்த திரும்பிவந்த சமாரியன் (லூக்கா 17 : 11 – 19).
9. பேதுரு என் காதை வெட்டினபோது இயேசு அதை சுகப்படுத்தினார் (லூக்கா 22 : 50,51; யோவான் 18 : 10).
10. நான் இவரிடத்தில் எந்தக் குற்றத்தையும் காணவில்லை. ஆகவே, நான் இவரை விடுதலையாக்குவேன் (லூக்கா 23 : 13 – 16).

# கிறிஸ்துவில் வாழ்வில் நான் எங்கே இருக்கிறேன்?
# Where am I?

*Rebecca Rushmore*

**என்னை உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறதா? கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கவனமாக வாசித்து யோசியுங்கள். நீங்கள் கண்டு பிடிக்கும் ஒவ்வொரு இடத்திற்கும் 10 மதிப்பெண்களை உங்களுக்கு நீங்களே கொடுத்துக்கொள்ளுங்கள். என் அடையாளத்தை நீங்கள் உறுதி செய்து விட்டால், சரிபார்க்க தேவனுடைய வார்த்தையிலிருந்து வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.**

1. தேவதூதன் மரியாளுக்கு எங்கே தரிசனமானான் (லூக்கா 1 : 26 , 27).
2. இயேசு எங்கே பிறந்தார்? (மத் . 2 : 1; லூக்கா . 2 : 4 – 6).
3. இயேசுவை கொலைசெய்ய முயற்சித்தப்போது அவருடைய பெற்றோர் எந்த தேசத்திற்குப் போனார்கள்? (மத் 2 : 13 , 14).
4. இயேசு கிறிஸ்து எந்த ஊரில் வளர்ந்தார்? (மத் 2 : 23).
5. இயேசு கிறிஸ்து எங்கே ஞானஸ்நானம் பெற்றார்? (மத் 3 : 13).
6. இயேசுவானவர் வனாந்தரத்தில் சோதிக்கப்பட்ட பிறகு எங்கே வாசம் பண்ணினார்? (மத் 4 : 12 , 13).
7. இயேசு கிறிஸ்து முதல் அற்புதத்தை எங்கே செய்தார்? (யோவான் 2 : 1 – 11).
8. இயேசு கிறிஸ்து விதவையின் மகனை எந்த ஊரில் எழுப்பினார்? (லூக். 7 : 11 – 15).
9. இயேசு யூதர்களின் மத்தியிலிருந்து மறைந்தபோது எங்கே இருந்தார்? (லூக். 24 : 13 – 31).
10. இயேசு கிறிஸ்து எங்கிருந்து பரமேறினார்? (அப் 1 : 1 – 12).

# இதைப்பார்த்து ஏன் ஆச்சரியப்படுகிறீர்கள் ?

# Why Do You Marvel at This?

*Jim Poland*

**வே**தாகமத்தின் அற்புதங்களைப் பார்த்து ஜனங்கள் ஆச்சரியப்படுகிறார்கள். அற்புதங்கள் வேதாகமச் செய்தியின் ஆதாரமாகவும், அதே வேளையில் வேதாகமச் செய்தியைச் சந்தேகிக்கிறவர்களுக்கு இடறலாகவும் இருக்கிறது. இன்றைய நாட்களில் அப்போஸ்தல வல்லமையை விரும்புகிறவர்களுக்கு, அற்புத அடையாளங்கள் என்பது அவர்களைத் தவறான பாதையில் வழிநடத்துகிற ஒன்றாகத்தான் இருக்கிறது.

அற்புத அடையாளங்களின் மீதுள்ள அவிசுவாசத்தின் காரணமாக சிலர் இடறலடைகிறார்கள். காரணம், அவர்கள் கற்பனைக் கண்ணோட்டத்தில் அவைகளைப் புராணக் கதைகளாக நினைக்கிறார்கள். மேலும், அப்படிப்பட்டவர்கள் வேதாகமத்தை புறஜாதி தேவர்களைப் பற்றிய கற்பனைக் காவியங்களாகக் கருதுகிறார்கள். ஆகவே, அவர்களைப் பொறுத்தவரை வேதாகமம் தேவனிடத்திலிருந்து வந்ததல்ல. மாறாக, மனிதர்களால் எழுதப்பட்ட கற்பனைகளே என்று நினைக்கிறார்கள். அவர்கள் வேதவாக்கியங்களைப் பொய்யாகவும், கட்டுக் கதைகளாகவும் காண்கிறபடியால், அவைகள் சமுதாயத்தையும், மக்கள் வாழ்வையும் சீரழிக்கும் என்று எண்ணுகிறார்கள்.

வேதாகமத்தின் அற்புத அடையாளங்களைப் பார்த்து, மேலும் சிலர், இன்றைய நாட்களில் தங்களுக்கும் அற்புத அடையாளங்களைச் செய்யும் வல்லமையுண்டு என்று வாதிடுகிறார்கள். ஆனால், அற்புத அடையாளங்களைச் செய்யும் வல்லமை கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களுக்கும், அவர்கள் எவர்கள் மீது கைகளை வைத்தார்களோ அவர்களுக்கும் மாத்திரமே கொடுக்கப்பட்டது ( அப் 8 : 14-17 ). முதல் நூற்றாண்டில் அற்புத அடையாளங்கள் செய்யப்பட்டதற்கான பிரதான நோக்கம் வேதவசனங்கள் உறுதி செய்யப்படுவதற்காகத்தான் ( மாற்கு 6 : 20 ). வேதவாக்கியங்கள் உறுதியாய் அறிவித்தபடியே அற்புத அடையாளங்கள் இப்போது ஒழிந்து ஒன்றுமில்லாமல் போய்விட்டன (I கொரி 13 :8-10).

வேதாகமத்தின் அற்புதங்கள் மனிதத் திறனிலிருந்து பலநூறு மடங்கு வித்தியாசமானவைகள். அதுமாத்திரமல்ல, இன்றைய நாட்களில் அற்புத அடையாளங்கள் என்று சொல்லப்படுபவைகளிலிருந்தும் வித்தியாசமானது. அவைகள் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்றோரின் தேவனால் உண்டானவைகள். மேலும், தேவன் யாரைத் தெரிந்துகொண்டாரே, எந்த வழியை ஆயத்தப்படுத்தினாரோ அதின்படியாக இரட்சிப்பை மனித இனத்துக்கு நன்மையாக நல்கினார். நம்மை கிறிஸ்துவின் மூலம் தம்மிடத்தில் கொண்டுவரும்படியாகத் தான் தேவன் தம்முடைய தாசர்களை ஆதியிலிருந்தே பயன்படுத்தினார்.

பரிசுத்தரை நீதிமானை ஏற்க மறுத்த மனித இனம் ஒரு கொலைகாரனை ஏற்றுக்கொண்டது. ஆகவேதான் அவருடைய சத்துருக்கள் கிறிஸ்துவை கொலை செய்யும்படிக்கு பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள். ஆனால் பிலாத்துவோ கிறிஸ்துவினிடத்தில் எந்தக் குற்றத்தையும் காணவில்லை. அதுபோலவே, இன்றும் பலர் தங்கள் விருப்பப்படி காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதற்காக கிறிஸ்துவையும் அவருடைய போதனையையும் ஏற்க மறுக்கிறார்கள். சிலர், துன்மார்க்கமான காரியங்களைச் செய்வதற்காக கிறிஸ்துவின் பரிசுத்த வார்த்தைகளை ஏற்க மறுக்கிறார்கள். இன்னும் பலர், விவாகத்திலும், விவாகத்திற்குப் பிறகு ஏற்படும் மனமுறிவு போன்ற காரியங்களிலும் தங்கள் விருப்பப்படி செய்வதற்காக கிறிஸ்துவை ஏற்க மறுக்கிறார்கள். மேலும் பலர், தத்துவஞானங்களுக்காகவும், பெருமையாகப் பேசப்படும் விஞ்ஞானத்திற்காகவும் இயேசுவின் உபதேசத்தை ஏற்க மறுக்கிறார்கள்.

தீர்க்கதரிசிகள் தூல்லியமாகத் தீர்க்கத்தரிசனம் உரைத்தவைகள் கிறிஸ்துவில் அச்சரம் பிசகாமல் அப்படியே நிறைவேறியது. இவைகளெல்லாம் வரலாற்றுப்பூர்வமாக வெளிப்படுத்தப்பட்டு உறுதிசெய்யப்பட்டிருக்கிறபடியால் இதைப்பார்த்து ஏன் ஆச்சரியப்படுகிறீர்கள்?

ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும் முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும், உங்கள் பாவங்களில் நிவிர்த்தி செய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள் ( அப் 3 : 19, 20 ). ஆகவே, நாம் மத் 3 : 8 ன் படியாக மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுக்க வேண்டும். அதுதான் பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது என்பதை உணர்ந்து, உணர்வடைந்து அதின்படி செய்யும் போது உலகம் நம்மைப் பார்த்து ஆச்சரியப்படும். நாமும் மேலான வாழ்வுக்குத் தகுதியுள்ளவர்களாகவும், கிறிஸ்து வரும்போது அவரோடு சென்று ஆளுகை செய்கிறவர்களாகவும் இருப்போம். ✝

# வேத வசனங்களைப் பற்றிய துரிதமான வர்ணனை

ஒரு பொருளும் தன்னிலே தீட்டுள்ளதல்லவென்று கர்த்தராகிய இயேசுவுக்குள் அறிந்து நிச்சயித்திருக்கிறேன்; ஒரு பொருளைத் தீட்டுள்ளதென்று எண்ணிக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு அது தீட்டுள்ளதாயிருக்கும். போஜனத்தினாலே உன் சகோதரனுக்கு விசனமுண்டாக்கினால், நீ அன்பாய் நடக்கிறவனல்ல; அவனை உன் போஜனத்தினாலே கெடுக்காதே, கிறிஸ்து அவனுக்காக மரித்தாரே. உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள். தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. இவைகளிலே கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கிகரிக்கப்பட்டவனுமாயிருக்கிறான். ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம். போஜனத்தினிமித்தம் தேவனுடைய கிரியையை அழித்துப்போடாதே, எந்தப் பதார்த்தமும் சுத்தமுள்ளதுதான். ஆனாலும் இடறலுண்டாகப் புசிக்கிறவனுக்கு அது தீமையாயிருக்கும். மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும். உனக்கு விசுவாசமிருந்தால் அது தேவனுக்கு முன்பாக உன்மட்டும் இருக்கட்டும். நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தன்னைக் குற்றவாளியாக்காதவன் பாக்கியவான். ஒருவன் சமுசயப்படுகிறவனாய்ப் புசித்தால், அவன் விசுவாசமில்லாமல் புசிக்கிறபடியினால், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுகிறான். விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே (ரோமர் 14 : 14 - 23).

நாம் கிறிஸ்துவின் உபதேசமாகிய (II யோவான் 9-11) சுவிசேஷத்தில் (கலா 1: 6-9) நிலைத்திராவிட்டால் பாவம் செய்கிறோம் என்று புதிய ஏற்பாடு போதிக் கிறதா? ஆம். பல வசனப்பகுதிகள் அப்படித்தான் போதிக்கிறது. விசுவாசமில்லாமல்

தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாது காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் ( எபி 11 : 6 ). சகோதரரே, எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாமென்று நீங்கள் எங்களாலே கற்றுக் கொள்ளவும், ஒருவனும் ஒருவனிமித்தம், மற்றொருவனுக்கு விரோதமாய் இறுமாப்படையாதிருக்கவும், நான் உங்கள் நிமித்தம் என்னையும், அப்பொல் லோவையும் திருஷ்டாந்தமாக வைத்து இவைகளை எழுதினேன் (I கொரி 4 : 6 ). பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது (யூதா 3).

இருந்தபோதிலும் ரோமர் 14 : 23 ல், விசுவாசம் என்பது கிறிஸ்துவின் உபதேசமாகிய சுவிசேஷத்தைக் குறிக்காது, அதேநேரத்தில் கிறிஸ்தவ விசுவாச முறைமையையும் குறிக்காது ( ரோமர் 14 : 23 ). ஒருவன் சமுசயப்படுகிற வனாய்ப் புசித்தால், அவன் விசுவாசமில்லாமல் புசிக்கிறபடியினால், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுகிறான். விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே என்று சொல்லுகிறது. இவ்வசனம் ஒரு தனிப்பட்ட நபருடைய மனசாட்சி சம்பந்தமாகப் பேசுவதுபோல் தெரிகிறது. எனவே ஒருவர் தன் மனச்சாட்சியை மீறக்கூடாது, அப்படி மீறினால் அந்நபர் பாவம் செய்கிறார் என்று இவ்வசனம் போதிக்கிறது. இதை வைத்துப் பார்க்கும்போது ரோமர் 14 : 23 - ல் இடம்பெற்றுள்ள விசுவாசம் என்பது ஒருவருடைய மனச்சாட்சியைக் குறிக்கிறது. மாறாக, நாம் குறிப்பிடும் கிறிஸ்துவின் உபதேசமாகிய சுவிசேஷமல்ல.

ஒரு குறிப்பிட்ட வசனப்பகுதியில் காணப்படும் சத்தியத்தை எடுத்து சரியாக வெளிப்படுத்த வேண்டியது எப்போதுமே அவசியமாயிருக்கிறது. அதேநேரத்தில் அநேகர் வேதாகம சத்தியத்தைப் போதிக்கிறோமென்று சொல்லிக்கொண்டு தேவனுடைய வார்த்தையைத் தவறாக திரித்துப் பேசி போதனை செய்கிறார்கள். இதை நாம் அடையாளங் கண்டுகொள்ள வேண்டியது அவசியமாகும். அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் ( I யோவான் 1:7).

# போவாசின் குணாதிசயங்கள்

## *Characteristics of Boaz*

*Stan mitchell*

**போ**வாஸ் ஒரு நல்ல மனிதர்! அவருடைய குணாதிசயங்கள் என்ன? என்பதைப் பார்த்து, அந்த நற்குணங்களை நாமும் நமது வாழ்வில் பின்பற்றுவோம்.

### 1. அவர் மற்றவர்களை ஆசீர்வாதத்தோடு வாழ்த்தினார்

போவாஸ் தன்னுடைய பணியாட்களையும் அப்படியே வாழ்த்தினார் ரூத் 2 : 4 அப்பொழுது போவாஸ் பெத்லெகேமிலிருந்து வந்து, அறுக்கிறவர்களைப் பார்த்து: கர்த்தர் உங்களோடே இருப்பாராக என்றான்; அவர் ரூத்தையும் இப்படித்தான் வாழ்த்தினார் . அப்பொழுது போவாஸ் ரூத்தைப் பார்த்து: மகளே, கேள்; பொறுக்கிக்கொள்ள வேறே வயலில் போகாமலும் இவ்விடத்தை விட்டுப் போகாமலும், இங்கே உன் ஊழியக்காரப் பெண்களோடு கூடவே இரு. உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான் (ரூத் 2 : 8, 12).

### 2. அவர் இளம் விதவையிடம் தயவுகாட்டி அவளுக்குப் பாதுகாப்பு அளித்தார்

அவர்கள் அறுப்பறுக்கும் வயலை நீ பார்த்து, அவர்கள் பிறகே போ; ஒருவரும் உன்னைத் தொடாதபடிக்கு, வேலைக்காரருக்குக் கட்டளையிட்டிருக்கிறேன்; உனக்குத் தாகம் எடுத்தால், தண்ணீர்க் குடங்களண்டைக்குப் போய், வேளைக்காரர் மொண்டுகொண்டு வருகிறதிலே குடிக்கலாம் என்றான். பின்னும் போவாஸ் சாப்பாட்டு வேளையில் அவளைப் பார்த்து; நீ இங்கே வந்து, இந்த அப்பத்திலே புசித்து, காடியிலே உன் துணிக்கையைத் தோய்த்துக்கொள் என்றான். அப்படியே அவள் அறுப்பறுக்கிறவர்கள் அருகே உட்கார்ந்தாள், அவளுக்கு வறுத்த கோதுமையைக் கொடுத்தான்; அவள் சாப்பிட்டுத் திருப்தியடைந்து, மீந்ததை வைத்துக்கொண்டாள். பின்னும் மோவாபிய ஸ்திரியான ரூத்: அவர் என்னை நோக்கி என் அறுப்பெல்லாம் அறுத்துத்

தீருமட்டும் நீ என் வேலைக் காரிகளோடே கூடவே இரு என்று சொன்னார் என்றாள். அவள் அவனை நோக்கி நீ போர்த்துக்கொண்டிருக்கிற போர்வையை விரித்துப்பிடி என்றான் அவள் அதைப் பிடித்தபோது அவன் அதிலே ஆறுபடி வாற்கோதுமையை அளந்துபோட்டு அவள்மேல் தூக்கிவிட்டு பட்டணத்திற்குப் புறப்பட்டுவந்தான் (ரூத் 2:9, 14, 21; 3:15).

### 3. அவர் ரூத் தன் மாமியாரிடத்தில் காட்டிய அன்பை சுட்டிக் காட்டினார்

அதற்குப் போவாஸ் பிரதியுத்தரமாக: உன் புருஷன் மரணமடைந்தபின்பு, நீ உன் மாமியாருக்காகச் செய்ததும், நீ உன் தகப்பனையும் உன் தாயையும், உன் ஜந்மதேசத்தையும் விட்டு, முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விபரமாய்த் தெரிவிக்கப்பட்டது.

### 4. அவர் உபசரிப்பில் சிறந்து விளங்கினார்

பின்னும் போவாஸ் சாப்பாட்டு வேளையில் அவளைப் பார்த்து: நீ இங்கே வந்து, இந்த அப்பத்திலே புசித்து, காடியிலே உன் துணிக்கையைத் தோய்த்துக்கொள் என்றான். அப்படியே அவள் அறுப்பறுக்கிறவர்கள் அருகே உட்கார்ந்தாள்; அவளுக்கு வறுத்த கோதுமையைக் கொடுத்தான். அவள் சாப்பிட்டு, திருப்தியடைந்து, மீந்ததை வைத்துக்கொண்டாள். அவள் கதிர் பொறுக்கிக்கொள்ள எழுந்தபோது போவாஸ் தன் வேலைக்காரரை நோக்கி: அவள் அரிக்கட்டுகள் நடுவே பொறுக்கிக்கொள்ளட்டும். அவளை ஈனம்பண்ணவேண்டாம். அவள் பொறுக்கிக்கொள்ளும் படிக்கு அவளுக்காக அரிகளிலே சிலதைக் சிந்தவிடுங்கள், அவளை அதட்டாதிருங்கள் என்று கட்டளையிட்டான் (ரூத் 2:14 – 16). ✞

---

**அன்பிற்கான ஒரு விளக்கம்**

- ஒருவன் காயப்படுத்தும்போது அமைதியாக இருக்கும்
- சக மனிதர்கள் அவமதிக்கும்போது பொறுமையாக இருக்கும்
- தன்னைப் பற்றித் தவறானவைகள் வரும்போது தேவனிடம் மன்றாடும்
- பிறருடைய அபிப்ராயங்களை அலட்சியப்படுத்தாமலிருக்கும்
- தன்னுடைய சேவைக்கான தேவை வரும்போது அந்த இடத்தில் இருக்கும்
- பிறர் துயரைத் துடைப்பதில் தைரியமுள்ளதாக இருக்கும்.

# நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும்

# *We Must Preach The Gospel*

*Robert H. Martin*

## முன்னுரை

A. உலகமெங்கிலும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டுமென்று கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார் (மத் 28 : 19).

B. இதுதான் இன்றைய உலகிற்கு அவசரத் தேவையாயிருக்கிறது.

C. இருந்தபோதிலும் இலட்சக்கணக்கானோர் இதுவரை சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டதேயில்லை. பலர் நாள்தோறும் பாவத்தில் மாண்டு கொண்டிருக்கிறார்கள்.

D. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது நம் பொறுப்பாயிருக்கிறது.

## I. ஆத்துமாவின் மதிப்பு

- ஆதியாகமம் 1 : 26 (நமது சாயலாக மனுஷனை உண்டாக்குவோம்)
- மத்தேயு 10 : 28 (ஆத்துமாவை அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்).
- மத்தேயு 16 : 26 (தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்)
- I பேதுரு 1 : 18 , 19 (கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்கள்.

## II. சுவிசேஷத்தின் வல்லமை

- ரோமர் 1 : 16 (இரட்சிப்பு உண்டாவதற்கு தேவபெலன்).
- I பேதுரு 1 : 23, 25 ( தேவவசனமாகிய அழிவில்லாத வித்து சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது).
- II தெசலோனிக்கேயர் 1 : 7 - 9 ( கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம்).

❖ கலாத்தியர் 1 : 6 – 9 (வேறொரு சுவிசேஷம் இல்லை).

III. **நியாயத்தீர்ப்பின் நிச்சயம்**

❖ எபிரெயர் 9 : 27 (நியாயத்தீர்ப்படைவது நியமிக்கப்பட்டிருக்கிறபடியே)

❖ அப்போஸ்தலர் 17 : 30, 31 (பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்).

❖ யோவான் 5 : 28, 29 (ஜீவனை, ஆக்கினையை அடையும்படி ).

❖ II கொரிந்தியர் 5 : 10 (நியாயசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்)

**முடிவுரை**

A. சுவிசேஷப் பணியை நாம் நிறைவேற்ற வேண்டுமென்பது தேவனுடைய எதிர்பார்ப்பாயிருக்கிறது.

B. இழந்து போனவர்களுக்கு சுவிசேஷத்தைப் போதிக்க உங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்யுங்கள்.

**சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித் தார்கள் அப் 8 : 4.** ✝

---

## மனிதனை இரட்சிப்பதற்கான தேவனுடைய திட்டம்

- தேவனுடைய கிருபை - எபே. 2 : 8
- கிறிஸ்துவின் இரத்தம் - ரோமர் 5 : 9
- பரிசுத்த ஆவியானவரின் வார்த்தை - II தீமோ. 3 : 16, 17
- பாவியின் விசுவாசம் - அப். 16 : 31
- பாவியின் அறிக்கை - ரோமர் 10 : 10
- பாவியின் ஞானஸ்நானம் - I பேதுரு 3 : 21
- கிறிஸ்தவனின் கிரியை - யாக். 2 : 24
- கிறிஸ்தவனின் நம்பிக்கை - ரோமர் 8 : 24
- கிறிஸ்தவனின் நிலைத்து நிற்கும் தன்மை - மத். 24 : 13

# நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்?

## *What God Wants Me To Do?*

Clytonpepper

சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாத ஒருவர் நித்திய அழிவில் இழந்து போகிற படியால் சுவசேஷம் என்றால் என்ன? அதற்கு எப்படி கீழ்ப்படிவது என்கின்ற கேள்வி எழும்புகிறது.

**சுவிசேஷம் என்றால் என்ன?**

அப்போஸ்தலனாகிய பவுல் இதற்கான விடையைக் கொடுக்கிறார். அன்றியும், சகோதரரே நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக் கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தப் பிரகாரமாய் நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால்; அதினாலே நீங்கள் இரட்சிக்கப் படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து (1கொரி. 15:1-4), ஏசாயா 53 ஆம் அதிகாரத்தையும் பார்க்கவும்.

நாம் பாவம் செய்ததினால் நாம் அனுபவிக்க வேண்டிய தண்டனையை கிறிஸ்து அவராகவே முன்வந்து அந்தத் தண்டனையை ஏற்றுக்கொண்டார். பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் (ரோமர் 6:23).

**சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவது அவ்வளவு முக்கியமானதா?**

ஒருவர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியவேண்டும் என்ற தீர்மானத்தைத் தள்ளிப்போடக்கூடாது என்பதற்கான இரண்டு காரணங்களை நாம் இப்போது காணலாம்:

1. **வாழ்க்கையின் நிச்சயமற்றத் தன்மை** : நாம் வாழும் வாழ்க்கை நிரந்தரமல்ல என்று அனுதினமும் நினைவுபடுத்தப்படுகிறோம். எதிர்பாராத நேரங்களில் பெரும்பாலும் வியாதி, விபத்து போன்றவைகள் மரணத்தைக் கொண்டு வருகின்றன. எபிரெய ஆசிரியர் இப்படியாகச் சொல்கிறார்.

அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே (எபிரெயர் 9 : 27) என்று.

2. எதிர்பாராத விதத்தில் கிறிஸ்துவின் வருகை : கிறிஸ்து எதிர்பாராத நேரத்தில் வருவார் என்று வேதாகமம் போதிக்கிறது. அவருடைய வருகை இரவிலே திருடன் வருகிறவிதமாய் இருக்கும் (1 தெச. 5 : 2). இது எப்போது சம்பவிக்கும் என்று யாருக்கும் தெரியாது.

**யார் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்?**


1. மறுபடியும் பிறக்க விரும்புகிற யாவரும் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும் (யோ 3 : 3 – 5). சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாததினால் இழந்துபோன யாவரும் இரட்சிக்கப்பட இப்படிச் செய்ய வேண்டும். ஒருவர் கிறிஸ்துவை மன தளவில் தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வது போதுமானதல்ல. அது சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியவில்லை என்ற குறையை வைக்கிறது.

2. தெளிப்பு ஞானஸ்நானம் பெற்றவர்கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். உண்மையான ஞானஸ்நானமானது தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதலாகும் ( ரோமர் 3 : 7 ; கொலோ 2 : 12 ; யோ. 3 : 23 ). போதிக்கப்படத்தக்கவர்கள்; சுவிசேஷத்தைப் புரிந்து கொள்ளக்கூடியவர்கள் மாத்திரமே அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். வேத வசனங்களின் அடிப்படையில் தெளிப்பு ஞானஸ்நானம் பெற்ற குழந்தைகள் ஞானஸ்நானம் பெறவில்லை.

3. கிறிஸ்துவை தங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொள்ளவும், பாவி களுடைய ஜெபத்தை செய்யும்படியாக சொல்லப்பட்டவர்கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்: இந்த செயல் (லூக்கா 18 : 9 - 14) வசனங்களில் நாம் பார்க்கும் ஆயக்காரன், பரிசேயன் சம்பவத்தை அடிப்படையாக வைத்து தவறான முறையில் போதிக்கப்படுவதாகும். இந்த சம்பவமானது நாம் சுயநீதியுடையவர்களாய் இருக்கக்கூடாது. மாறாக, தாழ்மை மனப்பான் மையைக் கொண்டிருக்க வேண்டும் என்றும், ஒருவர் எப்படி இரட்சிக்கப்பட வேண்டும் என்றும் நமக்குப் போதிக்கிறது. ஞானஸ்நானம் இல்லாமல் ஒருவர் இரட்சிக்கப்படமுடியும் என்று போதிப்பவர்கள் ஒருவர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாமலே இரட்சிக்கப்பட முடியும் என்று போதிக்கிறார்கள்.

நிச்சயமாகவே, நம்முடைய கர்த்தர் கட்டளையிட்டபடியே சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவது அவசியமாயிருக்கிறது. இல்லையென்றால், கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமை யிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவோம் ( 2 தெச. 1 : 10 ). ஆகவே, சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாத ஒவ்வொருவரும் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து கர்த்தருடைய சபையிலே சேர்க்கப்பட்டு முடிவு பரியந்தம் அதிலே நிலைத்திருப்பீர்களாக! ✠

## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:10 மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 மணி |

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி


வேதாகம அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

தொடர்புக்கு : இயக்குனர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்

**E.Z.S. ராஜநாயகம் : 98427 30382**
**P.R. சுவாமி : 098440 70763**
**P.C. பிலேமோன் ராஜா: 9244204420**
**B. அர்ஜுனன் : 994435 58041**

## சத்திய வழி



- ❖ பேச்சாளர் : **சகோ. P.R. சுவாமி (ஊழியர்)**
- ❖ ரேடியோ : ஞாயிறு to வெள்ளி 5.30 p.m.
- ❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி


தொடர்புக்கு : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.
போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்




- ❖ பேச்சாளர் : **சகோ. B. அர்ஜுனன்**
- ❖ தமிழன் : திங்கள் காலை 6:00 மணி & சனி மாலை 6:15 – 6:30 மணி
- ❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்
- ❖ ரேடியோ : SW 25 & 41 M (சனி மாலை 5.30 5.45)

Srilanka all Asia Service



ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம் ;
கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.
திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை



- ❖ பேச்சாளர் : **சகோ. B. பிலேமோன் ராஜா**
- ❖ தமிழன்/நம்பிக்கை : ஞாயிறு காலை 6:45 & வெள்ளி காலை 6:15 மணி
- ❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
- ❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)
- ❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை
- ❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL
- ❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

தொடர்புக்கு : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.
செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## ‘ சத்தியத்தின் குரல் ‘ சந்தா விண்ணப்பம்

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( **4** இதழ்கள் ) (அ) ரூ. 200 ( **8** இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு என்னுடைய .................................................. முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ........................ காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.
(சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி


**E.Z.S. ராஜநாயகம்**

"சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**


பெயர் : ________________________________________

தெரு / ரோடு : ________________________________________

நகரம் : ______________________ பின் கோடு : ______________

மாநிலம் : ________________________________________